REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 பெப்ரவரி 18 வெள்ளிக்கிழமை

# தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 90 இல. 42 | Friday 18, February, 2022 | 24 பக்கங்கள் | 30/-

## டி.ஆர். விஜேவர்தனவின் 136 ஆவது ஜனன தினம்

**இன்றும் நாளையும் விசேட நிகழ்வுகள்**



லேக்ஹவுஸ் ஸ்தாபகர் அமரர் டி.ஆர் விஜேவர்தனவின் 136 ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு இன்றும் நாளையும் (18, 19) நிறுவன வளாகத்தில் வழிபாட்டு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. 06

## எரிபொருள் விலையை உடனடியாக அதிகரிக்கவும்

**அரசிடம் ஆளுநர் அஜித் கப்ரால் கோரிக்கை**



***லோரன்ஸ் செல்வநாயகம்***

எரிபொருள் விலைகளை அதிகரிக்க உடனடி நடவடிக்கை எடுக்குமாறு மத்திய வங்கி அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. அது தொடர்பில் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவிக்கையில்:

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தொடர்ச்சியாக நட்டம் ஈட்டும் நிறுவனமாக இயங்கி வருகிறது. தொடர்ந்தும் அதனை அவ்வாறு 06

## வெளிநாடு செல்வோருக்கு தேவைக்கேற்ப 4ஆவது டோஸ்

**Dr. அசேல குணவர்தன தெரிவிப்பு**

***லோரன்ஸ் செல்வநாயகம்***



வெளிநாடுகளுக்கு செல்பவர்களுக்கு கொரோனா வைரஸ் தடுப்புக்கான நான்காவது தடுப்பூசியை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார். 06

## 22-25 ஆம் திகதி வரை பாராளுமன்றம் கூடும்



பாராளுமன்றத்தை எதிர்வரும் 22 முதல் 25 ஆம் திகதி வரை கூட்டுவதற்கு நேற்று நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழு கூட்டத்தில் தீர்மானித்ததாக அவைத் தலைவர் கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

எதிர்வரும் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையன்று, உற்பத்திப் பொருள் தரகர்கள் உரிமச் சட்டத்தின் கீழ் ஒரு ஒழுங்குவிதிகள் மற்றும் இறப்பர் மீள் நடுகை 06

## 25 சுற்றுலா கிராமங்களை அமைக்க அரசு தீர்மானம்

**அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு**



இவ்வாண்டில் நாடளாவிய ரீதியில் 25 சுற்றுலா கிராமங்களை அமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவித்த சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, ஒவ்வொரு திட்டத்திற்கும் 10 மில்லியன் ரூபாய் செலவிடப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும், 2022ஆம் ஆண்டில் குறைந்தது 1.2 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை நாட்டிற்கு ஈர்க்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

**நாட்டின் தற்போதைய நிதி நிலைமையை கருத்திற்கொண்டு**

# தாதியர்களின் அங்கீகரிக்கப்பட்ட கோரிக்கைகளை நிறைவேற்றவும்

- மே மாத இறுதிக்குள் தாதியர் பல்கலையை ஆரம்பிக்கவும்
- முன்கூட்டியே பதவி உயர்வுகள்
- சீருடைக் கொடுப்பனவை வழங்க நடவடிக்கை

**சுகாதார தரப்பினருக்கு ஜனாதிபதி கோட்டாபய பணிப்பு**

**சம்பள முரண்பாடு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளையும் தீர்க்கவும் ஜனாதிபதி வேண்டுகோள்**

நாட்டின் தற்போதைய நிதி நிலைமையை கருத்திற்கொண்டு தாதியரின் அங்கீகரிக்கப்பட்ட கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார்.

அரச துறைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தாதியரின் கோரிக்கைகளை நிறைவேற்றுமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

சம்பள முரண்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்து கடந்த 09 நாட்களுக்கு முன் இந்த பணிப்புறக்கணிப்பு ஆரம்பிக்கப்பட்ட போதிலும், அமைச்சரவையில் முன்மொழியப்பட்ட யோசனையை சுகாதார அமைச்சர் சமர்ப்பித்ததையடுத்து 06





கித்துள் அபிவிருத்தி சபை ஏற்பாடு செய்திருந்த கித்துள் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சி நிகழ்வு நேற்றைய தினம் காலி அக்மீமன பிரதேசத்தில் நடைபெற்றது. அதன்போது கித்துள் உற்பத்திப் பொருட்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பார்வையிடுவதைப் படத்தில் காணலாம்.



ஐ.நா மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரில்

**ஆபிரிக்க நாடுகளின் ஆதரவை பெறும் முயற்சியில் இலங்கை**

சிறப்புத்தூதுவர் கணநாதன் பேச்சு நடத்துவதில் மும்முரம் 03

**அமைச்சர் டக்ளஸ் தலைமையில்**

## யாழ். மயிலிட்டி துறைமுகத்தின் 02 ஆம் கட்ட பணிகள் ஆரம்பம்

***யாழ். விசேட, யாழ். குறூப் நிருபர்கள்***



யாழ். மயிலிட்டி மீன்பிடி துறைமுகத்தின் இரண்டாம் கட்ட அபிவிருத்திப் பணிகளை நேற்று (17) கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆரம்பித்து வைத்தார். 06

**மின் பாவனையாளர்களால்**

## மின்சார சபைக்கு நிலுவை கட்டணமாக ரூ.50 பில்லியன்

**செலுத்த 03 மாத கால அவகாசம்**

***லோரன்ஸ் செல்வநாயகம்***

பாவனையாளர்களிடமிருந்து மின்சார சபைக்கு 5,000 கோடி ரூபா அறவிடப்பட வேண்டியுள்ளதாக பொது பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது. 06

**சமுதித்த வீட்டின் மீதான தாக்குதல்:**

## CCTV காணொளிகள் மூலம் தொடர்ந்து ஆய்வு

**ஒரு வாரகால பதிவுகள் பொலிஸாரிடம்**



சிரேஷ்ட ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்ரமவின் இல்லத்தின்மீது தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் சென்ற சிற்றூர்ந்து தொடர்பில் தகவல்களைப் பெறுவதற்காக அவரது, இல்லத்தில் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.ரீ.வி கெமராக்களின் காணொளிக் காட்சிகள் தொடர்ந்தும் ஆய்வுக்கு 06

## அமெரிக்க புதிய தூதுவர் இலங்கை வருகின்றார்

**அடுத்தவாரம் முதல் கடமைகள் ஆரம்பம்**



இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான அமெரிக்காவின் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள ஜூலி சுங் இந்த வார இறுதியில் இலங்கை வரவுள்ளார்.

அவர் தனது நற்சான்றிதழ்களை அடுத்த வாரம் வெள்ளிக்கிழமை அரசாங்கத்திடம் கையளிப்பார் என்று அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது. 06



வவுனியாவில் படுகொலை செய்யப்பட்ட

**மாணவி ஹரிஸ்ணவிக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை**

6 வருடங்களாகிவிட்டதென உறவுகள் கவலை 03



**சிறையில் கல்விகற்கும் ரஞ்சனுக்கு உதவிகள்**

சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய 03



**இரண்டு அரசியல் கட்சிகள் சின்னங்களை இழந்தன**

தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை 03

**விக்கல் வீராச்சாமி**



பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கச் சொல்லி கொழும்பிலயும் யாழ்ப்பாணத்திலயும் கையெழுத்து வேட்டை நடக்குது, ஏன் அண்ணே....

அதுதான் தம்பி, மார்ச் மாசம் வரப்போகுது, ஐநாவுக்கு படங்காட்டணும், அவ உப்பிடி செய்வினம் எண்டு நான் முதலில சொன்னேன்தானே...!!!

## அமைச்சர் விமலின் முகநூலுக்குள் ஊடுருவல்

**அரசை விமர்சித்து சில விசமிகள் செயல்**



கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ச தனது தனிப்பட்ட முகநூல் கணக்கு ஊடுருவப்பட்டு (ஹேக்) அரசாங்கத்தை விமர்சித்து சில பதிவுகள் இடப்பட்டுள்ளதாகவும், அவ்வாறான பதிவுகள் தொடர்பில் தமக்கு தொடர்பு எவுதும் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். 06

**SLFP யாழ். மாவட்ட மாநாடு:**

## மைத்திரிபால சிறிசேன 20 இல் யாழ். விஜயம்



ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன யாழ். மாவட்டத்துக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட மாநாடு எதிர்வரும் 20ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில், அவர் இந்த விஜயத்தை 06

## அமைச்சர் டளஸ் யாழ். விஜயம்

**அரசாங்க வெளியீட்டுப் பணியகம் அமைச்சரினால் இன்று திறப்பு**

***லோரன்ஸ் செல்வநாயகம்***



ஊடகத்துறை அமைச்சர் டளஸ் அழகப்பெரும நேற்று வடக்குக்கான விஜயமொன்றை மேற்கொண்டார்.

இந்த விஜயத்தின் போது அவர் யாழ். மாவட்டத்துக்கான 06

## கர்ப்பிணி தாய்மாருக்கு பூஸ்டர் வழங்க ஏற்பாடு

**Dr. பிரியங்கர ஜயவர்தன தெரிவிப்பு**



கர்ப்பிணி தாய்மார்களுக்கும் பூஸ்டர் டோஸ் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிசியோதெரபிஸ்ட் வைத்தியர் பிரியங்கர ஜயவர்தன தெரிவித்தார்.

பூஸ்டர் தடுப்பூசியை பெறுவதன் ஊடாக கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பிறக்கவிருக்கும் குழந்தைக்கும் பாதுகாப்பு கிடைக்கும் என அவர் சுட்டிக்காட்டுகிறார். 06

10 years of people friendly banking

THE ASIAN BANKER | ஏசியன் பாங்கர்

அமானா வங்கி
உலகின் சிறந்த 50 இஸ்லாமிய வங்கிகளில் ஒன்றாக தரப்படுத்தப்பட்டுள்ளது

உலகின் தலைசிறந்த 50 இஸ்லாமிய வங்கிகளில் ஒன்றாக தெரிவு செய்யப்பட்டு சர்வதேசத்தின் அதிஉன்னத கௌரவிப்பைப் பெற்றுள்ளது

உலகின் சிறந்த மற்றும் வளர்ந்து வரும் இஸ்லாமிய வங்கி
தெற்காசியாவின் சிறந்த இஸ்லாமிய வங்கி
இலங்கையில் வேகமாக வளரும் நுகர்வோர் வங்கி

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk
இது உங்கள் வங்கி
Amãna Bank
அமானா வங்கி (PLC) ஆனது இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அனுமதி பெற்ற ஒரு வர்த்தக வங்கி ஆகும் | ஃபிச் ரேட்டிங்: BB+ (lka) ஸ்திரமான நிலை

# சர்வதேச செய்திகள்

## பிரேசிலில் நிலச்சரிவு, வெள்ளத்தில் 100 பேர் உயிரிழப்பு: பலரும் மாயம்

பிரேசிலின் பெட்ரோபொலிஸ் நகரில் திடீர் வெள்ளம் மற்றும் நிலச்சரிவினால் 100 பேர் வரை உயிரிழந்துள்ளனர்.

ரியோ டி ஜெனிரோவின் வடக்கில் உள்ள மலைப்பிரதேசத்தில் அமைந்திருக்கும் இந்த நகரில் பெய்த கடும் மழையை அடுத்தே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

மலைப்பிரதேசத்தில் இருக்கும் வீடுகள் அழிந்திருப்பதோடு வெள்ளத்தால் வீதி நெடுகிலும் கார்கள் அடித்துச் செல்லப்பட்டன. சேற்று மண்ணை தோண்டி உயிர் தப்பியோரை மீட்புக் குழுவினர் தேடி வருகின்றனர்.

இந்த அனர்த்தங்களில் 94 பேர் உயிரிழந்திருப்பது உறுதி செய்யப்பட்டதாகவும் 24 பேர் உயிருடன் மீட்கப்பட்டதாகவும் பிரேசிலின் தேசிய சிவில் பாதுகாப்பு பிரிவு ட்விட்டரில் குறிப்பிட்டுள்ளது. பாரிய சேதங்கள் ஏற்பட்டிருப்பது மற்றும் வாகனங்கள் வெள்ள நீரில் அடித்துச் செல்லப்படும் வீடியோக்கள் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டுள்ளன. 'நிலைமை போர் சூழல் ஒன்றைப் போல் காணப்படுகிறது. கார்கள் கம்பங்களில் தொங்குகின்றன, கார்கள் தலைகுப்புற காணப்படுகின்றன. அதிக சேறுகள் மற்றும் நீர் தொடர்ந்து தேங்கியுள்ளன' என்று ரியோ டி ஜெனிரோ ஆளுநர் கிளவுடியோ காஸ்ட்ரோ செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.



35 பேர் காணாமல்போயிருப்பதாக குறிப்பிட்ட அவர் தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகள் இடைவிடாது இடம்பெறுவதாக தெரிவித்தார்.

ரியோ டி ஜெனிரோவுக்கு மேலாக உள்ள பெட்ரோபொலிஸ் நகர் சுற்றுலாத் தலம் ஒன்றாக உள்ளது. 19ஆம் நூற்றாண்டில் மன்னர்களின் கோடைகால விடுமுறைத் தலமாகவும் இது இருந்து வந்தது.

இங்கு மூன்று மணி நேரத்திற்கு ஒரு மாதத்திற்கான மழை கொட்டித் தீர்ந்ததை அடுத்து பயங்கர வெள்ளம் ஏற்பட்டு வீடுகள் மற்றும் கடைகளை மூழ்கடித்தது. இங்கு மோசமாக பாதிக்கப்பட்ட பகுதியில் 80 வீடுகள் வரை நிலச்சரிவில் சிக்கியுள்ளன.

'அதிக வீரியத்துடன் நீர் வேகமாக வந்தது. ஏற்கனவே பெருந்தொற்றால் பாதிக்கப்பட்ட நான் 100 வீத இழப்பை சந்தித்துள்ளேன்' என்று கடை உரிமையாளர் ஒருவர் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார்.

சுமார் 300 பேர் பாடசாலைகள் மற்றும் தற்காலிக முகாம்களில் அடைக்கலம் பெற்றுள்ளனர். உணவு, உடை, முகக்கவசம் மற்றும் படுக்கை ஆகிய உதவிகளை தொண்டு நிறுவனங்கள் கோரியுள்ளன.

## ஆஸ்திரியா, ஜெர்மனியில் கொவிட் கட்டுப்பாடு தளர்வு



கொவிட்–19 தொற்றுக்கு எதிரான கட்டுப்பாடுகளை தளர்த்தும் அறிவிப்பை ஆஸ்திரியா மற்றும் ஜெர்மன் நாடுகள் வெளியிட்டுள்ளன. தொற்றை கட்டுப்படுத்த கட்டாய தடுப்பூசி திட்டத்தை அமுல்படுத்தி சில வாரங்களிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசி பெறாதவர்கள் தொடர்ந்து கட்டுப்பாடுகளுக்கு முகம்கொடுக்கும் நிலையில் வரும் மார்ச் 20 ஆம் திகதி விடுதலை தினமாக ஜெர்மனி அறிவித்திருப்பதோடு வரும் மார்ச் 5 ஆம் திகதி பெரும்பாலான கட்டுப்பாடுகள் கைவிடப்படும் என்று ஆஸ்திரியா குறிப்பிட்டுள்ளது.

வேகமாகப் பரவக்கூடிய ஒமிக்ரோன் கொரோனா வைரஸ் திரிபு, மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவோர் பற்றிய அச்சத்தை ஏற்படுத்தாத நிலையில் ஐரோப்பாவில் கொரோனா கட்டுப்பாடுகள் தொடர்ந்து தளர்த்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதன்படி ஜெர்மனியில் வீட்டில் இருந்து வேலை புரிவது போன்ற அனைத்து பிரதான கட்டுப்பாடுகளும் மார்ச் 20 ஆம் திகதி ரத்துச் செய்யப்படவுள்ளது. எனினும் சமூக இடைவெளி மற்றும் உட்புறங்கள் மற்றும் பொதுப் போக்குவரத்துகளில் முகக்கவசம் அணியும் கட்டுப்பாடுகள் தொடர்ந்து நீடிக்கும்.

## மாலி நாட்டில் இருந்து பிரான்ஸ் படை வாபஸ்



மாலியில் இருந்து கிட்டத்தட்ட ஒரு தசாப்தத்திற்கு பின் படைகளை வாபஸ் பெறும் அறிவிப்பை பிரான்ஸ் மற்றும் அதன் ஐரோப்பிய கூட்டுப்படை அறிவித்துள்ளது.

அந்த நாட்டில் இஸ்லாமிய போராளிகளுக்கு எதிராக சண்டையிட்ட படையினர் வாபஸ் பெறப்படுவதாக பிரான்ஸ் ஜனாதிபதி எம்மானுவேல் மெக்ரோன் தெரிவித்துள்ளார். இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவு முறிந்ததை அடுத்தே அவர் இந்த முடிவை எடுத்துள்ளார்.

வாபஸ் பெறப்படும் படையினர் ஆபிரிக்காவின் சஹெல் பிராந்தியத்தில் நிலைநிறுத்தப்படவுள்ளனர்.

## 2019இல் கடத்தப்பட்ட சிறுமி உயிருடன் மீட்பு



2019 ஆம் ஆண்டு காணாமல்போன சிறுமி ஒருவர் படிக்கட்டுக்குக் கீழ் இருக்கும் இரகசிய அறை ஒன்றில் இருந்து உயிருடன் மீட்கப்பட்டதாக அமெரிக்காவின் நியூயோர்க் மாநில பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தற்போது ஆறு வயதாகும் பெயிஸ்லீ சல்டிஸ் என்ற அந்த சிறுமி சொகர்டிஸ் என்ற சிறு நகரில் இருக்கும் வீடு ஒன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்திய தேடுதலின்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

அவர் நல்ல உடல்நிலையுடன் இருப்பதாகவும் அவரது சட்டபூர்வ காவலர் மற்றும் மூத்த சகோதரியிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பெயிஸ்லீயின் சொந்த பெற்றோர் அவர் மற்றும் மூத்த சகோதரி பிரியருக்கான பாதுகாவலர் உரிமையை இழந்ததே அவர் கடத்தப்பட்டதன் பின்னணியில் இருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் சொந்தப் பெற்றோர்கள் மற்றும் சிறுமி மறைத்து வைக்கப்பட்டிருந்த வீட்டு உரிமையாளர் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## திருமண நிகழ்வில் கிணற்றில் விழுந்து 13 பேர் உயிரிழப்பு



வட இந்திய மாநிலமான உத்தரபிரதேசத்தில் திருமண வைபவம் ஒன்றின்போது கிணற்றில் விழுந்து குறைந்தது 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

கிணற்றுக்கு மேலால் போடப்பட்டிருந்த உலோகப் பலகையில் அமர்ந்திருந்த பெண் மற்றும் சிறுவர்கள் பாரம் தாங்காமல் அந்தப் பலகை உடைந்து விழுந்ததாலேயே பலியாகி இருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குஷிநகர் மாவட்டத்தில் இடம்பெற்ற இந்த விபத்தில் மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

மணமகன் மற்றும் மணமகளின் முகத்தில் மஞ்சள் பூசும் பாரம்பரியமான 'ஹால்தி' நிகழ்வின்போது கடந்த புதன்கிழமை மாலை இந்த சோகச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தப் பலகை உடைந்து விழுந்ததை அடுத்து அங்கிருந்தோர் கிணற்றில் விழுந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றுள்ளனர். எனினும் அவர்களில் 11 பேர் சம்பவ இடத்தில் மரணித்திருப்பதோடு மேலும் இருவர் பின்னர் உயிரிழந்திருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## போதைப்பொருள் கடத்தலுக்கு எதிராகக் கூட்டு நடவடிக்கை



ஆப்கானிஸ்தானிலிருந்து கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான் மற்றும் ரஷ்ய எல்லைக்குள் போதைப்பொருள் கடத்தப்படக்கூடிய தீவிர அச்சுறுத்தல் நிலவி வருவதால், அதனைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்த அமைப்பு முன்னெடுத்துள்ளதாக ரஷ்யாவின் வெளிவிவகார அமைச்சு திணைக்களப் பணிப்பாளர் அலக்ஸாண்டர் ஸ்டேர்னிக் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், இந்நாடுகளுக்கு போதைப்பொருள் கடத்தப்படுவதற்கான அச்சுறுத்தல் முற்றிலும் உண்மையானது. இதன் விளைவாக தஜிகிஸ்தான் மற்றும் ஆப்கான் எல்லையில் ஏற்படக்கூடிய பதற்றத்தைக் குறைக்கும் வகையில் இக்கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்த அமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதன் நிமித்தம் கிர்கிஸ்தானிலுள்ள கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்த அமைப்பின் படையினரது கூட்டுப் பயிற்சிகள் ஒருங்கிணைந்த தளத்தில் இடம்பெற்று வருகின்றன' என்று குறிப்பிட்டுள்ளார்.

போதைப்பொருள் கடத்தப்படும் அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் தஜிகிஸ்தானிலுள்ள ரஷ்யாவின் 201 ஆவது இராணுவ தளத்தின் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

## 'ரஷ்ய படைகள் பின்வாங்கவில்லை' அமெரிக்கா அறிவிப்பு



உக்ரைன் எல்லையில் நிறுத்தப்பட்டிருந்த ரஷ்ய இராணுவ வீரர்கள் சிலர் முகாமிற்கு திரும்பியதற்கான ஆதாரங்கள் இல்லை என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

உக்ரைன் மீது எந்நேரமும் ரஷ்யா போர் தொடுக்கலாம் என்ற ரீதியில் சர்வதேச ஊடகங்கள் பரபரப்பு செய்திகளை வெளியிட்டு வரும் நிலையில், உக்ரைன் எல்லையில் நிறுத்தப்பட்டிருந்த இராணுவ வீரர்கள் சிலர் முகாமிற்கு திரும்பியதாக ரஷ்யா கடந்த செவ்வாய்க்கிழமை செய்தி வெளியிட்டது.

இந்த நிலையில், இந்த தகவலை அமெரிக்க தரப்பு மறுத்துள்ளது. ரஷ்யா படைகளை பின்வாங்கவில்லை என்றும் போர் மூளும் அபாயம் உள்ளதாகவும் அமெரிக்கா குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது.

இது குறித்து அமெரிக்க வெளியுறவு செயலாளர் அண்டனி பிளிங்கன் கூறுகையில், 'உக்ரைன் எல்லையில் நிறுத்தப்பட்டிருந்த இராணுவ வீரர்கள் சிலர் முகாமிற்கு திரும்பியதற்கான ஆதாரங்கள் இல்லை.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் எப்போது வேண்டுமானாலும் போர் தொடுக்கலாம். அதற்கான படைகளை உக்ரைன் எல்லையில் ரஷ்யா தயார் நிலையிலேயே வைத்துள்ளது. அமெரிக்கா எந்த சூழ்நிலையையும் எதிர்கொள்ள தயாராக உள்ளது' என தெரிவித்தார்.

இதேவேளை, ரஷ்ய படைகள் உக்ரைன் எல்லையில் இருந்து திரும்புவது உறுதிபடுத்தப்படவில்லை என நேட்டோ பொதுச்செயலாளர் ஜென்ஸ் ஸ்டோல்டன்பெர்க் தெரிவித்துள்ளார்.

பிரஸ்சல் நகரில் உள்ள நேட்டோ கூட்டணி அமைப்பு நாடுகளின் தலைமை அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் அவர் தெரிவிக்கையில்:

ரஷ்ய படைகள் திரும்பப் பெறப்படுகிறதா என்பதைப் பார்க்க வேண்டும். நாங்கள் பார்ப்பது என்னவென்றால், அவர்கள் துருப்புக்களின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளனர், மேலும் துருப்புக்கள் வரவுள்ளன.

அவர்கள் உண்மையிலேயே படைகளைத் திரும்பப் பெறத் தொடங்கினால், அதை நாங்கள் வரவேற்போம். அவர்கள் எப்போதும் படைகளை முன்னும் பின்னுமாக நகர்த்திக் கொண்டிருப்பதால், படைகள், போர் டேங்கிகள் நகர்வுகளைப் பார்க்கிறோம்.

உண்மையான வெளியேற்றத்தை உறுதிப்படுத்தவில்லை. இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

## குவைட் பெண்கள் துப்பாக்கி இன்றி போர் புரிய அனுமதி



குவைட்டில் இராணுவப் பெண்கள் போர் நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதி அளிக்கப்பட்டபோதும் அவர்கள் ஆயுதம் ஏந்துவதற்கு தடை விதித்திருப்பதோடு, ஆண் பாதுகாவலர் ஒருவரின் அனுமதி கோரப்பட்டுள்ளது.

இந்த முடிவுக்கு குவைட் பெண்கள் கோபத்தை வெளியிட்டுள்ளனர். இது 'ஒரு படி முன்னேறி இரு படி பின்வங்கிய' செயல் என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பாதுகாப்பு படையில் இருக்கும் பெண்கள் சிவிலியன்கள் போலன்று, தமது தலையை மறைக்க வேண்டும் என்றும் பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டிருக்கும் அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

வளைகுடாவில் அதிக மிதவாத போக்குக் கொண்ட நாடாக கருதப்படும் குவைட்டின் இந்த முடிவு பற்றி இணையதளத்திலும் கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

'பெண்கள் பலவீனமானவர்கள் என்று எந்த அடிப்படையில் அவர்கள் பார்க்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை' என விளையாட்டு ஆசிரியையான கதீர் அல் கஷ்டி என்பவர் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

## கொவிட் தொற்று: ஹொங்கொங் மருத்துவமனைகளில் நெருக்கடி

கொரோனா தொற்று சம்பவங்கள் பெரும் அளவு அதிகரித்திருப்பதன் காரணமாக ஹொங்கொங்கில் மருத்துவ கட்டமைப்பு நெருக்கடிக்கு முகம்கொடுத்திருப்பதோடு தொற்றாளர்கள் நிரம்பிய நிலையில் மருத்துவமனைகளுக்கு வெளியில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

ஒமிக்ரோன் திரிபினால் அதிகரித்திருக்கும் நோய்த் தொற்றின் ஐந்தாவது அலையை கையாள்வதற்கு போராடி வருவதாக அரசு ஒப்புக்கொண்டுள்ளது. எனினும் அந்த நகரில் முடக்கநிலையை கொண்டுவரும் திட்டம் இல்லை என கூறப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை சாதனை எண்ணிக்கையாக 4,285 புதிய தொற்று சம்பவங்கள் பதிவாகி உள்ளன.



மருத்துவமனை அனுமதிக்காக 10,000க்கும் அதிகமானவர்கள் காத்திருக்கும் நிலையில் தினசரி தொற்று 28,000ஐ எட்டும் என்று நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். கடந்த 24 மணி நேரத்திற்குள் மூன்று வயது சிறுமி உட்பட வைரஸினால் ஒன்பது பேர் உயிரிழந்துள்ளனர்.

உள்ளூர் தலைவர்கள் அவசியமான நடவடிக்கைகளை எடுக்கும்படி சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் வலியுறுத்தியுள்ளார்.

## ஆஸி: ஆடவரை கொன்ற சுறாவைத் தேடி வேட்டை



ஆடவர் ஒருவரை கொன்ற வெள்ளை சுறா ஒன்றை பிடிக்க அவுஸ்திரேலிய நிர்வாகம் தேடுதல் வேட்டை ஒன்றை ஆரம்பித்துள்ளது. சிட்னியில் கடந்த 59 ஆண்டுகளில் முதல் முறையாகவே சுறா தாக்கி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து சிட்னி நகரில் பெரும்பாலான கடற்கரைகள் நேற்று மூடப்பட்டிருந்தன.

கிழக்கு சிட்னியின் லிட்டில் பே கடற்கரைக்கு அப்பால் வெள்ளை சுறா ஒன்றினால் ஆடவர் உடல் சிதைக்கப்பட்டு கொல்லப்பட்டதாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். அந்த ஆடவரின் அடையாளம் இன்னும் வெளியிடப்படவில்லை. அவர் கொந்தளிப்பான கடல்பகுதியில் நீந்திக்கொண்டிருந்தபோதே தாக்கப்பட்டுள்ளார்.

நகரின் கிழக்கு தொடக்கம் தெற்கு வரையான கடற்பகுதியில் உயர்காப்பாளர்கள் ரோந்து சென்று தேடுதலில் ஈடுபட்டு வருவதோடு, அந்த சுறாவை பிடிக்க ஹொலிகொப்டர்கள் மற்றும் ஆளில்லா விமானங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

சம்பவம் குறித்த வீடியோக்களை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் அந்த சுறா குறைந்தது மூன்று அடி நீளம் கொண்டது என்று மாநில அரசு குறிப்பிட்டுள்ளது.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 பெப்ரவரி 18 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN




**தொழுகை நேரம்**

18முதல் 24 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 05.11 |
| லுஹர் | 12.26 |
| அஸர் | 03.47 |
| மஃரிப் | 06.22 |
| இஷா | 07.33 |

**இன்றைய சுபதினம்**

பிலவ வருடம் மாசி 6

ராகுகாலம் : பகல் : 10.30 - 12.00வரை
சுபநேரம் : காலை : 09.00 - 10.30வரை

யோகம்: சித்தயோகம்

திதி: துவிதியை

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | சுகம் |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | செலவு |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | வெற்றி |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | மறதி |
| மீனம் | முயற்சி |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

# ஜனாதிபதி தலைமையில் கங்காராம நவம் மஹா பெரஹர ஆரம்பம்



கொழும்பு , கங்காராம விஹாரையின் 43ஆவது நவம் மஹா பெரஹர உற்சவம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் (16) இரவு நடைபெற்றது. வணக்கத்துக்குரிய கலபொட ஞானிஸ்ஸர தேரரின் அனுசாசனைக்கமைய, கங்காராம விஹாராதிகாரி கலாநிதி வணக்கத்துக்குரிய கிரிந்தே அஸ்ஸஜி தேரரின் மேற்பார்வையின் கீழ், இந்த பெரஹர உற்சவம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

உற்சவத்துக்கு வருகை தந்திருந்தவர்களுக்கான பஞ்சசீல போதனைகள் மற்றும் சிறு அனுசாசனையை, மல்வத்துபீடத்தின் அனுநாயக்கர் அதிவணக்கத்துக்குரிய திம்புல் கும்புரே விமலதம்ம தேரர் நடத்தினார். புனித சதாதுக்க பேழையை, உற்சவத்துக்குத் தலைமை தாங்கியிருக்கும் மங்களயானை மீது வைக்கும் நிகழ்வு, ஜனாதிபதியினால் முன்னெடுக்கப்பட்டது. கண்டி, தெற்கு மற்றும் சப்ரகமுவ கலாசாரங்களுக்கேற்ற நடனங்கள் மற்றும் யானைகளின் ஊர்வலங்களுடன், பெரஹர உற்சவம் கோலாகலமாக நடைபெற்றது. விஹாரையின் போதி மரத்தைச் சுற்றிப் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தங்கவேலியைத் திறந்துவைத்தல், விஹாரைக்கு முன்னால் காணப்பட்ட காணியை இலவசமானிய உரிமம் மூலம் கங்காராம

06

பயங்கரவாத தடைச்சட்ட ஒழிப்பு

# மனுவில் கையெழுத்திட்டார் பேராயர் மல்கம் ரஞ்சித்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பயங்கரவாத தடைச்சட்டத்தை இல்லாதொழிக்கக் கோரும் மனுவில் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையும் கையெழுத்திட்டுள்ளார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை உடனடியாக நீக்குமாறு கோரி அரசாங்கத்தை வலியுறுத்தும் வகையில் பொதுமக்களின் கையெழுத்துகளைப் பெற்றுக்கொள்ளும் நாடளாவிய செயற்திட்டமொன்றை தமிழ் தேசியக்கூட்டமைப்பு மேற்கொண்டுள்ளது. நாட்டின் அனைத்து இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் சிவில் மற்றும் அரசியல் சக்திகளின் ஒத்துழைப்புடன் இந்த செயற்றிட்டம்

06

# தமிழக முதலமைச்சரை யாழ்.அழைத்து மீனவர் பிரச்சினையை தீருங்கள்

**சாவகச்சேரி விசேட நிருபர்**



தமிழ்நாடு முதலமைச்சரை யாழ்ப்பாணத்திற்கு அழைத்து எமது மீனவர் பிரச்சினையை தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தவிடம் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கோரிக்கை விடுத்தார்.

நேற்று 17 ஆம் திகதி வியாழக்கிழமை மயிலிட்டி துறைமுக இரண்டாம் கட்ட விரிவாக்கல் செயற்பாட்டின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்;

எமது கடற்றொழிலாளர்கள் தொழில்நுட்ப ரீதியாக முன்னேற்றமடைந்துள்ளதால் கடற்தொழிலில் ஈடுபடுவதற்குரிய வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இரண்டு வாரங்களுக்கு முன்னர் எமது மீனவர் வாழ்வில் பாரிய துயரச் சம்பவம் ஒன்று நேர்ந்திருந்தது. நீண்ட அனுபவம் வாய்ந்த பொருத்தமான அமைச்சராக டக்ளஸ் தேவானந்தா விளங்குகிறார்.

06

# மயிலிட்டி துறைமுகத்தின் பெருமை மீட்டெடுக்கப்படும்

## புனரமைப்பு பணிகளை ஆரம்பித்துவைத்து டக்ளஸ் உறுதி



இலங்கையின் வரலாற்று முக்கியத்துவமிக்கதாகவும் வடபகுதி கடற்றொழிலாளர்களின் பொருளாதார கேந்திரமாகவும் விளங்கிய மயிலிட்டி துறைமுகத்தை மீண்டும் அதே பெருமையுடன் செயற்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மயிலிட்டி துறைமுகத்தின் இரண்டாம் கட்ட அபிவிருத்திப் பணிக்கான அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று (17) நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து புனரமைப்பு பணிகளை அங்குரார்ப்பனம் செய்து வைத்தபின் உரையாற்றுகையிலேயே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்

"இலங்கையின் முதன்மையான துறைமுகமான இந்த துறைமுகம் இலங்கையின் மின்பிடியில் மூன்றில் ஒரு பங்கை வகிக்கிறது.

ஆனாலும் கடந்தகாலத்தில் நாட்டில் நடைபெற்ற வன்முறை, அழிவு யுத்தம் காரணமாக துரதிஸ்டவசமாக அதில் பாரிய பின்னடைவை சந்திக்க நேரிட்டது.ஆனாலும் அந்த பாதிப்பிலிருந்து இந்த துறைமுகத்தை மீட்டெடுக்கும் முகமாகவே அதன் அபிவிருத்திக்கான இரண்டாம் கட்ட பணிகளை ஆரம்பித்துள்ளோம்.

இதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் எம்மை வழிநடத்திக் கொண்டிருக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் விசேடமாக நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோருக்கு எமது மக்கள் சார்பாக நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த மயிலிட்டி துறைமுகத்தை மட்டுமல்லாது வடக்கில்

06

# இரண்டு அரசியல் கட்சிகள் சின்னங்களை இழந்தன

தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை




அரசியல் கட்சிகளுக்கு ஒதுக்கப்படாத சின்னங்களின் பட்டியலில் இருந்து இரண்டு சின்னங்கள் நீக்கப்பட்டுள்ளன.

மேற்படி பட்டியலில் இருந்து கிரீடம் மற்றும் விவசாயி ஆகிய சின்னங்கள் நீக்கப்பட்டுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு வர்த்தமானி மூலம் அறிவித்துள்ளது.

இரண்டு சின்னங்களும் தேசிய சின்னங்களுக்கு ஒத்ததாக இருப்பதால்

06

# சிறையில் கல்வி கற்கும் ரஞ்சனுக்கு உதவிகள்



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் பிரபல நடிகருமான ரஞ்சன் இராமநாயக்க வெலிக்கடை சிறைச்சாலையில் நிம்மதியாக கல்வி கற்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் பதுளை சிறைச்சாலைக்கு விஜயம் செய்தார்.

அங்கு நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர், ரஞ்சன் இராமநாயக்கவுக்கு கல்வியைத் தொடர்வதற்கான

06

ஐ.நா மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரில்

# ஆபிரிக்க நாடுகளின் ஆதரவை பெறும் முயற்சியில் இலங்கை

## சிறப்புத்தூதுவர் கணநாதன் பேச்சு நடத்துவதில் மும்முரம்



இம்மாத இறுதியில் கூடவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடருக்கு முன்னர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் ஆபிரிக்க நாடுகளின் ஒத்துழைப்பை இலங்கை பெற்றுக்கொள்ளும் முயற்சியில் ஆபிரிக்க கண்டத்தில் இருபது நாடுகளுக்கான உயர் ஸ்தானிகரும், ஆபிரிக்காவிற்கான இலங்கை பிரதமரின் சிறப்பு தூதுவருமான வேலுப்பிள்ளை கணநாதன் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்பொழுதும் அதற்கான ஆரம்ப பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளதாகவும், மார்ச் மாதம் 3 ஆம் திகதிக்கு முன்னர் சகல ஆபிரிக்க நாடுகளின் பிரதிநிதிகளுடன் பரந்த அளவிலான பேச்சுவார்த்தைகளை நடத்த ஏற்பாடுகள் செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் 49 ஆவது கூட்டத்தொடர் இம்மாதம் 28 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் எதிர்வரும் மார்ச் மாதம் 2ஆம், 3ஆம் திகதிகளில் இலங்கை குறித்த விடயங்கள் விவாதிக்கப்படவுள்ளன.

இம்முறை ஜெனிவா கூட்டத்தொடரில் இலங்கை குறித்த கடுமையான அறிக்கையொன்று ஐ.நா மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் மூலமாக முன்வைக்கப்படும் என தெரிவிக்கப்படுவதுடன், இலங்கையும் தமது பக்க அறிக்கை ஒன்றினை சமர்பிக்கும் விதமாக அதற்கான பணிகளில் ஈடுபட்டு வருகின்றது.

இந்நிலையில், சர்வதேச நாடுகளின் ஆதரவை பெற்றுக்கொள்ளும் விதமாக இலங்கை அரசாங்கம் பல்வேறு வேலைத்திட்டங்களை மும்முரமாக முன்னெடுத்து வருகின்றது.

அதற்கமைய ஆபிரிக்க நாடுகளின் ஆதரவை

06

# ஜனாதிபதியின் மேலதிக செயலராக சட்டத்தரணி சமிந்த நியமனம்



பிரதமரின் மேலதிக செயலாளராக பணியாற்றிய சட்டத்தரணி சமிந்த குலரத்ன, ஜனாதிபதியின் மேலதிக செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆளும் தரப்பு பிரதான அமைப்பாளரின் செயலாளராகவும் பணியாற்றியுள்ள இவர் தேசிய மற்றும் சர்வதேச நிர்வாக, இராஜதந்திர அனுபவங்கள் கொண்டவராவார்.

ருவன்வெல்ல இராஜசிங்க மத்திய மகா வித்தியாலய பழைய மாணவரான இவர் உச்சநீதிமன்ற சட்டத்தரணி மற்றும் சட்டப் பட்டதாரியாவார். இவர் கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் பர்கிங்ஹாம் பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவ மற்றும் நிர்வாகம் தொடர்பான பட்டதாரி என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்னர் ஜனாதிபதி உதவிச் செயலாளர், ஜனாதிபதி சிரேஷ்ட உதவிச் செயலாளர், எதிர்க்கட்சி மேலதிக செயலாளர், பிரித்தானிய இலங்கை தூதரக அமைச்சின் ஆலோசகர் போன்ற பல பதவிகளை வகித்துள்ள இவர், 20 வருடத்துக்கும் அதிக அனுபவம் உள்ளவராவார். அவர் லண்டனிலுள்ள தூதரக சேவை சங்க உப தலைவராக நியமிக்கப்பட்ட முதலாவது தென்ஆசிய நாட்டவரென்பதும் குறிப்பிடத்தக்கது. (பா)

# ஜூட் கிருஷாந்த அடிகளாரிடம் வாக்குமூலம் பதிவு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

கொழும்பு உயர் மறைமாவட்ட சமூக தொடர்பாடல் பிரிவின் பணிப்பாளர் ஜூட் கிருசாந்த அடிகளாரிடம் குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களம் நேற்று மூன்று மணித்தியாலயம் வாக்குமூலமொன்றைப் பெற்றுக்கொண்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவங்களை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொறுப்பேற்கவேண்டும் என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்திருந்த நிலையில் அதுதொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என ஜூட் கிருஷாந்த அடிகளார் குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களத்தில் முறைப்பாடொன்றை தாக்கல் செய்திருந்தார். அதற்கிணங்க வாக்குமூலமொன்றைப்

06

வவுனியாவில் படுகொலை செய்யப்பட்ட

# மாணவி ஹரிஸ்ணவிக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை

## 6 வருடங்களாகிவிட்டதாக உறவுகள் கவலை



வவுனியா பண்டாரிக்குளம் பகுதியில் மாணவி ஹரிஸ்ணவி படுகொலை செய்யப்பட்டு ஆறு வருடங்களாகியும் இதுவரை நீதி கிடைக்கவில்லையென உறவினர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

வவுனியா பண்டாரிக்குளம் உக்குளாங்குளம் பகுதியில் வீட்டில் தனிமையிலிருந்த 16 வயது பாடசாலை மாணவியான கெங்காதரன் ஹரிஸ்ணவி கடந்த 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி பாலியல் வல்லுறவிற்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்.

எனினும் கடந்த ஆறு வருடங்களாக இடம்பெற்று வரும் வழக்கு விசாரணைகளில் எவ்விதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை ஒவ்வொரு வழக்குகளும் தவணை இடப்பட்டு கடந்து செல்கின்றதே தவிர

06

# இலங்கை – இந்திய பக்தர்களுக்கு கச்சதீவு செல்ல அனுமதி இல்லை

**யாழ். விசேட நிருபர்**

கச்சதீவு திருவிழாவில் பங்கேற்க இலங்கை மற்றும் தமிழக யாத்திரிகர்களுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாதென கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, அருட்தந்தைகளின் பங்கேற்புடன் மாத்திரம் திருவிழாவை நடத்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

500 பக்தர்களை அனுமதிப்பதாக யாழ் மாவட்ட

06

# ஓமிக்ரோன் பாதிப்புக்குள்ளாகிய சிலருக்கு மீண்டும் தொற்று

## அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை



ஓமிக்ரோன் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மீண்டும் வைரஸ் தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் இருப்பதாக சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தின் பணிப்பாளர் விஷேட வைத்திய நிபுணர் ரஞ்சித் படுவந்துடாவ தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டில் அடையாளம் காணப்படுகின்ற அனைத்து கொவிட்19 தொற்றாளர்களும் ஓமிக்ரோன் வைரஸ் வகை திரிபினால் பாதிக்கப்பட்டவர்களென்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஓமிக்ரோன் தொற்று குறைந்த பாதிப்பை ஏற்படுத்தும் ஒரு நோயென்பது தவறான கருத்தாகும். இதனால் பாதிக்கப்பட்டவர்கள் கடுமையான நோய் தொற்றுக்குள்ளானவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஓமிக்ரோன் தொற்று காரணமாக தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் பலர் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் சிரேஷ்ட வைத்திய

06

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 141.83 | 147.84 |
| கனடியன் டொலர் | 153.64 | 159.49 |
| யூரோ | 223.85 | 232.67 |
| ஜப்பான் யென் | 1.7190 | 1.7840 |
| சிங்கப்பூர் டொலர் | 146.13 | 150.84 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 265.27 | 273.66 |
| சுவிஸ் பிராங்க் | 215.03 | 222.69 |
| அமெரிக்க டொலர் | 198.50 | 202.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹறின் டினார் | 533.10 | கட்டார் ரியால் | 55.20 |
| குவைத் டினார் | 664.02 | சவூதி ரியால் | 53.51 |
| ஓமான் ரியால் | 522.07 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 54.72 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் மாசி மாதம் 06ம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ரஜப் பிறை 16

**குறள் தரும் சிந்தனை**

அறிந்தாற்றிச் செய்கிற்பாற்கு அல்லால் வினைதான்
சிறந்தானென்று ஏவற்பாற் றன்று

ஆய்ந்தறிந்து செய்து முடிக்கும் ஆற்றல் உள்ளவர்களை அல்லாமல் வேறொருவரைச் சிறந்தவர் எனக் கருதி ஒரு செயலில் ஈடுபடுத்தக் கூடாது.

# மின்சாரத்தை பொறுப்புடன் பயன்படுத்த வேண்டிய காலம்

இலங்கையானது வழமை போன்று இவ்வருடமும் வரட்சிக் காலநிலையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. வருடா வருடம் மார்ச், ஏப்ரல் மாதங்களில் இலங்கைக்கு நேரே சூரியன் உச்சம் கொடுக்கும். இதே காலப்பகுதியில் இந்நாட்டில் வரட்சியும் நிலவக் கூடியதாக இருக்கும்.

இவ்வரட்சிக் காலநிலையின் விளைவாக நாட்டின் சில மாவட்டங்களில் தண்ணீருக்கு கூட தட்டுப்பாடு ஏற்படும். இதன் விளைவாக சில பிரதேசங்களில் வாழும் மக்கள் குடிநீரைப் பெற்றுக் கொள்வதற்கும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுப்பர்.

இவை இவ்வாறிருக்க, இந்நாட்டில் மின்னுற்பத்தி செய்யப்படும் பிரதான மூலங்களில் தண்ணீர் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. இந்நாட்டுக்குத் தேவையான மின்சாரத்தில் 20 வீதம் தண்ணீரைக் கொண்டுதான் உற்பத்தி செய்யப்படுகின்றது. அதனால் வரட்சிக் காலநிலை நிலவும் போது நீர் மின்னுற்பத்தியில் வருடாந்தம் தாக்கம் நிலவுவது வழமையாகும். இதன் விளைவாக மக்கள் மின்சாரத்தைப் பெற்றுக் கொள்வதில் வருடா வருடம் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வந்தனர். அந்த அசௌகரியங்களைத் தவிர்க்கும் வகையில் நிலக்கரி மற்றும் புதைபடிம எரிபொருளைக் கொண்டு மின்சாரத்தை உற்பத்தி செய்யும் நிலையங்கள் 2000 இற்குப் பின்னர் அமைக்கப்பட்டன. இதன் பயனாக வரட்சிக் காலநிலை நிலவும் காலப் பகுதியிலும் எவ்வித அசௌகரியங்களின்றி மக்கள் பெற்றுக்கொண்டனர். கடந்த சில வருடங்களாக நாட்டில் மின்சாரத்திற்கு எவ்வித தட்டுப்பாடும் ஏற்படவில்லை.

ஆனால் கொவிட் 19 தொற்றின் விளைவாக ஏற்பட்டுள்ள பொருளாதார சவாலினால் புதைபடிம எரிபொருள் நெருக்கடிக்கும் நாடு முகம் கொடுத்துள்ளது. இந்த சூழலில் வரட்சிக் காலநிலையினால் நீர் மின்னுற்பத்தி குறைவடையுமாயின் மின்சாரத்தைத் தொடராகப் பெற்றுக் கொள்வதில் மக்கள் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய நிலைமை ஏற்படலாம்.

தற்போதைய வரட்சிக் காலநிலையினால் மலைநாட்டிலுள்ள நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் குறைவடைந்து வருகின்றன. இதனை நீர் மின்னுற்பத்தித் துறை பொறியியலாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். குறிப்பாக 300 மெகா வார்ட் மின்சாரத்தை தேசிய மின் கட்டமைப்புக்கு வழங்கக் கூடிய காசல் ரீ நீர்த்தேக்கம் 155 அடிகள் உயரம் கொண்டது. அதன் நீர் மட்டம் தற்போது 188 அடிகள் வரையும் குறைவடைந்துள்ளது.

இதேபோன்று 120 அடிகள் உயரம் கொண்ட மௌசாக்கலை நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் 75 அடிகள் வரை தற்போது குறைவடைந்துள்ளது. இவ்வாறு மலைநாட்டிலுள்ள ஏனைய நீர் மின்னுற்பத்தி நீர்த்தேக்கங்களிலும் நீர் மட்டம் குறைவடைந்து வருகின்றன.

அதன் காரணத்தினால் கொவிட் 19 தொற்றினால் ஏற்பட்டுள்ள புதைபடிம எரிபொருள் நெருக்கடி, வரட்சிக் காலநிலையின் விளைவாக மின்னுற்பத்தியில் ஏற்படக்கூடிய வீழ்ச்சி என்பவற்றைக் கருத்தில் கொண்டு செயற்படுவது காலத்தின் அவசியத் தேவையாக உள்ளது. இந்த சூழலில் மின்சாரத்தை மிகவும் பொறுப்புடனும் உச்ச பயனைப் பெற்றுக் கொள்ளும் வகையிலும் பயன்படுத்த வேண்டும். மின்சாரம் வீண்விரயமாவதற்கு எந்த வகையிலும் இடமளிக்கப்படலாகாது. இதற்கான பொறுப்பும் கடமையும் மக்களுக்கு முன்பாக உள்ளது.

அதனால் வீடுகளிலும் ஏனைய கட்டடங்கள் உள்ளிட்ட பொது இடங்களிலும் அத்தியாவசியமான தேவைகளுக்காக மாத்திரம் மின்சாரத்தைப் பயன்படுத்துவதை ஒவ்வொருவரும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அநாவசியமான முறையில் பயன்படுத்தப்படும் மின்குமிழ்கள், காற்றாடிகள் உள்ளிட்ட மின் பாவனைப் பொருட்களின் பாவனையைத் தவிர்த்துக் கொள்வதில் கவனம் வேண்டும். பகல் வேளையில் அத்தியாவசியத் தேவைகளுக்கு மாத்திரம் மின்சாரத்தைப் பாவிப்பதிலும் கவனம் செலுத்தத் தவறக் கூடாது. வீடுகள், அலுவலகங்கள் உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் தேவையின் நிமித்தம் மின் குமிழ்கள், காற்றாடிகள் பயன்படுத்தப்பட்ட பின்னர் தேவை நிறைவுற்றதும் அவை உரிய நேர காலத்தில் அனைத்து விடப்பட வேண்டும்.

இவ்வாறான நடவடிக்கைகளின் ஊடாக மின்சாரம் வீண் விரயமாவதைத் தவிர்த்துக் கொள்ள முடியும். மின் பாவனைக் கட்டணத்தையும் குறைத்துக் கொள்ளலாம். அத்தோடு வரட்சிக் காலநிலை தீவிரமடையும் போது மின்சாரத்தைப் பெற்றுக் கொள்வதில் அதிக நெருக்கடிக்கு முகம் கொடுக்கவும் நேரிடாது. ஆகவே மின்சாரத்தை மிகவும் பொறுப்புடனும் முன்னவதானத்துடனும் ஒவ்வொருவரும் பயன்படுத்த வேண்டும். அது நாட்டுக்கும் மக்களுக்கும் அளிக்கும் பாரிய பங்களிப்பாக அமையும்.

editor.tkn@lakehouse.lk

# வடமத்திய மாகாணத்தில் மட்பாண்ட தொழிலுக்கு அரசாங்கம் ஊக்குவிப்பு



மட்பாண்டத் தொழிலுடன் தொடர்புடைய தொழிலாளர்களுக்கு புதிய உபகரணங்கள் வழங்கும் வேலைத்திட்டமொன்று வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் தலைமையில் அனுராதபுரம், திறப்பனை பிரதேச செயலகப் பகுதிக்குட்பட்ட பாரம்பரிய மட்பாண்ட கைத்தொழில் கிராமமான பண்டித ரம்பாவவில் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இங்கு குறைந்த வருமானமுடைய 41 பயனாளிகளுக்கு களிமண் அரைப்பான் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. 68 ஆயிரம் ரூபா பெறுமதிமிக்க 41 களிமண் அரைப்பான்களுக்கும் 27880.00 ரூபாவை வடமத்திய மாகாண கைத்தொழில் அமைச்சு செலவிட்டுள்ளது.

கைத்தொழிலாளர்கள் களிமண் அரைப்பான் இயந்திரத்தின் பெறுமதியில் 10 வீதத்தை பொறுப்பேற்றுள்ளனர். மாகாண கைத்தொழில் அமைச்சு 90 வீத பங்களிப்பை பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது.

பாரம்பரிய மட்பாண்ட கைத்தொழில் கிராமமான பண்டித ரம்பாவ கிராமத்தில் 200 குடும்பங்கள் வாழ்ந்து வருவதுடன் சகல குடும்பங்களும் மட்பாண்டத் தொழிலை ஜீவனோபாய தொழிலாக மேற்கொண்டு வருகின்றன. அவர்கள் அனைவருக்கும் இரண்டு மண் அரைப்பான் சாலைகளே அங்கு இருந்து வந்துள்ள நிலையில், அவர்கள் அனைவருக்கும் அவை போதாமல் உள்ளன. அவர்கள் அதற்கான களிமண்ணை வீட்டில் இருந்து மண் ஆலைகளுக்கு கொண்டு செல்வது வழக்கமாகும். அதனால் அவர்களுக்கு நேரவிரயம் ஏற்படுகின்றது. அத்துடன் இதற்காக பாரியளவிலான போக்குவரத்து செலவும் ஏற்படுகின்றது.



களிமண் அரைப்பான் வழங்கப்படுவதனால் தாமதம் மற்றும் மேலதிக போக்குவரத்து செலவு மீதப்படுத்தப்படுகின்றது. அதனால் அவர்கள் உற்பத்திகளை அதிகரித்துக் கொள்வதற்கு வாய்ப்பேற்பட்டுள்ளது. இதனால் உற்பத்தி செலவினத்தை குறைத்துக் கொள்ள முடிந்துள்ளதுடன், கூடுதலான உற்பத்திகளை மேற்கொள்வதன் மூலம் அவர்கள் தங்களது பொருளாதாரதுறையை மேம்படுத்திக் கொள்ள முடியும். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தேசிய கொள்கை திட்டத்திற்கமைய கிராமிய மட்டத்தில் மக்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும். மக்களின் கைத்தொழிலை மேம்படுத்துவதன் மூலம் அவர்களின் பொருளாதாரத்தை விரிவுபடுத்த முடியும். கூடுதலான புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, கூடுதலான உற்பத்திகளை மேற்கொள்வதே இத்திட்டத்தின் நோக்கமும் எதிர்பார்ப்புமாகும். இதனை முன்னிட்டே அவர்களுக்கு குறித்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் அவர்களின் உற்பத்திப் பொருட்களுக்கு நல்ல சந்தை வாய்ப்பு ஏற்படும் என்ற எதிர்பார்ப்புடன் இதற்காக நிதி வழங்கப்பட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**மதார் தம்பி ஆரிப்...**
(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

# திறன்மிக்க நிலையான இலங்கைக்காக CDB Advance Roof Solar திட்டம் அறிமுகம்

சிட்டிசன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பி.எல்.சி (CDB) சூழலுக்கு நட்பான வலு நிதி வழங்கல் பிரிவில் தனது புதிய நிலைபேறான முதலீட்டுத் தீர்வாக CDB Advance Roof Solar என்பதை அறிமுகம் செய்துள்ளது. இந்த புதிய தீர்வுடன், வாடிக்கையாளர்களுக்கு தமது வாழ்க்கையில் நிலைபேறான செயற்பாடுகளை பின்பற்றுவதை அதிகரிக்கும் இலக்குடன், அதிகளவு நிலைபேறான வழிமுறைக்கு மாறுவதற்கு ஊக்குவிக்கும் தனது முயற்சிகளை CDB துரிதப்படுத்தியுள்ளது.

CDB Advance Roof Solar இனால் வாடிக்கையாளர்களுக்கு இலகுவாக மதிநுட்பமான, சுயநிலைபேறான வலு மூலத்துக்கு மாறிக் கொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்படுவதுடன், மேலதிக வருமானத்துடன், எவ்விதமான மின்சாரக் கட்டணங்களையும் செலுத்த வேண்டிய தேவையும் இல்லாமல் செய்யப்படும். நவீன சூரிய மின்சக்தி தொழில்நுட்பம் மற்றும் விற்பனைக்கு பின்னரான பராமரிப்புடன், பரிபூரண நிதியளிப்பு வசதியை CDB இடமிருந்து பெற்றுக் கொள்வதனூடாக வாடிக்கையாளர்கள் பரிபூரண தீர்வைப் பெறுவதுடன், வருமானத்தை கண்காணிப்பதற்கான விசேட கட்டமைப்பை அணுகும் வசதியையும் பெறுவார்கள்.

மேலும், CDB Advance Roof Solar இனால் அதிகளவு மதிநுட்பமான மற்றும் சுயதன்னிறைவான வாழ்க்கை முறை ஊக்குவிக்கப்படுகின்றது. எளிமையான பொருத்துகை செயன்முறையுடன், உங்கள் வீட்டு வாயிலில் மாற்றியமைத்துக் கொள்ளக் கூடிய சேவையை பெற்றுக் கொடுப்பது இலக்காக அமைந்துள்ளது. விசேடமாக CDB Advance Roof Solar வாடிக்கையாளர்களுக்காக வடிவமைக்கப்பட்ட சௌகரியமான நிதி வழங்கல் தீர்வைப் பெற்றுக் கொள்வது தொடர்பான செயன்முறையை விளக்கமளிப்பதற்கு CDB இன் முறையாக பயிற்சிகளைப் பெற்ற அணி அங்கத்தவர்கள் தயாராக உள்ளனர்.

இந்தத் திட்டம் தொடர்பாக CDB இன் பிரதம நிதி அதிகாரி தமித் தென்னகோன் கருத்துத் தெரிவிக்கையில், "எமது நிலைபேறான நிகழ்ச்சி நிரலில் சமூக மற்றும் சூழல்சார் அம்சங்கள் அடங்கியுள்ளன. ரூ. 100 பில். சொத்துக்களைக் கொண்ட நிறுவனம் என்பதிலிருந்து, ட்ரில்லியனின் கால் பங்கு சொத்துக்களைப் படைத்த நிறுவனமாக மாறும் பயணத்தில், குறைந்தளவு காபன் வெளியீட்டை கொண்டிருப்பதற்கும் எமது காபன் நடுநிலை கொள்கையை தக்க வைத்துக் கொள்வதிலும் எம்மை அர்ப்பணித்துள்ளோம். சமூகத்தில் அதிகளவு தாக்கத்தை ஏற்படுத்தும் நிறுவனமாகத் திகழ்வதனூடாக, நிதிசார் உள்ளடக்கத்தை உறுதி செய்து, சூழலுக்கு நட்பான பொருளாதாரத்துக்கு நாம் தொடர்ந்தும் பங்களிப்பு வழங்குவோம்" என்றார்.




7ஆவது ஐக்கிய நாடுகள் நிலைபேறான அபிவிருத்தி இலக்கான 'தூய வலு' என்பதை எய்துவதற்கு உதவும் வகையில் நிறுவனத்தின் முயற்சிகள் அமைந்துள்ளன. 2030 ஆம் ஆண்டளவில் நாட்டின் வலுவில் 70 சதவீதமானவை புதுப்பிக்கத்தக்க வலு மூலங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படுவதற்கான அர்ப்பணிப்பில் CDB தன்னை ஈடுபடுத்தியுள்ளதுடன், CDB Roof Solar இனால் இந்த இலக்கு எய்தப்படுவதற்கு பங்களிப்பு வழங்கப்படும். இந்தத் திட்டத்தினூடாக தமது கூரைகளில் சூரிய மின் உற்பத்திக் கட்டமைப்புகளைப் பொருந்தியுள்ள தனிநபர்கள் மற்றும் வியாபாரங்களுக்கு, மேலதிகமாக பிறப்பிக்கும் மின்சாரத்தை பிரதான மின்வழங்கல் கட்டமைப்புக்கு விற்பனை செய்யும் வாய்ப்பு வழங்கப்படும். 2025 ஆம் ஆண்டளவில் 1000 Mw சூரிய வலுப் பிறப்பாக்கலை எய்துவதற்கு இந்தத் திட்டம் எதிர்பார்த்துள்ளது.

CDB Advance Roof Solar என்பது திறன்மிக்க நிலையான ஓர் இலங்கையை வலுவூட்டுவதில் கவனம் செலுத்தும் நிலைபேறான நிதியளிப்பை முன்னெடுத்துச் செல்லும் CDB இன் உயர்ந்த நடவடிக்கையாக அமைந்துள்ளது. நிலைபேறான வலு உற்பத்தி மற்றும் சூழலுக்கு நட்பான போக்குவரத்து தீர்வுகளுக்கு இது ஆதரவளிக்கின்றது. CDB Advance Roof Solar பற்றிய மேலதிக தகவல்களை அறிந்து கொள்வதற்கு www.cdb.lk எனும் இணையத்தளத்தைப் பார்க்கவும்.

பொதுப்பட்டியலிடப்பட்ட கூட்டாண்மை முன்னோடி நிறுவனமாக சிட்டிசன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பிஎல்சி (CDB) திகழ்வதுடன், இலங்கையில் இயங்கும் சிறந்த வங்கிசாரா நிதிச்சேவைகளை வழங்கும் ஐந்து மாபெரும் நிறுவனங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது. நாடளாவிய ரீதியில் பிரசன்னத்தைக் கொண்டுள்ளதுடன், நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படும் முறையில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தும், நவீன தொழில்நுட்ப வசதிகளைக் கொண்டு இயங்குகின்றது. மேலதிக தகவல்களுக்கு www.cdb.lk எனும் இணையத்தளத்தைப் பார்க்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பில் முன்னேற்றப் பாதையில் பயணிக்கும் வர்த்தக சினிமா தயாரிப்பு

சினிமா என்பது இன்று மிகப் பெரிய முதலீட்டுடன் கோடிக்கணக்கில் பணம் சம்பாதிக்கும் உலகளாவிய வியாபாரமாக தோற்றம் பெற்றுள்ளது. இலங்கையில் அதிலும் குறிப்பாக தமிழ்த் திரையுலகில் பெரும் ஆதிக்கம் செலுத்துபவை இந்திய தமிழ் சினிமாக்களாகும். இலங்கையின் சினிமா வர்த்தக ரீதியில் குறிப்பிடத்தக்க அளவிற்கு வளராமல் போனதற்கு இங்கு இடம்பெற்ற அசாதாரன சூழ்நிலைகளே பிரதான காரணம். இன்றைய சூழலில் எம்மத்தியில் இருக்கும் பல்வேறு சவால்களைப் புரிந்து கொண்டு அதற்கான மாற்று உத்திகளை வகுத்து அதனூடாக எமது சினிமாவை வளர்ப்பதே பொருத்தமாக இருக்கும்.




வர்த்தரீதியிலான சினிமாக்களை தயாரிப்பதற்கு எமக்கு முன்னால் உள்ள பிரதான சவால்களாக நவீன தொழில்நுட்பங்களைப் பெற்றுக் கொள்வதும், அதனைக் கையாள்வதற்கான அனுபவமிக்க கலைஞர்களை உருவாக்குவதும், முழு நீளத் திரைப்படங்களை உருவாக்க எடுக்கும் நீண்ட காலம், பெரும் பொருட்செலவு என்பன உள்ளன. இவை தவிர இந்தியத் திரைப்படங்களின் பெரும் ஆளுமைக்கு மத்தியில் எமது ஈழத்து திரைப்படங்களை நோக்கியும் ரசிகர்களைத் திருப்புவது பெரும் போராட்டமாகவே அமையும். இவற்றுக்கு மத்தியில் எமது திரைப்படங்களை வர்த்தகரீதியில் வளர்க்கவே முடியாதா எனும் கேள்விக்கு 'முடியும்' எனும் திடமான நம்பிக்கையில் புதிய முயற்சிகள் மட்டக்களப்பில் மேற்கொள்ளப்படுகின்றன.




வர்த்தக சினிமாவை வளர்க்க புதியதொரு கோணத்தில், புதியதொரு உத்தியாக மட்டக்களப்பில் முழுநீளத் திரைப்படங்களுக்குப் பதிலாக அதன் குறுகிய வடிவமாக சுமார் 30 முதல் 45 நிமிடங்களுக்கு இடைப்பட்ட சிறிய திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டு அவை திரையரங்குகளில் வெளியிடப்பட்டு வருவதுடன், ரசிகர்களின் அமோக ஆதரவினையும் பெற்று வருகின்றன.

இந்தப் பரீட்சார்த்த முயற்சிக்கு மட்டக்களப்பில் வித்திட்டவர்களாக சமூக ஆர்வலரும், பல்துறைக் கலைஞருமான தயாரிப்பாளர் ப. முரளிதரன், இயக்குநர் கு. கோடீஸ்வரன் ஆகியோர் திகழ்கின்றனர். இவர்களது முயற்சியில் முரளிதரனின் 'விசுவல் ஆர்ட் மூவீஸ்' எனும் தயாரிப்பு நிறுவனத்தினூடாக இந்த ஆண்டின் ஆரம்பத்தில் சுமார் 30 நிமிடங்கள் நீளம் கொண்ட 'மாயை மற' எனும் சிறிய திரைப்படம் திரையிடப்பட்டு அமோக வரவேற்பைப் பெற்றது. அதனைத் தொடர்ந்து இந்த இருவரின் கூட்டணியில் 'தளராதவன்' எனும் மற்றுமொரு சிறிய திரைப்படம் வெளியிடப்பட்டு அது முந்திய சாதனைகளைத் தகர்த்ததுடன், பெருமளவான உள்ளூர், தேசிய மற்றும் சில தென்னிந்திய ஊடகங்களின் கவனத்தையும் ஈர்த்தமை குறிப்பிட வேண்டிய விடயம்.




முழு நீளத் திரைப்படத்தின் அனைத்து அம்சங்களையும் கொண்டதாக அமைந்திருந்தாலும் குறுகிய நேரத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டதாக இந்த சிறிய திரைப்படங்கள் தயாரிக்கப்படுவதால் தயாரிப்பு செலவு குறைக்கப்படுவதுடன், குறுகிய காலத்திற்குள் தொடர்ச்சியாக படங்களை வெளியிட்டு இரசிகர்களின் கவனத்தை ஈர்க்க முடியும் என்பது ஒரு தயாரிப்பாளரான ப. முரளிதரனின் அசைக்கமுடியாத நம்பிக்கையாகும். இதனை அவர் பல பேட்டிகளிலும், சமூக வலைத்தளங்களிலும் தொடர்ச்சியாக கூறி வருவதுடன் இந்த உத்தியைப் பின்பற்றி பலரும் இவ்வாறான சினிமாக்களை தயாரிக்க முன்வரவேண்டும் என்றும் கோரி வருகின்றார்.




மறுபுறம், மட்டக்களப்பின் பிரபலமான இயக்குநராக அடையாளம் காணப்பட்டுள்ள கு. கோடீஸ்வரனும் திரையரங்கு ரசிகர்களைக் கவரும் விதமான ஜனரஞ்சக சினிமா பாணியில் சிறந்த கதை, திரைக்கதைகளைக் கொண்டு படங்களை இயக்கி வருகின்றார். சிறிய திரைப்படங்களாக இருந்தாலும் அவை தொடர்ச்சியாக வெளியிடப்படும் போது ஏனைய தொழில்நுட்பக் கருவிகளின் தரமும், கலைஞர்களின் திறனும் தானாக மேம்படும் எனும் நம்பிக்கையை அவர் கொண்டுள்ளார்.

இவர்களின் இந்த முயற்சி மக்கள் மத்தியில் பெரும் ஆதரவையும், வரவேற்பையும் பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடப்படவேண்டிய விடயம். நல்ல முயற்சிகளுக்கு எப்பொழுதும் மக்களின் ஆதரவு இருக்கும் என்பதற்கு சான்றாக அவர்களது திரைப்படங்கள் வெளியிடப்பட்ட சந்தர்ப்பங்களில் திரையரங்கில் முண்டியடித்த சனக் கூட்டமே சான்று. மேலும் இந்த முயற்சிக்குக் கிடைத்த ஒர் வெற்றியாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரான வைத்திய கலாநிதி கு.சுகுணன் அவர்களும் சினிமா தயாரிப்பில் தற்பொழுது ஆர்வம் காட்டுகிறார்.

அவர் 'சிப்ஸ் சினிமாஸ்' எனும் தனது தயாரிப்பு நிறுவனத்திற்கூடாக சிறிய திரைப்படத் துறையில் ஆர்வம் காட்டி வருகின்றார். மட்டக்களப்பில் சினிமா வர்த்தகரீதியில் வெற்றி பெறுவதற்கான காலம் கனிகின்றது என்றே கூறலாம்.

இந்திய சினிமா எனும் பெரும் விருட்சத்தின் அடியில் துளிர்க்கும் எம்மவர் சினிமாவும் ஒரு பெரும் விருட்சமாக வளர வேண்டுமானால் இரசிகர்களின் ஆதரவு எனும் உரமும், இலாபம் எனும் நீரும் அவசியம். தாம் செலவழிக்கும் பணம் திரும்பி வரும் எனும் நம்பிக்கை மிகவும் தூர்ந்து போயிருக்கும் நிலையிலும் பணத்தைப் பற்றிக் கவலைப்படாமல் தொடர்ச்சியாக படம் தயாரிக்க முன்வந்திருக்கும் ப.முரளிதரன், வைத்திய கலாநிதி கு.சுகுணன் போன்றவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

அதேவேளை எமது ஈழத்துக் கலைஞர்களின் பாரிய முயற்சியால் மேற்கொள்ளப்பட்டு வரும் இவ்வாறான திரைப்படங்களை நாம் ஆர்வத்துடன் சென்று பார்வையிடுவதுடன், எமது கலைஞர்களை ஊக்கப்படுத்துவது மட்டுமல்லாமல் எமது கலைஞர்களின் திறமைகளை நாம் பாராட்டுவதன் ஊடாக மட்டக்களப்பு மாவட்டத்தில் வர்த்தக சினிமா பாரிய வளர்ச்சி காணும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

**உதயகாந்த் உதயகுமார்...**
(கல்லடி குறூப் நிருபர்)

# இலங்கை மக்களுக்கென தனித்துவமான பத்திரிகை கலாசாரத்தை கட்டியெழுப்பிய பிதாமகன் அமரர் டி.ஆர். விஜேவர்தன






இலங்கை பிரித்தானிய காலனித்துவத்திற்கு உள்ளாகி இருந்த காலப் பகுதியில் பிறந்தவர்களில் அமரர் டி.ஆர்.விஜேவர்தனவும் ஒருவராவார். 1886 பெப்ரவரி 23 ஆம் திகதி பிறந்த இவர், தமது ஆரம்பக் கல்வியை முகத்துவாரம் சென் தோமஸ் வித்தியாலயத்தில் பெற்றுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து பிரித்தானியா சென்று கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் இணைந்து சட்டத் துறையில் உயர்கல்வி கற்று பட்டம் பெற்றார். அத்தோடு பத்திரிகைத் துறை மற்றும் அதன் முகாமைத்துவம் குறித்தும் அவர் கற்றுக் கொள்ளத் தவறவில்லை.





## பெப்ரவரி 23 ஆம் திகதி 136 ஆவது பிறந்த தினம்

## பத்திரிகைத்துறையின் தாய்வீடான லேக்ஹவுஸ் நிறுவனத்தை தோற்றுவித்ததன் மூலம் இலங்கை பத்திரிகைத் துறையின் கலங்கரை விளக்காக என்றும் போற்றப்படும் ஊடக வழிகாட்டி

## சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் தனித்தனியான பத்திரிகைகளை ஆரம்பித்து இலங்கை மக்கள் மத்தியில் தேசாபிமானத்தை கட்டியெழுப்பிய பெருந்தகை

இதற்கு அவர் பிரித்தானியாவில் கல்வி கற்கும் போது தங்கி இருந்த பிரதேசம் பெரிதும் உதவியது. அங்குதான் பிரித்தானியாவில் அன்று வெளியான சில முக்கிய பத்திரிகைகளின் அலுவலகங்கள் அமைந்திருந்தன. அதனால் அப்பத்திரிகைகளின் அலுவலகங்களுக்கு நேரில் சென்று அவற்றின் செயற்பாடுகள் மற்றும் ஒழுங்கமைப்புக்களை இவரும் அறிந்து கொண்டார்.

இவ்வாறு கல்வியை நிறைவு செய்து கொண்டு 1912 இல் நாடு திரும்பிய டி.ஆர் விஜேவர்தன அவர்கள், கொழும்பு புதுக்கடை உச்சநீதிமன்றத்தில் வழக்கறிஞராக சத்தியப் பிரமாணம் செய்து சட்டத்தொழிலை ஆரம்பித்தார்.

ஆனால் 1505 முதல் ஐரோப்பியரின் காலனித்துவத்திற்கு உள்ளாகியுள்ள நாடும் மக்களும் அனுபவத்து வரும் துன்பங்களும் கஷ்டங்களும் அவரது உள்ளத்தை உறுத்தவே செய்தன. அதனால் சுதந்திரம் தொடர்பிலான விழிப்புணர்வை ஆழ அகலமாகவும் பரந்த அடிப்படையிலும் முன்னெடுப்பது குறித்து சிந்திக்கலானார் டி.ஆர். விஜேவர்தன. இதற்கு அச்சு ஊடகத்துறை சிறந்த ஆயுதமென நம்பினார் அவர்.

இந்நாட்டின் பத்திரிகைத்துறை வரலாறு ஆரம்பமாகி ஒரு நூற்றாண்டு காலம் கடந்திருந்தும் கூட பல வெற்றிடங்கள் நிவர்த்திக்கப்படாது நீடித்த வண்ணமே இருந்து வந்தன. அதாவது 1802 இல், 'த கவர்மெண்ட் கசெட்' (அரச வர்த்தமானி) என்ற ஆங்கில வார வெளியீட்டுடன் இந்நாட்டின் அச்சு ஊடகத் துறை வரலாறு ஆரம்பமானது. அரச அறிவித்தல்கள் மற்றும் விளம்பரங்களைக் கொண்டதாக பிரித்தானியாவின் இலங்கைக்கான ஆளுனர் நிர்வாகத்தினால் இவ் வர்த்தமானி வெளியாகியது.

அதேநேரம் 1833 இல் கோல்புறூக் கமரூன் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட சிபார்சுகளில் காணப்பட்ட குறைபாடுகளைச் சுட்டிக்காட்டித் தம் அதிருப்தியை வெளிப்படுத்தும் நோக்கில் கொழும்பு வாழ் ஆங்கில வர்த்தகர் குழுவினர் 1834 இல் 'Observer and commercial advetiser' எனும் பெயரில் பத்திரிகையொன்றை ஆரம்பித்தனர். அதுவே இலங்கையில் வெளியான முதலாவது சுதந்திரப் பத்திரிகையாகும். இதன் முதலாவது ஆசிரியராக ஜோர்ச் விண்டர் கடமையாற்றினார்.

இதேவேளை 1836 இல், 'த கொழும்பு ஜேர்னல்' என்ற பெயரில் ஆங்கிலப் பத்திரிகையொன்று தேசாதிபதி சேர் ரொபர்ட் வில்மட் கோட்டலின் நிர்வாகத்தில் அரச அச்சகத்தின் மூலம் வெளியிடப்பட்டது. அதன் ஆசிரியராக ஜோர்ச் லீ பணியாற்றினார். 'ஒப்சேவர்' பத்திரிகை மூலம் காலனித்துவ அரசுக்கு எதிராக வெளியிடப்பட்ட அதிருப்திக்கு எதிர்க்குரலாக இப்பத்திரிகை அமைந்திருந்தது. ஆனாலும் சிறிது காலத்தில் இப்பத்திரிகை நின்று போனது. அதனைத் தொடர்ந்து தேசாதிபதி நிர்வாகத்தின் அனுசரணையுடன் 'சிலோன் க்கொரனிக்கல்' என்ற பெயரில் 1837 இல் ஆங்கில வார இதழ் வெளிவரத் தொடங்கியது. ஆனால் இப்பத்திரிகையும் 1838 இல் நின்று போனது.

இவை இவ்வாறிருக்க, அமெரிக்க மிஷனரியினர் யாழ்ப்பாணம் மானிப்பாயிலிருந்து 'உதய தாரகை' என்ற பெயரில் தமிழ் மொழியில் 1841 ஜனவரியில் பத்திரிகையொன்றை வெளியிட்டனர். இது சமயப் பிரசாரத்தை நோக்காகக் கொண்ட பத்திரிகையாக இருந்த போதிலும் தமிழ் மொழியில் வெளியான முதலாவது பத்திரிகையாகும். அத்தோடு இப்பத்திரிகையுடன் சேர்த்து 'மோர்னிங் ஸ்டார்' என்ற ஆங்கிலப் பத்திரிகையும் இவர்களால் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியிடப்பட்டது.

மேலும் இந்நாட்டின் முலாவது சிங்கள மொழி செய்திப் பத்திரிகை 1860 இல் 'லங்காலோக' என்ற பெயரில் வெளியானது. ரொபேர்ட் நியூட்டன் 'லங்கா கார்டியன்' என்ற ஆங்கில சஞ்சிகையை 1864 இல் கொழும்பிலிருந்து வெளியிட்டார். அறிஞர் எம்.சி சித்தி லெப்பை 'முஸ்லிம் நேசன்' என்ற பெயரில் முற்றிலும் தமிழ்மொழியில் 1883 இல் பத்திரிகையொன்றை வெளியிடத் தொடங்கினார். இதுவே இலங்கை முஸ்லிம்களின் தமிழ்மொழி பத்திரிகை வரலாற்றின் ஆரம்பமாக அமைந்திருக்கின்றது.

இவற்றை விடவும் வேறு பல பெயர்களிலும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் வெளியாகின. அவற்றில் பெரும்பாலானவை தனிநபர்களாலும் ஒரு சில பத்திரிகைகள் நிறுவனங்களாலும் வெளியிடப்பட்டன. ஆனாலும் பெரும்பாலான பத்திரிகைகள் நிதிநெருக்கடிகள் காரணமாக நீடித்து நிலைக்க முடியாத நிலைக்கு உள்ளாகின. சில பத்திரிகைகள் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்த வண்ணம் வெளிவந்தன.

இந்நாட்டில் அச்சு ஊடகத்தின் வரலாறு 1802 இல் ஆரம்பமாகி 1910 கள் வரையில் ஒரு நூற்றாண்டு காலம் கடந்திருந்தும் கூட, இந்நாட்டு பத்திரிகைத் துறையில் பல குறைபாடுகள் நீடித்து வந்தன. குறிப்பாக 1910 வரையும் இந்நாட்டில் வெளியான பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் அச்சு ஊடகமொன்று கொண்டிருக்க வேண்டிய பல பண்புகளைக் கொண்டிருக்கவில்லை. அவற்றில் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு மற்றும் வடிவமைப்பு என்பவை குறிப்பிடத்தக்கவையாகும்.

இவ்வாறான சூழலில்தான் டி.ஆர் விஜேவர்தன தினசரி பத்திரிகை வெளியீட்டுத் துறையில் பிரவேசிக்கலானார். அது முதலாம் உலகப் போர் காலமாகவும் இருந்தது. இந்த நிலையில் எச். எஸ் பெரேரா என்பவரால் 1909 இல் ஆரம்பிக்கப்பட்டு சில வருடங்களுக்குள்ளேயே கடும் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்திருந்த 'தினமின' என்ற சிங்கள மொழிப் பத்திரிகை கைவிடப்படும் நிலையில் காணப்பட்டது. அப்பத்திரிகையை வாங்கிய டி.ஆர். விஜேவர்ன, அதனை மெருகூட்டி புதிய தோற்றத்தில் 1914 முதல் வெளியிடலானார். இப்பத்திரிகையின் ஊடாக ஒரு தினசரி பத்திரிகை கொண்டிருக்க வேண்டிய பண்புகள் என்பவற்றை அவர் இலங்கைக்கு அறிமுகப்படுத்தினார். இதன் ஊடாக பத்திரிகைத் துறை கொண்டிருக்க வேண்டிய கட்டமைப்பு, ஒழுங்கமைப்பு மற்றும் வடிவமைப்பை இலங்கை அச்சு ஊடகத்துறைக்கு அறிமுகப்படுத்திய முதலாம் நபர் என்ற பெருமையை டி.ஆர். விஜேவர்ன பெற்றுக் கொண்டுள்ளார். இவரது நிர்வாகத்தின் கீழ் வெளிவர ஆரம்பமான தினமினவுக்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பும் ஆதரவும் கிடைக்கப் பெற்றன.

இக்காலப் பகுதியில் 'சிலோனிஸ்' என்ற ஆங்கில மொழிப் பத்திரிகையும் கடும் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துக் கொண்டிருந்தது. இது சட்ட நிருபண சபையின் கற்றறிந்தவர்கள் ஆசனத்திற்கு போட்டியிட்ட சேர் பொன்னம்பலம் இராமநாதனுக்கு ஆதரவு நல்குவதற்காக கொழும்பு சிரேஷ்ட சட்டத்தரணி ஹெக்டர் ஜயவர்தன, அவரது சகோதரர் கேர்ணல் ரி.ஜி. ஜயவர்தன, சட்டத்தரணி பிரன்ஸிஸ் டி சில்வா, டொக்டர் ஈ.வி. ரத்னம் உள்ளிட்டோரால் 1908 இல் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டு வந்த பத்திரிகையாகும். இப்பத்திரிகையின் உரிமத்தை 16 ஆயிரம் ரூபாவுக்கு வாங்கிய டி.ஆர் விஜேவர்தன அதனை 'டெய்லி நியூஸ்' என்ற பெயரில் ஆங்கில மொழிப் பத்திரிகையாக 1918 முதல் புதிய தோற்றத்தில் வெளியிடத் தொடங்கினார். இப்பத்திரிகைக்கும் மக்கள் நல்ல ஆதரவை வழங்கினர்.

இலங்கையின் சுதந்திரப் போராட்டத்தை அர்த்தபூர்வப்படுத்தி புதிய உத்வேகத்தை அளிக்கும் வகையில் மக்கள் மத்தியில் இவரது பத்திரிகைகள் விழிப்புணர்வை ஏற்படுத்திக் கொண்டிருந்தன. இதன் ஊடாக இந்நாட்டு மக்களின் சுதந்திரத் தாகத்தையும் எதிர்பார்ப்பையும் உள்நாட்டு மக்களுக்கு மாத்திரமல்லாமல் ஆங்கிலேயருக்கும் கூட ஏக நேர காலத்தில் அவரால் கொண்டு செல்ல முடிந்தது.

இந்த நிலையில் அச்சு ஊடகத் துறையில் அபார நம்பிக்கை கொண்ட டி.ஆர். விஜேவர்தன, 1919 இல் லேக் ஹவுஸ் நிறுவனத்தை உருவாக்கினார். இதேவேளை 1834 முதல் இந்நாட்டில் வெளிவந்து கொண்டிருந்த பத்திரிகையான ஒப்சேவரும் 1920 களாகும் போது கைவிடப்படும் நிலையை அடைந்திருந்தது. அதனால் அப்பத்திரிகையின் உரிமத்தையும் வாங்கிய டி.ஆர் விஜேவர்தன, 1923 முதல் 'ஒப்சேவர்' என்ற பெயரில் ஆங்கில மொழிப் பத்திரிகையாக வெளியிடலானார்.

இவ்வாறான சூழலில் 'அசோசியேட்டட் நியூஸ் பேபர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டட் (ஏ.என்.சி.எல்)' என்ற நிறுவனத்தை1926 இல் ஸ்தாபித்தார் டி.ஆர். விஜேவர்தன. இதன் ஊடாக இந்நாட்டில் தினசரிப் பத்திரிகைகளை வெளியிடுவதற்காக தனியான நிறுவனத்தை நிறுவிய முதலாவது நபர் என்ற பெருமையையும் இவர் பெற்றுக் கொண்டுள்ளார். அத்தோடு இந்நாட்டின் பத்திரிகை வெளியீட்டுத் துறையில் ஆசிரிய பீடம், அச்சுப் பிரிவு, விளம்பரப் பிரிவு, விநியோகப் பிரிவு என்பவற்றை ஒரே நிறுவனத்தின் கீழ் அறிமுகப்படுத்திய முதல் நபரும் இவரேயாவார். 1930 இல் 'சிலுமின' என்ற சிங்கள மொழிப் பத்திரிகையையும் இவர் ஆரம்பித்தார்.

இந்நிலையில் இந்நாட்டின் தமிழ் பேசும் மக்களுக்காக 'தினகரன்' என்ற பெயரில் 1932 இல் தமிழ்மொழிப் பத்திரிகையையும் ஆரம்பித்தார். இதன் ஊடாக இலங்கையின் தமிழ் பேசும் மக்களுக்காக தமிழ்மொழிப் பத்திரிகையை தனியான ஆசிரிய பீடத்தைக் கொண்டு ஆரம்பித்த முதலாவது பெரும்பான்மை இனத்தவர் என்ற பெருமையையும் இவர் பெற்றுக் கொண்டுள்ளார். அத்தோடு இலங்கையில் சிங்களம், தமிழ், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளிலும் ஒரே இடத்திலிருந்து பத்திரிகைகளை வெளியிடும் பாரம்பரியத்தைத் தொடக்கி வைத்த பெருமையும் இவருக்குரியதே.

இவ்வாறு இந்நாட்டு தினசரிப் பத்திரிகைத் துறையில் அகலக்கால் பதித்து அதன் மறுமலர்ச்சிக்கும் புத்தெழுச்சிக்கும் வித்திட்ட டி.ஆர். விஜேவர்ன, இத்துறையை தனியான ஒரு கைத்தொழில் துறையாகவும் மேம்படுத்தினார். இலங்கையின் தினசரிப் பத்திரிகை வெளியீட்டுத் துறையில் இவரது பிரவேசம் இந்நாட்டு அச்சு ஊடகத் துறையின் பயணப்பாதையை மாற்றியமைத்தது. பத்திரிகைகளின் தாய்வீடாக விளங்கும் லேக் ஹவுஸ் நிறுவனத்தை ஸ்தாபித்த இவர், இந்நாட்டு அச்சு ஊடகத்துறையின் மைல் கல்லாகவும் ஒளிவிளக்காவும் திருப்பு முனையாகவும் விளங்குகின்றார் என்றால் அது மிகையாகாது.



**மர்லின் மரிக்கார்...**

# ஆன்மிக, சமூகப் பணிகளால் மக்கள் உள்ளத்தில் இடம்பிடித்த வர்த்தகப் பிரமுகர் 'ஆஞ்சநேயர்'

ஆன்மிக, சமூகசேவை மற்றும் வர்த்தகம் எனப் பல்பரிமாணங்களில் மிளிர்ந்த, 'ஆஞ்சநேயர்' என எல்லோராலும் அழைக்கப்பட்டு வந்த மட்டக்களப்பு பயனியர் வீதியைச் சேர்ந்த பிரபல வர்த்தகப் பிரமுகரும், சமூகசேவகருமான இராசதுரை சண்முகராஜா கடந்த 15 ஆம் திகதி காலமானார். அவர் கடந்த சில மாதங்களாக சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார். கொழும்பு தனியார் மருத்துவமனையில் சிறுநீரக மாற்றுச் சிகிச்சை மேற்கொண்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி தனது 70 ஆவது வயதில் கடந்த செவ்வாய்க்கிழமை (15) காலமானார்.

மட்டக்களப்பு_ திருமலை பிரதான வீதியில் பிள்ளையாரடி ஊடாக வீதியினில் பயணிக்கும் போது விஸ்வரூப ஆஞ்சநேயர் ஆலயத்தை தரிசிக்க முடியும். அதே போல கள்ளியங்காடு ஆதிஆஞ்சநேயர் ஆலயமும் மட்டக்களப்பில் பிரபல்யம் வாய்ந்தது. இரண்டு ஆலயங்களையும் புனருத்தாரணம் செய்வதற்கு மூலகாரணமாக இருந்தவர் அமரர் இராசதுரை சண்முகராஜா. அந்த ஆலயங்களின் நிர்வாகத்தில் பிரதானமானவரும் அவராவார்.

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் அவர். மட்டக்களப்பில் மணமுடித்து அங்கேயே நிரந்தரமாக பெரும் புகழுடன் வாழ்ந்தவர். அவருக்கு ஐந்து பிள்ளைகள் உள்ளனர்.

மட்டக்களப்பு பயனியர் வீதி ஆஞ்சநேயர் ஹாட்வெயார் மற்றும் ஆஞ்சநேயர் குறூப் ஒவ் கொம்பனி ஆகியவற்றின் உரிமையாளரான அவர் மட்டக்களப்பு மாமாங்கம் ஸ்ரீ விக்கினேஸ்வரர் திருத்தொண்டர் சபையின் தலைவராக விருந்து ஆன்மீக கலைகலாசார மேம்பாட்டிற்கு பணியாற்றியவர்.

கள்ளியங்காட்டில் ஆஞ்சநேயர் ஆடைத் தொழிற்சாலையை நிறுவி வறுமைக்கோட்டின் கீழ் உள்ள யுவதிகளுக்கு தொழில்வாய்ப்பினை வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்திற்கு வழி காட்டினார். அரச ஒப்பந்தக்காரராகவிருந்து கிழக்குப் பல்கலைக்கழகம், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை உள்ளிட்ட பல்வேறு பாரிய கட்டடங்களை அமைத்து சிறந்த ஒப்பந்தக்காரருக்கான விருதுகளைப் பெற்றவர். மட்டக்களப்பு அரசடி சுற்றுவட்டத்தில் மணிக்கூட்டுக் கோபுரத்தை அமைத்து அலங்கரித்து அவ்விடத்திற்கு பெருமை சேர்த்தார்.



ஏழை மக்களின் துயர் துடைக்க அன்பு, கருணை, ஆற்றல் என பல பண்புகளைக் கொண்டு கடந்த ஆண்டு கொவிற்19 தொற்றின் காரணமாக நாடு முடக்கப்பட்ட காலகட்டத்தில் மிகவும் பின்தங்கிய கிராம மக்களுக்கு பல இலட்சம் ரூபா செலவில் அத்தியாவசிய உணவுப்பொதிகளை வழங்கி வைத்தார். ஏழைகளின் துயர் துடைத்து சமூகப் பணியினால் மேன்மை பெற்றார்.

கிழக்கிலே லேக் ஹவுஸ் நிறுவனத்தின் தினகரன் பத்திரிகையின் விற்பனையை அதிகரிக்கும் நோக்கில் கடந்த 15.02.2017 அன்று மட்டக்களப்பு நகர மண்டபத்தில் நடைபெற்ற 'தேனகச் சுற்றுலா' கொண்டாட்டத்திற்கு எமக்கு உதவியவர்களுள் அமரர் சண்முகராஜாவையும் முக்கியமாகக் குறிப்பிடலாம்.

கடின உழைப்பின் மூலம் கிழக்கிலே தனது தந்தை இராசதுரையின் வழியில் தொழிலைப் பின்பற்றி உச்சம் தொட்டவர். அதற்கு அவர் தனது இறைபக்தியையும் மற்றும் முயற்சியையும் மூலாதாரமாகக் கொண்டிருந்தார். மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறந்த தொழில் வழங்குனராக அவர் விளங்கினார். சிறுவர்கள் மற்றும் பெற்றோர் மனஅழுத்தம், கவலை, மனச்சோர்வினால் பாதிக்கப்படும் போது அவற்றை போக்குவதற்காக கள்ளியங்காட்டில் நவீன தொழில்நுட்பத்துடனான 'சிறுவர் உலகம்' எனும் விளையாட்டு வளாகம் ஒன்றை நிறுவி சிறுவர்களை மகிழ்ச்சிப்படுத்தினார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று வியாழக்கிழமை (17) அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று மாலை 4.00 மணிக்கு கள்ளியங்காடு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

**சிவம் பாக்கியநாதன்...**
மாநகரசபை உறுப்பினர்
மட்டக்களப்பு.

## ஜனாதிபதி தலைமையில்... (03ஆம் பக்கம் பார்க்க)

விஹாரைக்குப் பெற்றுக்கொள்ளல் மற்றும் பெஹெராவுக்கு வருகை தந்த யானைப்பாகன்கள் மூவருக்கான சைக்கிள்களைப் பரிசளித்தல் போன்ற நிகழ்வுகள், ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றன. மஹாசங்கத்தினர், மக்கள் பிரதிநிதிகள், அரசஅதிகாரிகள், விஹாரையின் பரிபாலனசபை உறுப்பினர்கள் உள்ளிட்ட குழுவினரும் இந்நிகழ்வுகளில் கலந்துகொண்டிருந்தனர்.

## மனுவில் கையெழுத்திட்டார்... (03ஆம் பக்கம் பார்க்க)

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் கொழும்பு மாவட்டத்தில் பொதுமக்களிடம் கையெழுத்துப்பெற்றுக் கொள்ளும் செயற்பாடுகள் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக இடம்பெற்றுள்ளது. அச்சமயம் தமிழ் தேசியக் கட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இராச மாணிக்கம் சாணக்கியன் கொழும்பு பேராயர் இல்லத்தில் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையைச் சந்தித்து அவரது கையெழுத்தையும் பெற்றுக்கொண்டுள்ளார். (ஸ)

## தமிழக முதலமைச்சரை... (03ஆம் பக்கம் பார்க்க)

எதிர்ப்பு அரசியல் மூலம் எதனையும் சாதிக்க இயலாது. தீர்வுத் திட்டமே எமக்கு அவசியம். அனுபூரணமாகவே எமது மீனவர்களின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க இயலும். தமிழ்நாடு முதலமைச்சர் இதுவரை யாழ்ப்பாணத்திற்கு வந்ததில்லை. ஆனால் எமது கடற்தொழில் அமைச்சர் அழைத்தால் நிச்சயமாக அவர் இங்கு வருகை தந்து மீனவர் பிரச்சினையை தீர்ப்பதோடு யாழ். மாவட்ட முன்னேற்றத்திற்கும் பங்களிக்க முடியும்.

இந்திய தூதரகம் ஊடாக இந்த நடவடிக்கையை மேற்கொண்டு தீர்வுத் திட்டம் ஒன்றுக்கு வழிவகுக்க முடியும். அதற்கு எனது ஒத்துழைப்பு நிச்சயமாக இருக்கும் என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

## மயிலிட்டி துறைமுகத்தின்... (03ஆம் பக்கம் பார்க்க)

பருத்தித்துறை துறைமுகம், மன்னார் பேசாலை துறைமுகம் மற்றும் யாழ்ப்பாணம் குருநகர் துறைமுகம் ஆகிய மூன்று துறைமுகங்களையும் அமைப்பது தொடர்பிலும் முயற்சிகளை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த காலத்தில் பருத்தித்துறை துறைமுகத்தின் அபிவிருத்தி தொடர்பில் ஏற்பாடு செய்யப்பட்டு அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டும் இருந்தன. ஆனாலும் அம்முயற்சி சரியாக கையாளப்படாமையால் தவறவிடப்பட்டிருந்தது. ஆனால் நாம் ஆட்சி பொறுப்பை ஏற்றபின் அந்த துறைமுகத்தின் அபிவிருத்தி தொடர்பான முயற்சியை தீவிரமாக முன்னெடுத்து வருகின்றோம். அது விரைவில் கைகூடும் எனவும் நம்புகிறேன். துறைமுகத்தை கட்டும்போது அப்பிர தேசத்தின் கடற்றொழில் அமைப்புக்களுடன் கலந்துரையாடியேஅமைப்பது வழமை. அதேபோன்றே இங்குள்ள கடற்றொழில் அமைப்புகளுடன் கலந்துரையாடி முதலாவது கட்டம் மேற்கொள்ளப்பட்டது. ஆனாலும் அதில் சில குறைபாடுகள் காணப்படுகின்றன. ஆனால் தற்போது எமது அரசாங்கத்தால் அதன் இரண்டாம் கட்ட பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன்போது கடந்த காலத்தில் விடப்பட்ட அனைத்து குறைபாடுகளும் கவனத்தில் கொள்ளப்பட்டு நவீனத்துவத்துடன் கூடியதாக நிர்மாணிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை உறுதியாக கூறுகின்றேன்.

இதேவேளை எமது கடற்றொழிலாளர்கள் பலவகையான பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். குறிப்பாக கடந்த காலத்தில் நாட்டில் நடைபெற்ற வன்முறை காரணமாக பலமான பொருளாதார கஸ்டங்களை எதிர்கொண்டுள்ளார்கள். அதுமட்டுமல்லாது கடந்தகால தமிழ் தலைவர்கள் என கூறப்பட்டவர்களால் கிடைத்த சந்தர்ப்பங்களை சரியாக பயன்படுத்தாது தவறவிட்டப்பட்டதால் அதிக துன்பங்களையும் அவர்கள் எதிர்நோக்கியுள்ளனர். அதுவகையில் அவற்றை தீர்க்குமுகமாக எமது நிகழ்கால எதிர்கால செயற்பாடுகள் அமையும்" என்றும் தெரிவித்தார்.

மேலும் மயிலிட்டி பிரதேசத்தில் தற்போது 60 ஏக்கர் காணி நிலங்கள் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் சுமார் 100 முதல் 125 ஏக்கர் காணிகளை கட்டம் கட்டமாக விடுவிக்கவும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்ததுடன், கடற்றொழிலாளர்கள் எதிர்கொண்டு வரும் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு பெற்றுத் தரப்படும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

## ஆபிரிக்க நாடுகளின்... (03ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையின் பக்கம் பெற்றுக்கொள்ளும் முயற்சியில் ஆபிரிக்க கண்டத்தில் இருபது நாடுகளுக்கான உயர் ஸ்தானிகரும், ஆபிரிக்காவிற்கான இலங்கை பிரதமரின் சிறப்பு தூதுவருமான வேலுப்பிள்ளை கணநாதன் ஈடுபடவுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்களில் அறிந்துகொள்ள முடிகின்றது.

கடந்த 2021 ஆம் ஆண்டிலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் ஆபிரிக்க நாடுகளின் ஆதரவை பெற்றுக்கொள்ளும் முயற்சியில் வேலுப்பிள்ளை கணநாதன் ஈடுபட்டிருந்த நிலையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் ஏழு நாடுகளில் இரண்டு நாடுகள் எதிராக வாக்களித்ததுடன், 5 நாடுகள் வாக்களிக்காது தவிர்ந்து கொண்டன. இம்முறையும் அதே முயற்சிகளை இவர் மூலமாக கையாள அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அதற்கான ஆரம்ப பேச்சுவார்த்தைகள் தற்போதும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், மார்ச் மாதம் 3 ஆம் திகதிக்கு முன்னர் பரந்த அளவிலான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் அறிந்துகொள்ள முடிகின்றது.

## மாணவி ஹரிஸ்ணவிக்கு... (03ஆம் பக்கம் பார்க்க)

குற்றவாளி கண்டு பிடிக்கப்பட்டு தண்டனை வழங்கப்படவில்லை.

இவ்விடயம் குறித்து உறவினர்கள் தெரிவிக்கையில்,

ஹரிஸ்ணவியின் படுகொலையுடன் தொடர்புபட்டவர்கள் கண்டு பிடிக்கப்படவில்லை. இந்த செயலைச் செய்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை. இப்படுகொலைக்கு நியாயமான தீர்வு கிடைக்கவில்லை. இதனால் பெரும் ஏமாற்றமடைந்துள்ளோம் . ஹரிஸ்ணவியின் படுகொலைக்கு நீதி கிடைக்கும் வரையிலும் நாங்கள் போராடி வருகின்றோம். இனியும் காலங்களை கடத்தி குற்றவாளி சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிப்பதற்கு இடமளியாமல் நீதித்துறை இப்படுகொலைக்கு உரிய தீர்வு பெற்றுத்தரும் என்றும் எதிர்பார்ப்புடன் காத்திருக்கிறோம் என தெரிவித்துள்ளனர் .

## இலங்கை – இந்திய... (03ஆம் பக்கம் பார்க்க)

ரீதியாக தீர்மானம் எடுக்கப்பட்ட போதிலும், இம்முறை யாத்திரிகர்களை அனுமதிப்பதில்லையெனவும் அருட்தந்தைகளின் பங்கேற்புடன் மாத்திரம் திருவிழாவை நடத்தத் தீர்மானித்துள்ளதாக அமைச்சரவைக்கு ஜனாதிபதி தெரிவித்துள்ளார் என்றார்.

## ஒமிக்ரோன்.. (03ஆம் பக்கம் பார்க்க)

நிபுணர் ரஞ்சித் படுவந்துடாவ குறிப்பிட்டார்.

இலங்கையில் பதிவாகியுள்ள கொவிட்19 நோயாளர்களில் பலர் ஒமிக்ரோன் திரிபினால் பாதிக்கப்பட்டுள்ளனரென்பது தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஒமிக்ரோன் திரிபால் பாதிக்கப்பட்ட நோயாளி ஒருவர் மீண்டும் ஒமிக்ரோன் தொற்றால் பாதிக்கப்படலாம். அவருக்கு பல முறை தொற்று ஏற்படலாம்.

இது பாரிய பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய வைரஸ் திரிபல்ல என்று கூறப்பட்டது.ஆனால் அது தவறான கருத்து. இதனால் பாதிக்கப்பட்டு அனர்த்த நிலைக்குள்ளான நோயாளர்கள் பலர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஒமிக்ரோன் தொற்று காரணமாக தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் பல நோயாளர்கள் உள்ளனர். எனவே, தடுப்பூசி மூலம் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரித்துக் கொள்வது மிக அவசியம் என்றும் விஷேட வைத்திய நிபுணர் ரஞ்சித் படுவந்துடாவ மேலும் தெரிவித்துள்ளார்.

## இரண்டு அரசியல் கட்சிகள்... (03ஆம் பக்கம் பார்க்க)

பட்டியலில் இருந்து நீக்கப்பட்டதாக ஆணைக்குழுவின் மூத்த அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். இதனை அரசியல் கட்சிக்கு சின்னமாக ஒதுக்க கூடாது என்றும், எதிர்காலத்தில் எந்த அரசியல் கட்சியும் இதனை பயன்படுத்த அனுமதிக்கப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

## சிறையில் கல்வி கற்கும்... (03ஆம் பக்கம் பார்க்க)

தொழில்நுட்ப உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், சிறைச்சாலை அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ் அவர் கல்வி செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார். நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் தண்டனை விதிக்கப்பட்ட ரஞ்சன் இராமநாயக்கவுக்கு பொது மன்னிப்பு வழங்க வேண்டுமென எதிரணி கோரிவருகிறது. அவருக்கு கடந்த சுதந்திர தினத்தின் போது பொதுமன்னிப்பு கிடைக்குமென பரவலாக எதிர்பார்க்கப்பட்டது. (பா)

## ஜூட் கிருஷாந்த ... (03ஆம் பக்கம் பார்க்க)

பெற்றுக்கொள்வதற்காகவே நேற்று அவர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார். அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்த கூற்று மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் சம்பந்தமாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு அதற்குப் பொறுப்பானவர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துமாறு தாம் வாக்குமூலத்தின் போது தெரிவித்ததாக ஜூட் கிருசாந்த அடிகளார் தெரிவித்துள்ளார். தமது வேண்டுகோளுக்கு உரிய அதிகாரிகள் மூலம் சிறந்த பதில் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திலிருந்து வெளியேறுகையில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். (ஸ)

## தாதியர்களின் அங்கீகரிக்கப்பட்ட...

பணிப்பகிஷ்கரிப்பை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு அவர்கள் இணக்கம் தெரிவித்தனர். “வைத்தியர், தாதியர் உள்ளிட்ட சுகாதார சேவையானது மிகவும் மதிப்புமிக்கதாகும். நாட்டின் நிதி நிலைமையைச்சரியாகப் புரிந்துகொண்டு, அனுமதிக்கப்பட்டுள்ள தாதியர் கோரிக்கைகளை ஒட்டுமொத்த அரச சேவைக்குப் பாதிப்புஏற்படாத வகையில் நிறைவேற்ற நடவடிக்கை எடுங்கள்” என்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார். பொதுச் சேவை ஐக்கிய தாதியர் சங்கத்தின் கோரிக்கைக்கமைய, நேற்று (17) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மேற்கண்டவாறு ஆலோசனை வழங்கினார்.

தாதியர் பல்கலைக்கழகத்தை ஆரம்பித்தல், தரம் இரண்டில் இருந்து தரம் ஒன்றுக்கு முன்கூட்டியே பதவி உயர்வுகளை வழங்குதல், 36 மணித்தியாலங்களாகக் காணப்படும் சேவைக் காலத்தை வாரத்துக்கு 05 நாட்களுக்கான 30 மணிநேர சேவைக் காலமாகக் கருதுதல், மருத்துவ நிபுணர்களுக்கு ரூ.35,000 DAT கொடுப்பனவு விகிதாசாரப்படியான ரூ.10,000 கொடுப்பனவு, சீருடைக்கான கொடுப்பனவுகளுக்குரிய சுற்றுநிருபத்தை வெளியிடுதல் மற்றும் அடிப்படைச் சம்பளத்தில் 1/100 வீதம் மேலதிகச் சேவைக் கொடுப்பனவு போன்ற கோரிக்கைகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

உயர்க்கல்விச் சட்டத்தைத் திருத்தத்துக்கு உட்படுத்தி, அதனை உடனடியாகப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் அதுவரையில், தாதியர் கல்லூரிகளை ஒன்றிணைத்து தேசிய பல்கலைக்கழகமாக மாற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்கவுக்கு ஜனாதிபதிஆலோசனை வழங்கினார்.

ஏப்ரல் மாதத்துக்குள் உயர்க்கல்விச் சட்டமூலத்தைப் பாராளுமன்றத்தில் முன்வைக்கவும் மே மாத இறுதிக்குள் தாதியர் பல்கலைக்கழகத்தை ஆரம்பிக்கவும் நடவடிக்கை எடுப்பதாக, சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

IIஆம் தரம் முதல் Iஆம் தரம் வரையிலான பதவி உயர்வுகளை முன்கூட்டியே வழங்குவதற்கும் சீருடைக் கொடுப்பனவை வழங்குவதற்கும் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு, சுகாதாரம் மற்றும் நிதி அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

“கடும் சிரமங்களுக்கு மத்தியிலேயே, ஜனவரி மாதம் முதல் அனைத்து அரச ஊழியர்களுக்குமான 5,000 ரூபாய் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது. ஒரு தரப்பினரின் கோரிக்கைகளை நிறைவேற்றும் போது மற்றொரு தரப்பினர் கோரிக்கைகளை முன்வைக்கின்றனர். எனினும், நிலவும் நிதி நெருக்கடிக்கு மத்தியில் அனைவரது கோரிக்கைகள் தொடர்பிலும் அவதானம் செலுத்துவது கடினமென்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். அதனால், ஒட்டுமொத்த அரச சேவைக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில், நிதி அமைச்சு மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி, தாதியர் கோரிக்கைகள் தொடர்பில் அவதானம் செலுத்துங்கள்” என்று, உரிய அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

பொதுச் சேவை ஐக்கிய தாதியர் சங்கத்தின் தலைவர் வணக்கத்துக்குரிய முருத்தெட்டுவே ஆனந்த தேரர், சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல, ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத், நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல, சுகாதார அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் சஞ்ஜீவ முனசிங்க, சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் அசேல குணவர்தன, தேசிய வரவு செலவு திட்ட பணிப்பாளர் நாயகம் ஜூட் நிலுக்ஷான், அரச சேவை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஹிரன்சா கலுதந்ரி, தேசிய

சம்பள ஆணைக்குழுவின் செயலாளர் சந்திராணி சேனாரத்ன ஆகியோரும் பொதுச் சேவை ஐக்கிய தாதியர் சங்கத்தின் உறுப்பினர்களும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர்.

# யாழில் டெங்குநோய் திடீரென அதிகரிப்பு

நாட்டில் கடந்த ஜனவரி மாதத்தில் மாத்திரம் 985 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவித்துள்ள சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு வடக்கு மாகாணத்தில் 147 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டதாகவும் இதில், 102 தொற்றாளர்கள் யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர் எனவும் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 20 பேரும், வவுனியாவில் 10 பேரும், மன்னாரில் 9 பேரும், முல்லைத்தீவில் 6 பேரும் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக அதன் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, டெங்கு பாதிப்பில் கொழும்பு மாவட்டமே முதலிடத்தில் உள்ளது. அங்கு 245 பேர் டெங்கால் பாதிக்கப்பட்டனர். புத்தளத்தில் 242 பேரும், மட்டக்களப்பில் 125 பேரும், திருகோணமலையில் 108 பேரும் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டனர்.

எனினும், கம்பஹா, களுத்துறை, அநுராதபுரம், பொலநறுவை, மொனராகலை, இரத்தினபுரி மாவட்டங்களில் எவரும் டெங்குத் நோயினால் பாதிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## CCTV காணொளிகள்...

உட்படுத்தப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதேநேரம், ஒரு வார காலத்தில் பதிவான காணொளிகளை ஆய்வுக்கு உட்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

ஹிரு தனியார் தொலைக்காட்சியின் சிரேஷ்ட ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்ரமவின் இல்லத்தின் மீது தாக்குதல் நடத்தி விட்டு ஸ்பேசியா (Spacia) வகை சிற்றூர்ந்தை ஒத்த வாகனத்தில் சிலர் தப்பிச் சென்றிருந்தனர். இந்த சம்பவம் தொடர்பில் புலனாய்வு பிரிவு அதிகாரிகள் உள்ளிட்ட 60 பேர் அடங்கிய 9 விசேட விசாரணைக் குழுக்கள் தொடர்ந்தும் விசாரணைகளில் ஈடுபட்டுவருகின்றன.

அதனடிப்படையில், இதுவரை 86 பேரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். இதேவேளை, ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்ரமவின் இல்லத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் சரியான தகவல்களை வழங்குபவருக்கு, 5 இலட்சம் ரூபா வெகுமதியை வழங்க ஹிரு ஊடக வலையமைப்பு தீர்மானித்துள்ளதாக அறிவித்துள்ளது.

இதற்கமைய, தாக்குதலை நடத்திய சந்தேக நபர்கள் தொடர்பிலோ அல்லது அவர்கள் பயணித்த வாகனம் தொடர்பிலோ தகவலறிந்தால், 0770 322 821 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாக ஹிரு சி.ஐ.ஏவுக்கு தகவல் வழங்க முடியும் எனவும் அவ்வாறு தகவல் வழங்குபவரின் அடையாளம் பாதுகாக்கப்படும் எனவும் அந்நிறுவனம் உறுதியளித்துள்ளது.

## அமெரிக்க புதிய தூதுவர்...

சியோலில் பிறந்த ஜூலி சுங் கொரிய, ஜப்பானிய, ஸ்பானிஷ் மற்றும் கெமர் மொழிகளில் சரளமாக பேசக்கூடியவர். கம்போடியாவின் புனோம் பென் நகரில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் துணைத் தூதராகவும், தாய்லாந்தின் பேங்கொக்கில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் பொருளாதார ஆலோசகராகவும் அவர் பணியாற்றியுள்ளார்.

ஈராக்கின் பாக்தாத்தில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் மாற்றம் ஒருங்கிணைப்பாளருக்கான தலைமைப் பணியாளராகவும் இருந்தார். கொலம்பியா, வியட்நாம் மற்றும் ஜப்பானில் உள்ள அமெரிக்க தூதரகங்களிலும், சீனாவின் குவாங்சோவில் உள்ள அமெரிக்க துணைத் தூதரகத்திலும் பணியாற்றியுள்ள அவர், கலிபோர்னியாசான் டியாகோ பல்கலைக்கழகத்தில் தனது இளங்கலை கலைப் பட்டத்தையும், கொலம்பியா பல்கலைக்கழகத்தின் சர்வதேச மற்றும் பொது விவகாரப் பள்ளியில் முதுகலைப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

இந்நிலையில், கடந்த 10ம் திகதி ஜூலி சுங் இலங்கைக்கான தூதுவராக பிரதி இராஜாங்க செயலாளர் வெண்டி ஆர். ஷெர்மனால் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

## அமைச்சர் விமலின்...

பல நாட்களாக தனது கணக்கு ஹேக் செய்யப்பட்டதாகவும், இது குறித்து தான் ஏற்கனவே அறிவித்ததாகவும் தெரிவித்த அமைச்சர் கணக்கை முழுமையாக மீட்க முடியும் எனவும், எனினும் விசாரணைக்கு அழைப்பு விடுப்பதாகவும் அவர் தெரிவித்தார். கணக்கை ஹேக் செய்த நபரால் பல பதிவுகள் பகிரப்பட்டதாகவும், தன்னை விமர்சித்து இந்த பதிவுகளுக்கு நூற்றுக்கணக்கான கருத்துகள் வந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

## மைத்திரிபால சிறிசேன...

மேற்கொள்ளவுள்ளார். இம்மாநாட்டுக்கான அழைப்பிதழை, யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் நேற்று உத்தியோகபூர்வமாக கையளித்தார். இதன்போது, யாழ். மாவட்ட மக்கள் கடந்த காலத்தில் தமக்கு வழங்கிய ஆதரவை நினைவுகூர்ந்த மைத்திரிபால சிறிசேன, யாழ். மாவட்ட மக்களை சந்திப்பதற்கு ஆர்வமாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

## அமைச்சர் டளஸ்...

அரசாங்க வெளியீட்டுப் பணியகத்தை உத்தியோகபூர்வமாக இன்று திறந்து வைக்கவுள்ளாரென பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார். அதனையடுத்து யாழ்.மாவட்ட ஊடகவியலாளர்களின் சந்திப்பொன்றையும் மாவட்ட செயலகத்தில் நடத்தவுள்ளதாக அங்கஜன் இராமநாதன் எம்.பி தெரிவித்தார். அமைச்சர் டளஸ் அழகப்பெரும நேற்றையதினம் நெடுந்தீவுக்குச் சென்று அங்குள்ள பாடசாலையொன்றுக்கு மடிக்கணினிகளை அன்பளிப்பு செய்ததாகவும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் திறக்கப்படவுள்ள மேற்படி அரசாங்க வெளியீட்டுப் பணியகம் இன்று காலை 9,00 மணிக்கு அமைச்சரினால் உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது. இன்று யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்படும் அரசாங்க வெளியீட்டுப் பணியகம் நாட்டின் ஏழாவது கிளையாக அமையவுள்ளது.

அரசாங்க வெளியீட்டு ப் பணியகத்தின் பதிப்புகளை கொள்வனவு செய்வதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து மக்கள் கொழும்புக்கு வர வேண்டிய நிலைமைக்கு இதன்மூலம் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி பணியகம் யாழ்ப்பாணத்தில் திறக்கப்படுவதன் மூலம் பாடசாலை மாணவர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், சட்டத்தரணிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் பெரும் நன்மையடைய உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.(ஸ)

## கர்ப்பிணி தாய்மாருக்கு...

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்தியர் பிரியங்கர ஜயவர்தன இந்தக் கருத்துக்களை வெளியிட்டார். இதேவேளை, பூஸ்டர் தடுப்பூசி தொடர்பில் சமூகத்தில் பரவியுள்ள தவறான கருத்துக்கள் குறித்தும் பிசியோதெரபிஸ்ட் வைத்தியர் பிரியங்கர ஜயவர்தன கருத்து தெரிவித்தார். "கொவிட் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சில வகையான பாலியல் பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்புள்ளது, ஆனால் ஆண்மைக்குறைவு அல்லது மலட்டுத்தன்மை போன்ற பாலியல் ரீதியாக பரவும் நோய்கள் தடுப்பூசியால் ஏற்படுகின்றன என்பது இதுவரை நிரூபிக்கப்படவில்லை " என்றார்.

## எரிபொருள் விலையை...

செயற்பட இடமளிக்க முடியாது. அரசாங்கம் எரிபொருள் விலையை அதிகரிக்காவிட்டால் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மட்டுமன்றி பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு கடன் வழங்கும் அரச வங்கிக் கட்டமைப்பும் நெருக்கடியை எதிர்நோக்க நேரிடும் என அவர் தெரிவித்துள்ளார். அனைத்து பொருளாதார நெருக்கடி நிலைமைகளையும் இயல்பு நிலைக்கு கொண்டு வந்து அதனைப் பாதுகாக்க வேண்டுமானால் அரசாங்கம் உடனடியாக மேற்கொள்ள வேண்டிய செயற்பாடு எரிபொருள் விலைகளை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பதே என்றும் மத்திய வங்கியின் ஆளுநர் மேலும் தெரிவித்துள்ளார்.(ஸ)

## வெளிநாடு செல்வோருக்கு...

வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புகள் உட்பட பல்வேறு காரணங்களுக்காக செல்பவர்களுக்கு அந்தந்த நாடுகளுக்கு தேவைப்படும் வகையில் விரும்பினால் நான்காவது கொரோனா வைரஸ் தடுப்பூசியை பெற்றுக் கொடுக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். சம்பந்தப்பட்டவர்கள் வேண்டுகோள் விடுத்தால் அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், இலங்கையிலிருந்து அவுஸ்திரேலியாவுக்கு உயர்கல்வி கற்பதற்காக சென்ற மாணவர் குழு ஒன்றுக்கு இதற்கு முன்னர் அவ்வாறான விசேட கொரோனா வைரஸ் தடுப்பூசி பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை அவ்வாறான நாடுகளில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள கொரோனா வைரஸ் தடுப்பூசிகள் மற்றும் தடுப்பூசி செயற்பாடுகள் தொடர்பில் வெளிவிவகார அமைச்சு தமது பணியகத்துக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. (ஸ)

## 22–25 திகதி வரை...

மானியச் சட்டத்தின் கீழ் ஒரு ஒழுங்குவிதிகள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படவுள்ளது.

எதிர்க்கட்சிகளால் சமர்ப்பிக்கப்பட்ட ஒத்திவைப்புவேளை தீர்மானம் 23 புதன்கிழமையன்று நாள் முழுவதும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். வன விலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தில் திருத்தம் மற்றும் காடழிப்பு (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் தென்னை மரத்தை வர்த்தமானி அறிவிப்பில் வெளியிடுவதற்கான உத்தரவு எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழனன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் பல விதிமுறைகள் மற்றும் மூலோபாய அபிவிருத்தி திட்டங்கள் சட்டத்தின் கீழ் ஒரு உத்தரவு அன்றைய தினம் பாராளுமன்றத்தில் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளன.

எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று, மறைந்த பல பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதான இரங்கல் தெரிவிக்கப்படும்.

## டி.ஆர். விஜேவர்தனவின்...

கொழும்பு கோட்டை, சம்புத்தாலோக்க விஹாராதிபதி பேராசிரியர் இத்ததெமலியே இந்திரசார தேரர் மற்றும் ஹுனுபிட்டிய கங்காராம விஹாராதிபதி கலாநிதி கிரிந்தே அஸ்ஸஜி தேரர் ஆகியோரின் உபதேசங்களுக்கமைய லேக்ஹவுஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் பௌத்த சங்கத்தின் வழிகாட்டலுடன் இந்த நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இன்று18 ஆம் திகதி இரவு முழுவதும் பிரித் பாராயணம் நடைபெற உள்ளதோடு நாளை19 ஆம் திகதி மதியம் பிக்குமாருக்கான பூஜை நடைபெறும்.

## யாழ். மயிலிட்டி துறைமுகத்தின்...

நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு புனரமைப்பு பணிகளை அங்குரார்ப்பணம் செய்து வைத்தபின் உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

துறைமுகத்தை கட்டும்போது அப்பிரதேசத்தின் கடற்றொழில் அமைப்புக்களுடன் கலந்துரையாடியே அமைப்பது வழமை. அதேபோன்றே இங்குள்ள கடற்றொழில் அமைப்புகளுடன் கலந்துரையாடி முதலாவது கட்டம் மேற்கொளப்பட்டது. ஆனாலும் அதில் சில குறைபாடுகள் காணப்படுகின்றன. ஆனால் தற்போது எமது அரசாங்கத்தால் அதன் இரண்டாம் கட்ட பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன்போது கடந்த காலத்தில் விடப்பட்ட அனைத்து குறைபாடுகளும் கவனத்தில் கொள்ளப்பட்டு நவீனத்துவத்துடன் கூடியதாக நிர்மாணிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை உறுதியாகக் கூறுகின்றேன் என்றார்.

## மின்சார சபைக்கு நிலுவை...

4,400 கோடி ரூபா மின்சார சபைக்கும் மேலும் 600 கோடி ரூபா தனியார் மின்சார நிறுவனத்திற்கும் மின் பாவனையாளர்களால் நிலுவைக் கட்டணமாக வழங்க வேண்டியுள்ளதாக பொது பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

அத்தகைய மின் பாவனையாளர்கள் இந்த மாதத்தில் கண்டிப்பாக தமது மின் கட்டணத்தை செலுத்த வேண்டுமென்றும் நிலுவைக் கட்டணத்தை செலுத்துவதற்கு மூன்று மாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் மூன்று பகுதியாக அதனை செலுத்துவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு மின் கட்டணங்களை செலுத்த தவறுமிடுத்து மின் கட்டணத்தை அறவிடுவதற்காக நடைமுறையில் உள்ள வழிமுறைகளை பின்பற்றும் வகையில் மின் துண்டிப்பு ஏற்படுத்தப்பட்டு அதையடுத்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பொது பயன்பாட்டு ஆணைக்குழு மேற்படி நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். நாடு தேசிய மின் உற்பத்தியில் நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இச் சந்தர்ப்பத்தில் மின் பாவனையாளர்கள் மின்சாரத்தை மிகவும் சிக்கனமாக பாவிப்பதுடன் உரிய முறையில் மின் கட்டணங்களை செலுத்தி மின்சார சபைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(ஸ)

# NCE ஏற்றுமதி விருதுகள் 2021 இரட்டை தங்கம் வென்ற 99x

### உங்கள் நிறுவனத்தின் முன்னேற்றத்திற்கு இந்த விருது எந்தளவுக்கு பங்களிக்கின்றது?

99x , ICT சேவைகளில் (பரந்த வகை) ஐந்து ஆண்டுகளாக தங்கத்தைப் பெற்றுள்ளது மற்றும் இரண்டு ஆண்டுகளாக சிறந்த பெறுமதி கூட்டப்பட்ட ஏற்றுமதியாளர் - சேவைகளுக்காக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. வருடா வருடம் ஏற்றுமதி சந்தைகளில் எங்களின் முயற்சிகளின் தொடர்ச்சியான விமர்சனமாக இதை நாங்கள் பார்க்கிறோம், புதிய வாடிக்கையாளர்களை உள்வாங்கவும், புதிய சேவைகளை தொடங்கவும் மற்றும் புதிய சந்தைகளில் ஈடுபடவும் நாங்கள் முயற்சி செய்கிறோம். கடந்த ஆண்டில் மட்டும், நாங்கள் இதுவரை வேறு எந்த ஆண்டிலும் இல்லாத அளவுக்கு அதிகமான வாடிக்கையாளர்களை உள்வாங்கி, புதிய செயற்பாடுகளில் இறங்கி, ஸ்காண்டிநேவிய தனியார் நிறுவனத்திடமிருந்து 20 மில்லியன் அமெரிக்கன் டொலர் முதலீட்டைப் பெற்றோம். இலங்கையின் தேசிய ஏற்றுமதியாளர் சம்மேளனம் போன்ற மதிப்பிற்குரிய நிறுவனங்களின் அங்கீகாரம் அத்தகைய மைல்கற்களை எட்டுவதற்கு எமக்கு ஆதரவளிக்கிறது. கூடுதலாக, இது தொழில்துறையில் சிறந்தவர்களுக்கு எதிராக நம்மைத் தரப்படுத்த அனுமதிக்கும் ஒரு தளமாகும்.




### மென்பொருள் என்பது புதிய போக்குகளுக்கு ஏற்ப மனித வளங்களுக்கான பற்றாக்குறையுடன் வளர்ந்து வரும் ஒரு துறையாகும். நீங்கள் ஐரோப்பிய வாடிக்கையாளர்களுடன் பணிபுரியும் ஒரு நிறுவனம். மனித வளப் பற்றாக்குறையின் சவாலை எவ்வாறு சமாளிப்பது?

இதற்கான 99x இன் அணுகுமுறை பன்முகத்தன்மை கொண்டது. நாங்கள் "மக்கள் முதல் அணுகுமுறை"யைப் பின்பற்றுகிறோம், மேலும் புதுமை செழித்து வளரும் திறந்த மற்றும் மாறுபட்ட பணியிடத்தை உருவாக்குவதில் அதிக கவனம் செலுத்துகிறோம். எங்களின் முயற்சிகள், சிறந்த திறமையாளர்களை ஈர்க்கும் வகையில், மாற்றியுள்ளது. உலகெங்கிலும் உள்ள எங்கள் வாடிக்கையாளர்கள், தினசரி அடிப்படையில் அவர்களுடன் நெருக்கமாகப் பணியாற்றும் எங்கள் நபர்களால் காட்டப்படும் திறமை மற்றும் நிபுணத்துவத்தால் தொடர்ந்து ஈர்க்கப்படுகிறார்கள்.

ஆரம்ப நிலையிலேயே இளம் திறமைகளை வளர்ப்பதன் முக்கியத்துவத்தையும் நாங்கள் புரிந்துகொள்கிறோம். 99x பணியாளர்களுக்கு புதிய திறமைகளை புகுத்துவதில் எங்களின் உள்ளகப் பயிற்சி முக்கிய பங்கு வகிக்கிறது. தீவு முழுவதும் உள்ள 20க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுடன் நாங்கள் வலுவான உறவுகளைப் பேணுகிறோம் மற்றும் பல்கலைக்கழக பாடத்திட்டங்களை வலுப்படுத்த கல்வியாளர்களுடன் நெருக்கமாக பணியாற்றுகிறோம். எங்கள் ஊழியர்களால் இயக்கப்படும் அர்ப்பணிப்புள்ள குழு, தொற்றுநோய்களின் போது கூட, ஆண்டுதோறும் 3,000+ இளங்கலைப் பட்டதாரிகளைச் உருவாக்கின்றது, பல பட்டறைகள், நேரடிப் பயிற்சிகள், நேர்காணல்கள் மற்றும் பலவற்றை நடத்துகிறது. 600 இளங்கலைப் பட்டதாரிகள் கிட்டத்தட்ட பதிவுசெய்யும் மிகப் பெரிய நிகழ்நிலை நிகழ்வு ஒன்றை நாங்கள் சமீபத்தில் நடத்தினோம் - UCSC யிலிருந்து வெற்றி பெற்ற முழு அணியும் MacBook Pros வென்றது. இந்த அனைத்து முயற்சிகளும் மேலும் பலவும் 99ஓ க்குள் மட்டுமல்ல, இலங்கை தகவல் தொழில்நுட்பத் துறை முழுவதிலும் உள்ள திறமைகளை மேம்படுத்தவும் அளவிடவும் உதவுகின்றன.


99x நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி (CEO) மனோ சேகரம்

### மென்பொருள் துறை வேகமாக முன்னேறி வரும் தொழில் வாடிக்கையாளர்களின் தேவைகளை விரைவாகப் பூர்த்தி செய்வது எப்படி?

புதிய தொழில்நுட்பம் மற்றும் போக்குகளை வணிக சூழ்நிலைகளில் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை ஆராய்வதில் எங்கள் ஆராய்ச்சி குழு தீவிரமாக செயல்படுகிறது. எங்களின் வாடிக்கையாளர்கள் தீர்வுகளுக்காக எங்களிடம் வருவார்கள் என்று காத்திருப்பதற்குப் பதிலாக, அவர்களின் தற்போதைய தயாரிப்புகள், சேவைகள் மற்றும் செயல்முறைகளை மேம்படுத்துவதற்கான வழிகளுடன் அவர்களை அணுகுவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம். பிக் டேட்டா உந்துதல் முன்கணிப்பு சேவையை செயல்படுத்துவதற்காக வாகன ஆய்வுகளில் நோர்வேயின் சந்தையில் முன்னணி வகிகக்கும் நிறுவனத்துடன் 99x ஆராய்ச்சிக் குழு வேலை செய்தது இதற்கு சமீபத்திய உதாரணம்.

நீங்கள் சொன்னது போல், தகவல் தொழில்நுட்பத் துறையானது தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருகிறது, மேலும் எங்கள் பணியாளர்கள் IT வல்லுநர்களாக வெற்றிபெற உலகளாவிய தொழில்நுட்ப வளர்ச்சியில் தொடர்ந்து இருக்க வேண்டும். பயிற்சி மற்றும் வழிகாட்டுதல் இங்கு முக்கிய பங்கு வகிக்கிறது. வழிகாட்டுதல் அனைத்து மட்டங்களிலும் ஒரு கட்டமைக்கப்பட்ட வழியில் நடக்கிறது, எங்கள் உள்ளகப் பயிற்சித் திட்டம் முதல் முன்னணி நிலை வரை அனைத்து ஊழியர்களுக்கும் வழங்கப்படும் தலைமைத்துவ மற்றும் மென்மையான திறன் மேம்பாட்டிற்கு கூடுதலாக, அவர்களின் தொழில்நுட்ப திறன்களை மேம்படுத்துவதற்காக மதிப்பீட்டு செயல்முறையின் போது மேம்படுத்தப்படவேண்டிய பகுதிகள் அடையாளம் காணப்படுகின்றன். நேரடியாக எங்கள் மனிதவள மற்றும் தொழில்நுட்பத் துறைகளை அணுகி தங்களுக்கும் அவர்கள் வழிநடத்தும்.·. வழிகாட்டியுள்ள சக ஊழியர்களுக்கும் பயிற்சிகளைக் கோருவதற்கான சுதந்திரம் உள்ளது.

நமது கண்டுபிடிப்புகளின் மிகப் பெரிய உந்துசக்தி நமது மக்களே என்பதை நாம் பார்த்திருக்கிறோம். புதிய தொழில்நுட்ப வளர்ச்சிகளை ஆராய்வதற்கும், உலகளாவிய டிஜிட்டல் தீர்வுகளில் அவற்றைச் செயல்படுத்துவதற்கும் நாங்கள் வழிகளை உருவாக்கும்போது, புதிய தொழில்நுட்பங்களைக் கற்றுக்கொள்வது மற்றும் எங்கள் சர்வதேச வாடிக்கையாளர்களுக்கு தொடர்ச்சியான புதிய சலுகைகள் மற்றும் சேவைகளை உந்துசக்தியாகக் கொண்ட சமீபத்திய போக்குகளைப் புரிந்துகொள்வது அவர்களின் ஆர்வமும் உந்துதலும் ஆகும்.

### இந்த நிறுவனத்தை நிறுவியதன் பின்னணி என்ன?

99x இன் வெற்றிக்கு ஒருவரைக் காரணம் கூற முடியாது. 'நாங்கள் ஒரு குழவாகச் செயற்படும் வீரர்கள்' என்பது எங்கள் குறிக்கோள், இது நாங்கள் செய்யும் எல்லாவற்றிலும் உண்மையாக இருக்கும். நிறுவனத்தின் அமைப்பும், 'பதவிகள் இல்லாத தலைவர்களாக' இருக்க வேண்டும் என்ற எங்கள் பணியாளர்களை ஊக்குவிப்பதும், பயிற்சியாளர் முதல் தொழில்நுட்ப முன்னணி வரை அனைத்து நிலைகளிலும் உள்ள ஊழியர்களை 99x இன் பெருநிறுவன இலக்குகளை அடைவதில் தீவிரமாக பங்களிக்க அனுமதிக்கிறது. இந்த அளவிலான அதிகாரமளித்தல் என்பது, தற்போது 400க்கும் மேற்பட்டவர்கள் நிறுவனத்தின் வெற்றிக்கு பங்களிக்கின்றனர், மேலும் எங்களது 15+ வருட பயணத்தின் ஒரு பகுதியாக இருந்த பலரையும் குறிப்பிட வேண்டும்


99x பிரதம சந்தைப்படுத்தல் மற்றும் கூட்டாண்மை விவகார அதிகாரி கிறிஷான் டி மெல் (இடப்புறம்) மற்றும் 99x பிரதம நிதி அதிகாரி ஷெர்மன் குணதிலக்க (வலது) ஆகியோர் சிறந்த பெறுமதி கூட்டப்பட்ட ஏற்றுமதியாளர் சேவைகளுக்கான விருதை பெற்றபோது...


99x பிரதம செயற்பாட்டு அதிகாரி ஷெஹானி செனவிரத்ன (இடது) மற்றும் 99x தலைமை வர்த்தக அபிவிருத்தி அதிகாரி பிரசாத் மகாலிங்கம் (வலது) NCE விருது வழங்கும் விழாவில் ICT சேவைகளில் (அதிக-பெரிய வகை) தங்க விருதை ஏற்றுக்கொண்டனர்.

### நிறுவனத்தில் பணியாளர் திருப்தி எவ்வாறு அடையப்படுகிறது என்பதை விளக்கவும்.

அனைவருக்கும் சிறந்த பணியிடத்தை உருவாக்குவதில் 99x கவனம் செலுத்துகிறது. பணியாளர் ஈடுபாட்டின் நிலைதான் ஒரு சிறந்த பணியிடத்தை தனித்துவமாக நிற்க வைக்கிறது.

பணியாளர்கள் எந்தவிதமான விளைவுகளுக்கும் பயப்படாமல், திறமையான மாற்றுகளுடன் நெறிமுறைகளை சவால் செய்ய முடியும். இத்தகைய சூழல் 'பதவிகள் இல்லாத தலைவர்களை' வளர்க்கிறது.

இரண்டாவதாக, பணியாளர்கள் தங்கள் திறமைகளை சிறப்பாகச் செயல்படுத்த, ஒரு கலாச்சார சூழலில் சேர்ந்த உணர்வை உணர வேண்டும். நம்பிக்கை என்பது ஒரு சிறந்த பணியிடத்தின் வரையறுக்கும் கொள்கையாகும், இது தலைமையின் நம்பகத்தன்மையின் மூலம் உருவாக்கப்பட்டது. ஊழியர்கள் தாங்கள் நடத்தப்படுவதை உணரும் மரியாதை மற்றும் நேர்மை, பாராட்டு மற்றும் பணியாளர் தோழமையைக் கொண்டுவரும் ஆற்றல் அளவுகள் அனைத்தும் வேலை செய்வதற்கான சிறந்த இடத்தின் சாரமாக அமைகின்றன.


## 2021 வருடாந்த ஏற்றுமதியாளர் விருது விழா இரட்டை தங்க விருது வெற்றியாளர்...



**Best Value-added Exporter - Services Sector,**
**Best in ICT/BPM & Services Sector**

99x

We create impactful digital products!

99x.io


இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி.ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 பெப்ரவரி மாதம் 18ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.




# வடக்கு மாகாண மக்கள் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடல்



**கோப்பாய் குறூப் நிருபர்**

வடக்கு மாகாணத்தில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பில் துறைசார்ந்த அதிகாரிகள் மற்றும் சமூக அமைப்புகளுடன் வெளிப்படைத்தன்மையுடன் கலந்துரையாடல் நடத்தப்படும் என வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

வடமாகாணத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள சிவில், துறைசார் குழுக்களுடன் இக்கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

வடமாகாண ஆளுநர் செயலகத்திற்கு வழங்கிய முறைப்பாடுகள் தொடர்பில் வெளிப்படைத்தன்மையுடன் மக்கள் மத்தியில் விவாதிக்கப்படவுள்ளது.

சமைத்த உணவின் விலை, தொழில்முனைவோர், கூட்டுறவு சங்கங்களை ஊக்குவித்தல், பண்ணை விலை மற்றும் காய்கறிகளின் சில்லறை விலை, விவசாயிகளுக்கான செலவுகள், விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்கள், அத்தியாவசிய உள்ளீடுகளின் செலவுகள், விவசாய சேவைகள் துறை, வடமாகாண விவசாய அமைச்சகத்தின் திட்டங்கள், படகுகள் பழுது, நிதியுதவி, நங்கூரம், குளிர்பானம், தொழில், திட்டங்கள் ஆகியவை குறித்து வெளிப்படையாக விவாதிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.



தும்பளை புனித லூர்து அன்னை திருவிழா யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் அண்மையில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள்.

## அரசாங்க வெளியீடு பணியகத்தின் கிளை யாழ். செயலக பிரிவில் இன்று ஆரம்பம்

அரசாங்க வெளியீடு பணியகத்தின் யாழ்.மாவட்டத்திற்கான கிளை இன்று காலை 09 மணிக்கு ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெருமவினால் யாழ்ப்பாண மாகாண செயலக பிரிவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அரசாங்க வெளியீடு பணியகத்தின் இலங்கையில்; 07 வது பிரிவாக ஆரம்பிக்கும் இக்கிளை மூலம் பாடசாலை மாணவர்கள், சட்டத்தரணிகள், அரசாங்க உத்தியோகஸ்தர்கள் போன்ற அரசாங்க வெளியீடுகளின் தேவைகள் உள்ளவர்களுக்குப் பயனாக அமையவுள்ளதுடன் அரசாங்க வெளியீடுகள் வாங்குவதற்காக யாழ்ப்பாணத்தில் வாழும் மக்களுக்குக் கொழும்புக்கு வர நேர்ந்ததுடன் இக்கட்டான யுகம் இத்துடன் முடிவடையும் என்பது குறிப்பிடத்தக்கது.

## வடக்கு மாகாணத்தில் புதிதாக 13 தொற்றாளர்கள்

**கரவெட்டி தினகரன் நிருபர்**

கொரோனா தொற்றால் யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை ஒருவர் உயிரிழந்ததுடன் வடக்கு மாகாணத்தில் புதிதாக 13 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் ஆய்வுகூடத்தில் நடத்தப்பட்ட சோதனையிலேயே இவ்விடயம் வெளியானது.

பரிசோதனை முடிவின்படி குப்பிழான் தெற்கை சேர்ந்த 65 வயதான அம்பலவாணர் சுசீலா என்பவரே உயிரிழந்துள்ளதாக அறிய முடிகின்றது. இதுதவிர, யாழ். போதனா மருத்துவமனையில் 10 பேருக்கும், கிளிநொச்சி பொது மருத்துவமனையில் இருவருக்கும், நொதேர்ன் சென்றல் தனியார் மருத்துவமனையில் ஒருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

# நோர்வே வதிவிடப்பிரதிநிதி மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு விஜயம்

### அரசாங்க அதிபருடன் பல்வேறு திட்டங்கள் குறித்து ஆராய்வு



**(மன்னார் குறூப் நிருபர்)**

நோர்வே நாட்டின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி டிரைன் ஜோரான்லி எஸ்கெடல் (Trine Joranli Eskedal) நேற்று வியாழக்கிழமை (17) மன்னாருக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு விஜயம் செய்த நோர்வே நாட்டின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி டிரைன் ஜோரான்லி எஸ்கெடல் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ. ஸ்ரான்லி டிமெலுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இதன்போது மன்னாரில் இடம் பெறும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது. தொடர்ந்து மன்னாரில் முன்னெடுக்கப்பட வேண்டிய தேவைகள் குறித்தும் அரசாங்க அதிபரிடம் கேட்டறிந்து கொண்டார். மன்னார் மாவட்டத்தில் பெண்கள் அபிவிருத்தி தொடர்பாக தான் கவனம் செலுத்துவதாகவும் மாவட்ட பெண்களின் நிலை குறித்தும் கலந்துரையாடியுள்ளார்.

மேலும் மன்னார் பகுதிகளில் இந்திய மீனவர்களின் பிரச்சினை , பறவைகள் சரணாலயம் , காற்றாலை மின்சாரம் , கழிவு மீன் திரவ உரம் தயாரிப்பு, மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்தும் அரசாங்க அதிபரிடம் கலந்துரையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையின் சிறந்த வர்த்தக நாம ஏற்றுமதியாளராக

### தேசிய ஏற்றுமதி விருது விழாவில் முடிசூடியது மஞ்சி

மஞ்சி, இலங்கையில் சிறந்த வர்த்தகக் நாம ஏற்றுமதியாளராக 29ஆவது தேசிய ஏற்றுமதி விருது விழாவில் (NCE Export Awards) விருதை வென்றது. உலகின் அனைத்து கண்டங்களிலும் தமது உற்பத்தி ஏற்றுமதியை விரிவுபடுத்தி இருக்கும் மஞ்சி இந்நாட்டின் மிகப்பெரிய பிஸ்கட் ஏற்றுமதியாளராக கருதப்படுகின்றது. தேசிய ஏற்றுமதி சபையினால் ஏற்பாடு செய்யப்படுகின்ற NCE தேசிய ஏற்றுமதி விருது விழா அண்மையில் கொழும்பில் இடம்பெற்றது.

ஏற்றுமதி செயற்பாடுகளில் செயல்திறனை வெளிப்படுத்துகின்ற இலங்கை ஏற்றுமதியாளர்களை பாராட்டுவதற்கும் மற்றும் கௌரவிக்கும் நோக்கிலும் NCE தேசிய ஏற்றுமதி விருது விழா ஏற்பாடு செய்யப்படுகிறது. இம்முறை விருது விழா எழுவோம், மீண்டும் கட்டியெழுப்புவோம் மற்றும் மீண்டும் கையகப்படுத்துவோம் என்ற தொனிப்பொருளை அடிப்படையாகக் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதேவேளை பாரிய அளவான இனிப்புப் பண்டங்கள் ஏற்றுமதியாளர்கள் பிரிவில் சிறந்த ஏற்றுமதியாளருக்கு வழங்கப்படும் தங்க விருதை மஞ்சி தட்டிச்சென்றது. இதற்கு முன்னர் மஞ்சி வர்த்தக நாம தாய் நிறுவனமான CBL நிறுவனம் இலங்கையின் சிறந்த ஏற்றுமதியாளராக விருது வென்றிருப்பதும் சிறப்பம்சமாகும்.

இந்த NCE தேசிய ஏற்றுமதி விருது விழாவுக்காக விருதுக்குரியவர்களை தேர்வு செய்வது சுயாதீன தொழில்முறை நடுவர் குழு மற்றும் தொழில்நுட்பக் குழு ஒன்றைக் கொண்ட சிறப்புத் தேர்வுக் குழு மூலம் மேற்கொள்ளப்படுவதோடு அதற்கு பிரபல கணக்காய்வு நிறுவனமான அர்னஸ்ட் அன்ட் யங் நிறுவனத்தின் உதவியும் பெறப்பட்டுள்ளது. NCE தேசிய ஏற்றுமதி விருது மூலம் இலங்கையின் சிறந்த ஏற்றுமதியாளர்கள் மற்றும் அவர்கள் பொருளாதாரத்திற்கு ஆற்றுகின்ற முக்கிய பங்களிப்பை பாராட்டுவது மற்றும் அங்கீகரிப்பது மாத்திரமன்றி ஏனைய ஏற்றுமதியாளர்களுக்கும் அளவுகோல்களை தயாரிப்பதற்கு முக்கிய பங்களிப்பு வழங்கப்படுகிறது.

இம்முறை விருது விழாவுக்காக வெற்றியாளர்கள் தேர்வு செய்யப்பட்டது அவர்கள் மூலம் வழங்கப்பட்ட விபரங்களை மிக உன்னிப்பாக மதிப்பீட்டுக்கு உட்படுத்தியும் ஏனைய போட்டியாளர்களுடன் ஒபபிடுகையில் மிகச்சிறந்தவரை உறுதி செய்யும் சான்றிதழாகவும் அமைகிறது என்று தேசிய ஏற்றுமதி சபை விருது வென்றோரை அறிவித்த பின் குறிப்பிட்டது.

வெற்றிகள் தொடர்பில் கருத்துக்கூறிய CBL நிறுவனத்தின் ஏற்றுமதி பணிப்பாளர் நதீஜ கருணாதிலக்க இவ்வாறு குறிப்பிட்டார். "ஆண்டின் சிறந்த வர்த்தக நாம ஏற்றுமதியாளருக்கு உரிய விருது போன்று சிறந்த பாரிய அளவிலான இனிப்புப் பண்டங்கள் ஏற்றுமதியாளராக தங்க விருதையும் வெல்வதற்கு கிடைத்தது பெரும் மகிழ்ச்சியாகும். கடந்த இரண்டு ஆண்டுகளுக்குள் உலகளாவிய மற்றும் தேசிய அளவில் ஏற்றுமதியாளராக முகம்கொடுக்க வேண்டி ஏற்பட்ட சவால்கள் தொடர்பில் பார்க்கும்போது உண்மையில் இதனை ஒரு மிகப்பெரிய வெற்றியாக பார்க்க முடியும். வர்த்தகக் நாமம் ஒன்றாக அனைத்துத் துறைகளினதும் தரம் தொடர்பில் தொடர்ச்சியாக காண்பிக்கின்ற அர்ப்பணிப்பு காரணமாக மஞ்சி இவ்வாறான சிறப்பை கைப்பற்ற முடிந்திருப்பது முக்கியமானதாகும். இதனால் இலங்கையின் பெருமையை உலகெங்கும் கொண்டு செல்வதற்கு மஞ்சியினால் முடிந்துள்ளது. பாரம்பரியம் அற்ற உற்பத்தி ஒன்றாக மஞ்சி இலங்கையின் பாரம்பரிய ஏற்றுமதி பொருட்களுக்கு நிகராக நினறு உலகின் அவதானத்தை வெல்வதற்கு முடிந்திருப்பது நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் புதிய எதிர்பார்ப்பை உருவாக்கியுள்ளது. இந்த சந்தர்ப்பத்தில் மஞ்சி வர்த்தகக் நாமம் தொடர்பில் நம்பிக்கை வைத்த பெரும் எண்ணிக்கையான வாடிக்கையாளர்கள், விநியோகஸ்த முகவர்கள், வர்த்தகர்கள் உட்பட அனைத்துத் தரப்பினருக்கும் தமது வாழ்த்துகளைத் தெரிவித்த நதீஜ கருணாதிலக்க இந்த மாபெரும் வெற்றிக்காக மஞ்சி வர்த்தகக் நாமத்தை எடுத்துச் சொல்வதில் அவர்கள் பங்களிப்புச் செய்திருப்பதாக குறிப்பிட்டார்.

ஆரம்பம் தொடக்கம் மஞ்சி, வர்த்தக நாமம் ஒன்றாக சர்வதேச சந்தையில் தனது பரப்பை விரிவுபடுத்துவது தொடர்பில் அவதானம் செலுத்தியது முக்கியமாக கவனிக்கத்தக்கது. இந்த ஈடுபாடு காரணமாக எப்போதும் உள்நாட்டு வாடிக்கையாளர்களுக்கும் தரத்தில் உயர்ந்த அதேபோன்று புத்தாக்க தயாரிப்புகளை அனுபவிப்பதற்கு முடிந்தது. இதனிடையே ஏற்றுமதி சந்தையில் உயர்கின்ற கேள்விக்கு வழங்கலை மேற்கொள்வதற்கு சிறப்பு உற்பத்தியகம் ஒன்றைக் கொண்ட இலங்கையின் ஒரே பிஸ்கட் உற்பத்தியாளராகவும் மஞ்சி நிறுவனம் உள்ளது. இந்த உற்பத்தித் தொழிற்சாலை ஏற்றுமதி சபைக்குச் சொந்தமான சீதாவக ஏற்றுமதி வலயத்தில் நிறுவப்பட்டுள்ளது.



இலங்கையில் சிறந்த வர்த்தகநாம ஏற்றுமதியாளர் விருதுடன் ரசித் விக்கிரமசிங்க (குழும பணிப்பாளர்- பொறியில் மற்றும் IT) மற்றும் நலின் பி. கருணாரத்ன (சிலோன் பிஸ்கட் லிமிடெட் (CBL) பணிப்பாளர்/ CEO).



ஏற்றுமதி சந்தையில் அதிகரித்து வரும் கேள்வியை கருத்தில் கொண்டு அவிசாவளை ஏற்றுமதி செயற்பாட்டு வலயத்தில் உருவாக்கப்பட்டுள்ள மஞ்சி உற்பத்தி நிலையம்

# மன்னார் மாவட்டத்தில் கொரோனா தொற்று தீவிரம்; 16 நாட்களில் 377 தொற்றாளர்கள்



மன்னார் மாவட்டத்தில் கடந்த 16 நாட்களில் 377 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவ்வருடம் இதுவரையிலான காலப்பகுதியில் 578 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று (17) வியாழக்கிழமை காலை இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,,,,

மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை (16) மேலும் புதிதாக 12 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். பெப்ரவரி மாதம் தற்போது வரையிலான காலப்பகுதியில் 377 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்வருடம் மொத்தமாக 578 கொரோனா தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கொரோனா தொற்றால் பெப்ரவரி மாதம் மூன்று மரணங்கள் நிகழ்ந்துள்ளன.

தற்போது வரை மன்னார் மாவட்டத்தில் கொரோனா தொற்றால் 39 பேர் மரணித்துள்ளனர்.

ஓமிக்ரோன் அலை பரவல் தொடங்கியதில் இருந்து மன்னார் மாவட்டத்தில் மூன்று மரணங்கள் ஏற்பட்டுள்ளன. ஒவ்வொரு 120 நோயாளர்களுக்கும் ஒருவர் என்ற வகையில் இறப்பு இடம் பெற்றுள்ளது.

இது டெல்டா அலை பரவும் போது ஏற்பட்ட இறப்புகளுடன் ஒப்பிடும் போது குறைவாக இருந்தாலும், இது கருத்திற் கொள்ளப்பட வேண்டிய தொன்றாகும்.

எனவே பொதுமக்கள் தமது 2 ஆவது தடுப்பூசியை பெற்றுக் கொண்டு மூன்று மாதங்கள் நிறைவடைந்திருந்தால் கட்டாயமாக 3 வது தடுப்பூசியை பெற்றுக் கொள்ள வேண்டும்.ஏனைய சுகாதார வழிமுறைகளையும் கடைபிடிக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம் என்றார்.



இலங்கையின் முன்னணி தன்னார்வு தொண்டு நிறுவனமாகவும் அரச சார்பற்ற (NGO) அமைப்புமான பூமணி அம்மா அறக்கட்டளைக்கான பொது மக்கள் தொடர்பாக பணிமனை நேற்று யாழ்ப்பாணம்,கொட்டடி, சிவன் பண்ணை வீதியில் திறந்து வைக்கப்பட்டது. இதன்போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம்.

## கட்டுத்துவக்கு வெடித்ததில் குடும்பஸ்தவர் படுகாயம்

**(பரந்தன் குறூப் நிருபர்)**

முல்லைத்தீவு நட்டாங்கண்டல் கொம்பு வைத்த குளம் பகுதியில் கட்டுத்துவக்கு வெடித்ததில் குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்த நிலையில் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட நட்டாங்கண்டல் கொம்பு வைத்த குளம் பகுதியில் வயலுக்குச் சென்று திரும்பிய குடும்பஸ்த்தர் ஒருவர் கட்டுத்துவக்கில் சிக்கி காலில் காயமடைந்த நிலையில் மல்லாவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# அல்லாஹ்வையும், தூதரையும் நேசிப்பதன் முக்கியத்துவம்

சர்வ வல்லமை படைத்த அல்லாஹ்வையும் அவனது இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களையும் நேசிப்பதும் அவர்களது கட்டளைகளையும் வழிமுறைகளையும் வாழ்வின் எல்லா சந்தர்ப்பங்களிலும் எடுத்து நடப்பதும் அல்லாஹ்வும் அவனது தூதரும் காட்டித்தராத அம்சங்களையும் தடுத்து வெறுத்த விடயங்களையும் வாழ்க்கையிலிருந்து விலகி நடப்பதும் ஒவ்வொருவரதும் பொறுப்பாகும். இவை இஸ்லாத்தின் முக்கிய அம்சங்களாகும்.

நாம் அவ்விருவரையும் நமது உயிர், உடைமைகளை விடவும் பெற்றோர் குடும்பத்தாரையும் விடவும் வியாபாரம், சொத்து செல்வங்கள், உடன்பிறப்புகளை விடவும் நேசிக்க வேண்டும். அவர்கள் மீதான அன்பும் நேசமும் ஏனைய எல்லாவற்றை விடவும் முதன்மையானதாக இருக்கவேண்டும். இத்தகைய நேசமே பரிபூரண இறைநம்பிக்கையின் அடையாளமாக அமையும். இதனையே அல் குர்ஆன் இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றது.

'உங்கள் பெற்றோரும் உங்கள் பிள்ளைகளும் உங்கள் சகோதரர்களும் உங்கள் வாழ்க்கைத் துணைவியரும் உங்களின் குடும்பத்தாரும் நீங்கள் திரட்டிய செல்வங்களும் நீங்கள் நஷ்டத்தை அஞ்சுகிற வியாபாரமும் நீங்கள் விரும்புகிற வசிப்பிடங்களும் இறைவனை விடவும், அவனது தூதரை விடவும், அவன் இறைபாதையில் செல்வதை விடவும் உங்களுக்கு அதிக விருப்பமானவையாக ஆகிவிட்டால் இறைவன் தனது கட்டளையைப் பிறப்பிக்கும் வரை காத்திருங்கள் என்று அல்லாஹ் கூறுகின்றான்.

**(அல் குர்ஆன் 9: 24)**

இது குறித்து நபி (ஸல்) அவர்கள் பல சந்தர்ப்பங்களில் உதிர்த்த பொன்மொழிகள் வரலாற்றில் அழியாத்தடம் பதித்த நபிமொழிகளாக விளங்கிக் கொண்டிருக்கின்றன.

'உங்களில் ஒருவருக்கு அவரின் தந்தை, அவரின் குழந்தைகள், ஏனைய மக்கள் அனைவரை விடவும் நான் மிக நேசமானவராகும் வரை அவர் உண்மையான இறைநம்பிக்கையாளராக மாட்டார்' என நபி (ஸல்) கூறினார்கள்'. **(ஆதாரம்: புகாரி)**

அதேநேரம் அப்துல்லாஹ் பின் ஹிஷாம் (ரலி) அவர்கள், 'நாங்கள் நபி (ஸல்) அவர்களுடன் இருந்து கொண்டிருந்தோம். அப்போது நபியவர்கள் உமர் (ரலி) அவர்களின் கையைப் பிடித்துக் கொண்டிருந்தார். அச்சமயம் உமர் (ரலி) அவர்கள் நபியவர்களிடம் 'இறைத்தூதரே! எனது உயிரைத் தவிரவுள்ள எல்லாவற்றையும் விட நீங்களே எனக்கு நேசமானவர்கள்' என்றார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் 'இல்லை, என் உயிர் எவன் கைவசம் உள்ளதோ அவன் மீது சத்தியமாக.. உமது உயிரை விடவும் நானே உமக்கு மிகவும் பிரியமானவராக ஆகும் வரை நீர் உண்மை இறைவிசுவாசியாக முடியாது' என்றார்கள். உடனே உமர் (ரலி) நபியை நோக்கி 'இப்போது இறைவனின் மீதாணையாக! எனது உயிரை விடவும் தாங்களே எனக்கு மிகவும் நேசமானவர்கள்' என்றார். 'இப்போதுதான் உமரே! சரியாகச் சொன்னீர்' என நபி (ஸல்) கூறினார்கள்.'

**(ஆதாரம்: புகாரி)**

**அஷ்ஷெய்க்**
**ஏ.எச்.எம். மின்ஹாஜ் முப்தி (காஷிபி)...**

அல்லாஹ்வையும் அவனது இறைத்தூதரையும் நேசிப்பது என்பது அல்லாஹ்வும் அவனது தூதரும் காட்டித்தந்த முறையில் நேசிப்பதாகவே அமைந்திருக்க வேண்டும். அல்லாஹ்வையும் அவனது தூதரையும் நேசித்தல் என்ற பெயரில் மற்றவர்களை நிந்திப்பதோ இகழ்வதோ இடையூறு விளைவிப்பதோ இஸ்லாம் காட்டித்தந்த வழிமுறையல்ல.

இருவரையும் நேசிப்பதானது, அவர்கள் இருவரையும் எமது வாழ்வின் எல்லா நிலையிலும் குறிப்பாக சொல்லிலும் செயலிலும் இன்பத்திலும் துன்பத்திலும், இலாபத்திலும் நஷ்டத்திலும், செழுமையிலும் வறுமையிலும், ஆரோக்கியத்திலும் நோயிலும், இளமையிலும் முதுமையிலும், தனிமையிலும் பரகசியத்திலும் வாழ்க்கையின் அனைத்து கட்டங்களிலும் முழுமையாக அவர்களை பின்பற்றுவதுடன் அவ்விருவரையும் அதிகமதிகம் நினைவு கூறுவதாகும். அவ்வாறே அவர்கள் தடுத்து வெறுத்த விடயங்களையும் செயல்களையும் பழக்கவழக்கங்களையும் எமது வாழ்க்கையிலிருந்து முற்று முழுதாக தவிர்ந்து கொள்வதாகும். அதன் மூலமே எமது ஈருலக வாழ்க்கையிலும் நிம்மதியையும் வெற்றியையும் அடைய முடியும்.

அல்லாஹ்வையும் அவனது இறைத்தூதர் (ஸல்) அவர்களையும் மிகவும் நேசிப்பவர்களாக ஸஹாபாக்கள் இருந்தார்கள்.

'ஒருவர் நபியவர்களிடம் வந்து 'உலகம் எப்போது அழியும்?' என கேட்டார். 'அதற்காக நீர் என்ன ஆயத்தப்படுத்தி வைத்துள்ளீர்?' என நபி (ஸல்) அவர்கள் அவரிடம் திரும்பிக் கேட்டார்கள். 'நான் அதிகமான தொழுகைகளையோ நோன்புகளையோ தானதர்மங்களையோ தயார்படுத்தி வைத்தில்லை. எனினும் நான் இறைவனையும் இறைத்தூதரையும் நேசிக்கிறேன்' என்று அவர் பதில் கூறினார். உடனே நபியவர்கள், 'நீர் யாரை நேசிக்கிறீரோ அவர்களுடனேயே இருப்பீர்' என்றார்கள்'.

**(ஆதாரம்: புகாரி).**

ஒரு தடவை அண்ணலாரின் தோழரொருவர் அண்ணலாரின் சமூகத்தில் வந்து, 'அல்லாஹ்வின் தூதரே! எனக்கு எனது உயிர், எனது பொருள், எனது குடும்பத்தார், உறவினர் அனைவரையும் விட தங்கள் மீது அதிக பாசம் இருந்து வருகின்றது. எனக்குத் தங்கள் நினைவு வந்து விட்டால் என்னால் அதனை பொறுக்க முடியாமல் போய் விடுகிறது. உடனே தங்களை வந்து தரிசித்துக் கொள்ளாத வரை நிம்மதி ஏற்படுவதில்லை. இப்பொழுது எனக்கு ஒரே கவலை ஏற்பட்டு விட்டது. மரணம் தங்களுக்கும் இருக்கிறது. ஏனெனில், தங்களோ அல்லாஹ்வுடைய தூதராக இருக்கின்றீர்கள். எனவே தூதர்களது அந்தஸ்தில் தரிசனம் கிடைக்காது போய்விடுமே!' என்று முறையிட்டுக் கொண்டார்கள்.

அண்ணலார் இதற்கு விடை கூறாது மௌனம் சாதித்ததார்கள். உடனே ஹஸ்ரத் ஜிப்ரீயில் (அலை) அவர்கள் ஆஜராகி கீழ்வரும் திருவசனத்தை ஓதிக்காட்டினார்கள்

'எவர்கள் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கீழ்படிந்து நடந்து கொள்கிறார்ளோ அவர்கள் அல்லாஹ்வின் அருள் பெற்ற நபிமார்கள், மெய்யடியார்கள், உயிர்த்தியாகிகள், நல்லடியார்கள் ஆகியோருடன் இருப்பார்கள். இவர்களே தோழமைக்கு சிறந்தவர்களாக இருக்கின்றார்கள். இந்தத் தோழமையானது அல்லாஹ்வுடைய ஓர் அருளாகும். அல்லாஹ் எல்லாவற்றையும் நன்கறிந்தவனாக இருக்கிறான்.

இது போலவே ஸஹாபாக்கள் நபியவர்கள் தடுத்த விடயங்கள் அரங்கேரிய போது அவற்றிலிருந்து தவிர்ந்து கொள்பவர்களாகவும் அவற்றை தடுக்கக் கூடியவர்களாகவும் திகழ்ந்தார்கள்.

எனவே அல்லாஹ்வை நேசிப்போம். இறைத்தூதர் முஹம்மது (ஸல்)அவர்களையும் நேசிப்போம். நபிகளாரின் வாழ்க்கை வழிமுறைகளை பின்பற்றி நடப்போம். அவர்களது வழிகாட்டல்களுக்கு முரணான வழிமுறைகளை தவிர்ந்து விலகி வாழப் பழகிக்கொள்வோம். அல்லாஹ் எம் அனைவருக்கும் கிருபை செய்யட்டும்.

**ஆலமுல் இஸ்லாம்**

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# அல்லாஹ்வுக்கு விருப்பமான செயல்

உலகமானது காற்று, நீர், நெருப்பு, நிலம், வானம் ஆகிய ஐந்து அம்சங்களால் உருவாக்கப்பட்டுள்ளது. உலகிலுள்ள உயிரினங்கள் இந்த ஐந்து நிலைகளில் ஒன்றை இழந்தாலும் உயிர் வாழ முடியாது. உலகமும் இயங்காது.

நிலம் என்பது வெறும் மண்ணை மட்டுமே குறிக்காது. மண்ணில் விளையும் அனைத்து வகையான உணவு வகைகளையும் உள்ளடக்கும். சுருக்கமாகச் சொல்வதாயின் உணவின்றி உயிர் வாழ முடியாது. மனிதன் உயிர் வாழ உணவு மிகவும் முக்கியமானது.

ஒருவருக்கு போதுமான அளவுக்கு மேற்பட்ட மேலதிக உணவுப் பண்டங்கள் யாவுமே அடுத்தவரின் உணவாகும். அவரது உடமை அவரின் உரிமையே. அடுத்தவரின் உணவைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் நாம், தமக்கு போக மீதமுள்ளதை தானமாக வழங்கிட வேண்டும். வீண் விரயம் செய்யக்கூடாது.

தானத்தில் சிறந்தது அன்னதானம். அன்னதானத்தை இஸ்லாம் அதிகம் வலியுறுத்தியுள்ளது. இஸ்லாத்தில் சிறந்த செயல் பசித்தவருக்கு உணவளிப்பதாகும். செயல்களில் இறைவனுக்கு மிகவும் பிடித்த விருப்பமான செயல், பசித்தவனுக்கு உணவளிப்பதாகும். சொர்க்கத்தின் வாசலை திறந்து வைக்கும் செயல், பசித்தவனுக்கு உணவளிப்பது. மக்களில் சிறந்தவர் பசித்தவனின் பசியை போக்குபவர் ஆவார். பசித்தவனின் பசியைப் போக்கும் பண்பு நல்லோர்களின் பண்பு. பசியைப் போக்கும் நற்பண்பு வலப்புறத்தாராகிய சொர்க்கவாசிகளின் இயற்கையான பண்பு ஆகும்.

'ஒருவர் நபி (ஸல்) அவர்களிடம் 'இஸ்லாமியப் பண்புகளில் சிறந்தது எது?' என வினவிய போது 'பசித்தவருக்கு நீர் உணவளிப்பதும், நீர் அறிந்தவருக்கும், அறியாதவருக்கும் ஸலாம் எனும் வாழ்த்துக் கூறுவதும் ஆகும்' என்று கூறினார்கள்'.

**(ஆதாரம்: புகாரி)**

அதேநேரம் 'செயல்களில் இறைவனுக்கு மிகவும் விருப்பமானது, ஒருவர் மகிழ்ச்சியை தமது சகோதர முஸ்லிமுக்கு சேர்த்து வைப்பதும், அவரை விட்டு சிரமங்களை அகற்றுவதும், அவரின் பசியைப் போக்குவதும், அவரின் கடனை நிறைவேற்றுவதும் ஆகும்' என்றும் நபி (ஸல்) கூறியுள்ளார்கள்'.

**(ஆதாரம்: தப்ரானீ)**

மற்றொரு சமயம் "ஒரு கிராமவாசி நபி (ஸல்) அவர்களிடம் வந்து, 'அல்லாஹ்வின் தூதரே, என்னை சொர்க்கத்தில் சேர்த்து வைக்கும் ஒரு செயலை எனக்குக் கற்றுத் தாருங்கள்' என்று கேட்டார். அதற்கு, நபி (ஸல்) அவர்கள் 'நீர் ஓர் அடிமையை விடுதலை செய்வீராக, அதற்கு சக்தி பெறாத பட்சத்தில் பசித்தவருக்கு உணவளிப்பீராக, தாகித்தவனுக்கு நீர் புகட்டுவாயாக' என்றார்கள்'.

**(ஆதாரம்: அஹ்மது)**

'ஒரு பேரீத்தம் பழத்தின் சிறு துண்டையேனும் தர்மம் செய்து நரகத்திலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள், என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். **(ஆதாரம்: புகாரி)**

'உங்களில் சிறந்தவர் பசித்தவருக்கு உணவு அளிப்பவரே ஆவார்' என நபி (ஸல்) கூறினார்கள்.

**(ஆதாரம்: அஹ்மது)**

'நிச்சயமாக நல்லோர்கள் இறைவன் மீதுள்ள பிரியத்தினால் ஏழைகளுக்கும், அனாதைகளுக்கும், சிறைப்பட்டோருக்கும் உணவளிப்பார்கள். உங்களுக்கு நாங்கள் உணவளிப்பதெல்லாம், அல்லாஹ்வின் முகத்திற்காக வேண்டியே. உங்களிடமிருந்து பிரதிபலனையோ, நீங்கள் நன்றி செலுத்த வேண்டுமென்பதையோ நாங்கள் நாடவில்லை' என்று கூறுவார்கள். **(அல் குர்ஆன் 76: 8,9)**

'அவன் கணவாயைக் கடக்கவில்லை. கணவாய் என்பது என்னவென்பது உமக்கு எப்படித் தெரியும்? அடிமையை விடுதலை செய்தல், அல்லது நெருங்கிய உறவுடைய அனாதைக்கும் அல்லது வறுமையில் உழலும் ஏழைக்கும் பட்டினி காலத்தில் உணவளித்தல் பின்னர் நம்பிக்கை கொண்டு பொறுமையைப் போதித்து இரக்கத்தையும் போதித்தோரில் இணைதல் இவைகளே கணவாய் ஆகும். அவர்களே வலப்புறத்தார்'.

**(அல் குர்ஆன் 90:1118)**

மேலும் நபி (ஸல்) அவர்கள் 'தம் அண்டை வீட்டார் பசித்திருக்க தாம் மட்டும் வயிறு நிரம்ப சாப்பிடுபவன் உண்மை இறைவிசுவாசியாக ஆகமாட்டான்' என்றும் கூறினார்கள்'.

**(ஆதாரம்: ஹாகிம்)**

பசித்திருக்கும் அண்டை வீட்டாரின் பசியையும் போக்கி, குடும்பத்தினரால் கைவிடப்பட்டு நாடோடிகளாக ரோட்டில் சுற்றித்திரியும், வீதிகளை வீடுகளாக நினைத்து தெரு வீதிகளிலும், கடை வீதிகளிலும், நடைபாதைகளிலும், கடை கோடியிலும் இருப்பிடம் அமைத்து அல்லல்படும் அப்பாவிகளுக்கும், யாசிப்பவருக்கும், யாசிக்காமல் சுயமரியாதையாக வாழும் கஷ்டப்படுவோருக்கும் உணவளித்து, அவர்களின் பசியைப் போக்கிட வேண்டும். பசித்தவனின் பசியைப் போக்கி பசியில்லாத, பட்டினிச்சாவு இல்லாத உலகை உருவாக்குவோம்.

# நற்பண்புகளை வளர்த்துக் கொள்வோம்

ஒவ்வொரு மனிதனும் வணக்க வழிபாடுகளில் மட்டுமல்ல, நற்பண்புகளையும் பேண வேண்டும் என்பதை இஸ்லாம் வலியுறுத்தியுள்ளது. இஸ்லாத்தின் சிறப்பே நற்குணம் தான். ஒரு முஸ்லிமிடம் இருக்க வேண்டிய குணநலன்களை இஸ்லாம் விரிவாக விவரித்திருக்கிறது. இத்தகைய குணங்கள் இருப்பவன் முஸ்லிம் என்று எடுத்தியம்பும் இஸ்லாம், நற்பண்புகளுக்கு மிகவும் முக்கியத்துவம் அளித்துள்ளது. தன்னுடைய வருகையின் நோக்கம் குறித்து நபி (ஸல்) அவர்கள் குறிப்பிடும் போது, 'நற்குணங்களைப் பரிபூரணம் செய்வதற்காகவே நான் அனுப்பப்பட்டுள்ளேன்' என்றார்கள்.

**(ஆதாரம்: மாலிக்).**

ஒரு சமூகத்தில் ஏமாற்று, மோசடி, நம்பிக்கைத் துரோகம், வஞ்சனை போன்ற கெட்ட செயல்கள் குடிகொண்டிருந்தால் அச்சமூகத்திற்கு இறைவனின் அருள் எவ்வாறு கிடைக்கும்? அல்லது, ஒரே குடும்பத்தில் இருக்கும் உறுப்பினர்கள் ஒருவரோடு ஒருவர் வெறுப்புடனும், பொறாமையுடனும் நடந்து கொண்டால் உறவுகளைத் துண்டித்து வாழ்ந்தால் அந்த குடும்பத்திற்கு அல்லாஹ்வின் அருள் எவ்வாறு கிடைக்கும்?

அதனால் நாம் புரிந்துகொள்ள வேண்டியது யாதெனில், அல்லாஹ்வின் அருளுக்கும் நற்குணங்களுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது என்பதேயாகும்.

இஸ்லாம் கூறும் வணக்க வழிபாடுகளின் நோக்கமே நற்குணங்கள் தான் என்பதை அல் குர் ஆனைப் புரட்டினால் நன்றாகப் புரிந்துகொள்ளலாம். நோக்கங்களைச் சரியாகப் புரிந்து கொள்ளாவிடில் வணக்கங்கள் அனைத்தும் வெறும் உடற்பயிற்சிகளாகவே மாறிவிடும். 'நற்குணங்களில் பலவீனமாக இருப்பவன் இறை நம்பிக்கையிலும் (ஈமான்) பலவீனமானவனாகவே இருப்பான்' என்று இஸ்லாம் கூறுகின்றது.

நபி (ஸல்) அவர்கள் 'இறைவன் மீது ஆணை! அவன் இறை நம்பிக்கையாளன் அல்ல, இறைவன் மீது ஆணை! அவன் இறை நம்பிக்கையாளன் அல்ல, இறைவன் மீது ஆணை! அவன் இறை நம்பிக்கையாளன் அல்ல!' என்று மூன்று தடவைகள் கூறினார்கள். அதற்கு நபித்தோழர்கள், 'அல்லாஹ்வின் தூதரே! யார் தொடர்பில் இவ்வாறு கூறுகின்றீர்கள்?' என்று வினவினர். அதற்கு நபி (ஸல்) அவர்கள், 'எவனுடைய தீங்கிலிருந்து அண்டை வீட்டார் பாதுகாப்பு பெறவில்லையோ அவன் தான் என்றார்கள்.

**(ஆதாரம்: முஸ்லிம், அஹ்மத்)**

இந்த நபி மொழியின் ஊடாக அண்டை வீட்டாருடன் ஒவ்வொருவரும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது தெளிவாக எடுத்தியம்பப்பட்டிருக்கின்றது.

மற்றொரு தடவை நபி (ஸல்) அவர்கள் 'வெட்கமும் இறை நம்பிக்கையும் இரண்டு கொம்புகளாகும். இவற்றில் ஒன்று போனால் மற்றொன்றும் போய்விடும்' என்றார்கள்.

**(ஆதாரம்: தபரானி, ஹாகிம்)**

முழுமையாக இறை நம்பிக்கை கொண்ட ஒருவர், ஒரு போதும் வெட்கம் கெட்ட செயலில் ஈடுபட மாட்டார் என்பதையே நபி (ஸல்) அவர்கள் இங்கு சுட்டிக்காட்டியுள்ளார்கள். நற்குணங்களைப் பேணுபவனுக்கு இவ்வுலகிலும் நன்மை, மறுமையிலும் நன்மையே. இதன் சிறப்புகள் குறித்து நபி (ஸல்) அவர்கள் பல சந்தர்ப்பங்களில் எடுத்துக் கூறியுள்ளார்கள்.'மறுமையில் நன்மை, தீமை நிறுக்கப்படும் தராசில் அதிக கனம் தருவது நற்குணங்களே' ஆகும். **(ஆதாரம்: அபூதாவூத், திர்மதி)**

'நற்குணங்களில் பரிபூரணம் பெற்றவரே இறை நம்பிக்கையில் பரிபூரணம் பெற்றவராவார்'.

**(ஆதாரம்: அபூதாவூத், அஹ்மத்)**

'நான் அதிகம் நேசிப்பவரும், என்னோடு மறுமை நாளில் மிக நெருக்கமாக இருப்பவரும் யார் எனில், சிறந்த நற்குணங்கள் கொண்டவரே!'. **(ஆதாரம்: திர்மதி, அஹ்மத்)**

'சுவனத்தில் மனிதன் அதிகம் நுழைவதற்குக் காரணமாக அமைவது இறையச்சமும், நற்குணமும் தான்'

**(ஆதாரம்: திர்மதி, இப்னு மாஜா)**

'இரவெல்லாம் நின்று வணங்கி, பகலெல்லாம் நோன்பு நோற்பவனுக்கு கிடைக்கும் பாக்கியத்தைவிட நற்குணத்தால் சிறந்தவனுக்கு அதிக பாக்கியம் கிடைக்கும்'.

**(ஆதாரம்: அபூதாவூத், அஹ்மத்).**

இவ்வாறு நற்குணத்தின் சிறப்பையும் முக்கியத்துவத்தையும் நபி (ஸல்) அவர்கள் எடுத்துக் கூறியுள்ளார்கள். ஆகவே இம்மையிலும், மறுமையிலும் அதிக நன்மைகளைப் பெற்றுத்தரும் நற்குணத்தையும் நற்பண்புகளையும் வளர்த்துக் கொள்வதில் அதிக கவனம் செலுத்துவோம். அப்பண்பிலும் குணத்திலும் சிறந்து விளங்கி இறைவனின் அருளை பெற்றுக்கொள்ள முயற்சிப்போம்.

**பிந்த் இஸ்மாயீல் ...**

# வீண் விரயம் தவிர்ப்போம்

'ஆற்றில் போட்டாலும் அளந்து போடு' என்பது தமிழ்ப் பழமொழி. 'ஓடும் ஆற்றில் ஒளு செய்தாலும் தண்ணீரை வீண் விரயம் செய்யாதே! என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

**(ஆதாரம்: அஹ்மத், இப்னுமாஜா)**

இவ்வாறு அண்ணலாரின் வழிகாட்டுதல்களைப் பெற்ற இஸ்லாமிய சமூகம்தான் உண்ணும் உணவு முதல் உடுக்கும் உடை அனைத்திலும் பகட்டையும் விரயத்தையும் மேற்கொள்கின்றனர். விரயம் செய்பவர்களை அல்லாஹ் ஒருபோதும் நேசிப்பதில்லை. இதனை அல்லாஹ்வே தன் அருள் மறையில், 'உண்ணுங்கள், பருகுங்கள், ஆனால் வீண் விரயம் செய்யாதீர்கள். திண்ணமாக அல்லாஹ் வீண் விரயம் செய்வோரை நேசிப்பதில்லை'.

**(அல் குர்ஆன் 7:31)**

இன்றைய சமூகத்தின் வீண் விரயங்களில் மிக மோசமான விரயமாக தண்ணீர் விரயம் உள்ளது. 'தண்ணீரை வீணடிக்காதீர்' என்று நபிகளார் உபதேசம் செய்திருந்தும், அதனை எதிர்கால சந்ததியினருக்கு சேமித்து வைக்க வேண்டும் என்பது குறித்து எவ்வித விழிப்புணர்வும் இல்லாமல் அனேகர் செயற்படுவது வேதனைக்குரிய விஷயமாகும்.

பேரண்டத்தின் அனைத்துப் படைப்புகளும் தண்ணீர் மூலம்தான் படைக்கப்பட்டிருக்கின்றது. இதனை அல்லாஹ்தஆலா தன் அருள் மறையில்,'மேலும், அல்லாஹ் ஒவ்வோர் உயிர்பிராணியையும் ஒரே விதமான நீரிலிருந்து படைத்தான்'.

**அப்துல்லாஹ்...**

(அல்குர்ஆன் 24:45) என்று குறிப்பிட்டிருக்கின்றான்.

அதேநேரம் வீண் விரயம் செய்யாது உணவு உட்கொள்வதன் ஒழுக்கம் தொடர்பில் கூறும் போது, '(உண்ணும் போது) வயிற்றின் மூன்றில் ஒரு பகுதியளவு உண்ண வேண்டும். மூன்றில் ஒரு பகுதி நீர் குடிக்க வேண்டும். மூன்றில் ஒரு பகுதி விட்டுவிட வேண்டும்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

**(ஆதாரம்: திர்மிதி, இப்னுமாஜா)**

நாம் வீண் விரயம் செய்யும் ஒவ்வொரு துளி தண்ணீர், ஒவ்வொரு துகள் உணவு உள்ளிட்ட அனைத்து வீண்விரயங்களுக்கும் இறைவனிடம் பதில் கூறியே ஆகவேண்டும். இந்த எண்ணத்துடன் செயற்படுபவர் வீண் விரயத்தைத் தவிர்த்துக் கொள்வதில் அதிக கவனம் எடுத்துக்கொள்வார்.

உலகின் ஒரு மூலையில் எங்கோ ஒருவர் பசியுடன் இருக்கின்றார் என்றால், மற்றொரு மூலையில் எங்கோ ஒருவர் அவருக்கான உணவை அபகரித்து வைத்துள்ளார் அல்லது வீணடிக்கின்றார் என்று பொருள். அவ்வாறுதான் நாம் வீணடிக்கும் தண்ணீரும் உணவும், மின்சாரமும் ஆகும். வேறு யாருக்கோ உரிமையான இந்த அருட்கொடைகளை வீணடிக்கும் போது, இது வேறு யாருக்கோ சொந்தமானது என்ற எமக்கு உணர்வு வரவேண்டும். ஆகவே வீண்விரயத்தை தவிர்த்துக்கொள்வோம்.

## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

**107**

**டொயோட்டா கார்கள் விற்பனைக்கு**

WP KJ-9167 Toyota Corolla 2008, Car கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714542 958. 012140

**122**

**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

WP BGE-3188 Hero Maestro Edge 2017, Motor Cycle கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0711 2 10 810. 012139

### வேலைவாய்ப்பு

**320**

**வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்**

கொலன்னாவ பேக்கரி ஒன்றிற்கு சோட்ஈட்ஸ் செய்பவர்கள், விற்பனை உதவி செய்வோர், உதவியாளர்கள் பெண்கள் மற்றும் ஆண்கள் தேவை. 0750333249, 0775333249. 011843

### பகிரங்க ஏல விற்பனை

சொ.ஃப்ட்லொஜிக் ஃபினான்ஸ் பீ.எல்.சி. நிறுவனத்தில் அடகு வைக்கப்பட்டு, உரிய காலத்தில் மீட்கப்படாத தங்க நகைகள் எமது **இல.85, கொலன்னாவை வீதி, தெமட்டகொடை, கொழும்பு 09,** என்ற இலக்கத்தில் அமைந்துள்ள நிலையத்தில் **03 மார்ச் 2022 9.30 மணி முதல் மாலை 4.00 மணி வரை** ஏலத்தில் விற்கப்படும்.

**எமது தங்கக் கடன் நிலையங்கள்**

- பொரளை
- தெமட்டகொடை
- காலி
- கம்பஹா
- கிராண்பாஸ்
- கடவத்தை
- களுத்துறை
- கொச்சிக்கடை
- கொட்டாஞ்சேனை
- கொட்டாவ
- மாத்தறை
- நீர்கொழும்பு
- திஸ்ஸமஹாராம
- இரத்தினபுரி
- வெளிகம
- வத்தளை
- ஹெட்டன்
- கண்டி
- பதுளை
- மாவனெள்ள
- சிலாபம்
- குருநாகல
- அனுராதபுரம்
- சுன்னாகம்
- தம்புள்ள
- எம்பிளிபிட்டிய
- யாழ்ப்பாணம்
- மாத்தளை
- நுவரெலிய
- பொலன்னறுவை
- பம்பலபிட்டிய

இவ் ஏல விற்பனையை முன்னறிவித்தலின்றி இரத்துச் செய்யும் அல்லது பிற்போடும் உரிமை இந்நிறுவனத்திற்கே உரியதாகும்.




---

திகதி 16.02.2022 புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் : 4680
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,152,630.00
ஆங்கில எழுத்து: P — வெற்றி இலக்கங்கள்: 6 9 9 4 4 4
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 44,278,280.00

**கொவிசெத** Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2975
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,242,240.00
ஆங்கில எழுத்து: I — வெற்றி இலக்கங்கள்: 06 07 35 70
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 65,752,828.00

**Mega Power மெகா பவர்** கோடி 23+
சீட்டிழுப்பு இலக்கம் 1028
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,176,480.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 236,303,266.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து: B — சுப்பர் இலக்கம்: 14 — வெற்றி இலக்கங்கள்: 34 43 62 72

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம் : 710
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,036,560.00
ஆங்கில எழுத்து: A — வெற்றி இலக்கங்கள்: 14 19 27 29
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 97,665,493.60

**ஹந்தஹன** ராசி சுப பலன்
சீட்டிழுப்பு இலக்கம் : 0021
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,939,780.00
இலக்கினம்: மேஷம் — வெற்றி இலக்கங்கள்: 01 15 48 62
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,532,166.80

**ஜாதிக சம்பத** JATHIKA SAMPATHA
சீட்டிழுப்பு இலக்கம் : 1212
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 13,506,493.20
வெற்றி இலக்கினம்: மேஷம் — வெற்றி இலக்கங்கள்: 2 3 3 3 1 7
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

---

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**

## திருத்தம் பற்றிய அறிவித்தல்

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு புத்தம் புதிய பராமரிப்பு மற்றும் Emergency Response TUG (MERT) ஒன்றைக் கொள்வனவு செய்தல்**

**B/17/2022**

மேற்படி தலைப்பின் கீழ் CPC இணையதளத்திலிருந்து ஏற்கனவே விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொண்ட வளமுள்ள விலைமனுதார்களின் கவனத்தை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இத்தால் ஈர்க்கின்றது.

இதன் பெறுகைக் குழுவின் பெயரானது (முகவரியில்) திணைக்களப் பெறுகைக் குழு என்பது அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு என திருத்தப்படல் வேண்டும்.

விலைக்கோரல் ஆவணத்திலுள்ள ஏனைய அனைத்து நிபந்தனைகளும் மாறாமல் அவ்வாறேயிருக்கும்.

**தலைவர்,
அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு,
மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),
பெறுகை மற்றும் களஞ்சிய செயற்பாடுகள்,
1ஆம் தளம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,
இல: 609, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,
கொழும்பு-09, இலங்கை.
தொலைபேசி: 0094-11-5455335
தொலைநகல்: 0094-11-5455424**




---

## 1964 இலக்கம் 28 இன் காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்டத்தின் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**எனது இல.:- 3/2/3/10/270-735**
**காணி அமைச்சின் குறிப்பு இல.:- 4-3/7/2019/எச்டப்ளிவ்/98**

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் 2022.01.12ஆம் திகதி 2262/27 இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

**அட்டவணை**

மாகாணம் : மேல்
மாவட்டம் : கம்பஹா
பிரதேச செயலாளர் பிரிவு : அத்தனகல்லை

| ஆ.வ. இலக்கம்/ கடத்திரல் இலக்கம் | துண்டு இல. | விஸ்தீரணம் (ஹெக்டயார்) | கிராமம் | கிராம நிலதாரி பிரிவு |
|---|---|---|---|---|
| 510616/01/8 | 04 | 0.0819 | தடகமுவ | பிரிவு இல. 327, தடகமுவ |
| 510616/06/3 | 10 | 0.4827 | தடகமுவ | பிரிவு இல. 327, தடகமுவ |

**எஸ்.பி. குணவர்தன
பிரதேச செயலாளர்,
அத்தனகல்லை.**

**பிரதேச செயலாளர் காரியாலயம்,
அத்தனகல்லை.
2022.02.17**

---

## பெறுகை அறிவித்தல்

### தேசிய மனநல நிறுவனம் - அங்கொட

### கட்டிட ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் – 2022/ 2023

அங்கொட தேசிய மனநல நிறுவனத்தில் 2022/2023 ஆண்டிற்காக கட்டிட ஒப்பந்தக்காரராக பதிவு செய்வதற்காக தகைமையுள்ள நிறுவனங்களிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அதனடிப்படையில் கீழ்க்காணும் அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்கள் 2022.02.18 முதல் 2022.03.09 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.30 முதல் பி.ப. 3.00 இற்கு இடைப்பட்ட காலத்திற்குள் இவ் வைத்தியசாலையின் காசாளர் அலுவலகத்தில் மீளளிக்கப்படாத ரூ. 1000.00ஐ செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை அலவலகத்திற்கு சமர்ப்பித்து, விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 2022.03.10 மு.ப. 10.00 இற்கு முன்பு அனுப்பலாம் அல்லது பணிப்பாளர் பணிமனையில் வைக்கப்பட்டள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் 'பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் - 2022/2023' என்று குறிப்பிடுதல் வேண்டும்.

| தொடர் இலக்கம் | உருப்படி | தகைமை | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் |
|---|---|---|---|
| 01 | 2022/2023ஆம் ஆண்டிற்காக தேசிய மனநல நிறுவனம் மற்றும்அதனோடு இணைந்த முல்லேரியாவ இடைநிலை இல்லம்/ முல்லேரியாவ தாதியர் கல்லூரி ஆகிய நிறுவனங்கள் சார்பாக பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல். (ரூ. 300,000.00 இற்கு மேற்படாத ஒப்பந்தங்கள்) | C 09 (திருத்தப்பட்ட பதிவு செய்தல் முறைமையின் பிரகாரம்) (EM 5 மற்றும் அதற்கு மேல்) | ரூ. 1000.00 |

மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து நிர்வாக அதிகாரியை அழையுங்கள் தொலைபேசி 011-2578245 எந்தக் கட்டணமும் இன்றியே கேள்வி ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம். கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை பிரதேச பெறுகைக் குழுவிற்கு உரியது.

**பணிப்பாளர்
தேசிய மனநல நிறுவனம்
அங்கொடை**

---

# GOVERNMENT OF THE DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA

## STATE MINISTRY OF HOME AFFAIRS

## RURAL DEVELOPMENT PROGRAMME - 2022

## DIVISIONAL SECRETARIAT, MANMUNAI NORTH, BATTICALOA (BATTICALOA DISTRICT)

## NATIONAL COMPETITIVE BIDDING (GOODS AND SERVICES)

## INVITATION FOR BIDS

01. The Chairman of Regional Procurement Committee (RPC) on behalf of the Secretary, State Ministry of Home Affairs invites qualified suppliers for the supply of below mentioned items described in the table.

| Bid No. | Description of Supply | Qty | Total Cost (Rs.) | Bid Security/ Validity | Non-Refundable Tender Fee (Rs.) | Completion period |
|---|---|---|---|---|---|---|
| MN/ACC/ 2022/01 | Supply of Branded Fishing nets, branded Canoe – 52 Nos. and other fishing equipment | 256 52 137 | 11.31 M | 113100.00 (up to 20.06.2022) | 1,000.00 | Within 31.03.2022 |
| MN/ACC/ 2022/02 | Supply of Machinery (Flour Grinding, Chilli Grinding, Popicorn making machine, etc.) | 175 | 4.87 M | 48,700.00 (up to 20.06.2022) | 1000.00 | Within 31.03.2022 |

02. Bidding will be conducted through National Competitive Bidding procedure.
03. Technical qualification requirements are provided in the bidding documents, A margin of preference for eligible locally produced goods offered shall be applied. Additional details are provided in the bidding documents.
04. Interested eligible Bidders may obtain further information from Divisional Secretariat, Manmunai North, Batticaloa and inspect the Bidding Documents from 09.00 hours to 15.00 hours
05. Interested Bidders may purchase a complete set of Bidding Documents in English Language from Divisional Secretary, Divisional Secretariat, Manmunai North, Batticaloa on the submission of a written application to the Divisional Secretary, Divisional Secretariat, Manmunai North, Batticaloa from 18.02.2022 until 04.03.2022 (Office days) from 09.00 hrs. to 15.00 hrs. upon payment of non-refundable fee specified in the list. The method of payment will be by cash or shall be deposited to the official Bank Account No. 0007042003 of Bank of Ceylon, Batticaloa.
06. Considering the current COVID-19 pandemic, interested bidders shall get the soft copy of Bidding document through e-mail by sending the request letter as per Clause No. 06 attached with the scanned copy of deposited Bank slips for non-refundable fee to PE's our e-mail address: **acctdsmn@gmail.com**.
07. Bids shall be delivered in duplicate to the address below through registered post or deposited in the tender box at Divisional Secretariat, Manmunai North, Batticaloa at or before 3.30 p.m. on 07.03.2022. "Bids for supply of branded fishing items and machinery" should be written on the top left-hand corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
08. Bids shall be valid up to 77 days from opening of bids.
09. All bids Shall be accompanied by a Bid Security of the amount mentioned in the list. Bid Security shall be valid up to 20.06.2022.

**V. Vasuthevan,
Chairperson-RPC
Divisional Secretariat,
Manmunai North,
Batticaloa.**

The address referred to above is:

**Chairperson,
Regional Procurement Committee
Divisional Secretariat, Manmunai North, Batticaloa
Tel: 065-2224360, Fax: 065-2228533**

---

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபை

### (விவசாய அமைச்சு)

### காப்புறுதி அட்டைகள் (Data Card) (3/5/1/22/77)

01. கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையினால் செயற்படுத்தப்படும் காப்புறுதித் திட்டத்திற்காக பொதுமக்களுக்கு அச்சிட்டு வழங்குவதற்குப் பொருத்தமான காப்புறுதி PVC அட்டைகள் (100% PVC) வகையான 55mmx85mmx0.76mm தடிப்பமான 1,000,000 (பத்து இலட்சம்) அட்டைகளை வழங்கப்படும் மாதிரிக்கமைவாக அச்சிட்டுப் பெற்றுக்கொள்வதற்காக தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் முறையின் பிரகாரம் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
02. விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும்போது பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பெறுமதியிலான பிணை முறியொன்றை 45 நாட்கள் செல்லுபடியாகும் வகையில் வர்த்தக வங்கி பிணை முறி அல்லது கமநல காப்புறுதிச் சபைக்கு ரொக்கப் பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

| உருப்படி இல. | உருப்படி | எண்ணிக்கை | விலைக்கோரல் பிணை முறி |
|---|---|---|---|
| 01 | காப்புறுதி அட்டைகள் (Data Card) 55mmx85mmx0.76mm | 1,000,000 | 200,000.00 |

03. இதற்கு விண்ணப்பிப்பதற்கு 5000.00 ரூபாவைச் செலுத்தி விண்ணப்பப்படிவம் மற்றும் பெறுகை நிபந்தனைகள் அடங்கிய ஆவணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.
04. 2022-02-18ஆம் திகதி முதல் 2022-03-08ஆம் திகதி வரையான வார நாட்களில் பி.ப. 1.00 மணியான கடமை நேரங்களில் பின்வரும் முகவரியில் முதலாம் மாடியில் அமைந்துள்ள நிதிப் பிரிவிற்கு பணத்தைச் செலுத்தி விலைக்கோரல் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். விலைக்கோரல் படிவங்களுடன் பற்றுச்சீட்டையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
05. விண்ணப்பப்படிவங்களை 2022-03-08ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரியில் தரை மாடியில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். விலைக்கோரல்கள் செல்லுபடியாகும் காலம் விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 60 நாட்களாகவிருத்தல் வேண்டும். பதிவுத் தபாலில் அனுப்பப்படும் விலைமனுக்களை அன்றைய தினத்திற்கு முன் கிடைக்கும் வகையில் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
06. விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் போது புகைப்படப் பிரதி சகிதம் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட உறையினுள் இட்டுச் சமர்ப்பித்தல் வேண்டும்.
07. 2022-03-08ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு இடம்பெறும் விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் விண்ணப்பதாரர் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
08. சகல விலைமனுக்களும் தலைவர், கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபை, இல. 117, சுபத்ராராம வீதி, கங்கொடவில, நுகேகொட எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் என்பதுடன் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மூலையில் காப்புறுதி அட்டை எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
09. இது தொடர்பிலான மேலதிக விபரங்களை 0115-384000 எனும் தொலைபேசி இலக்கத்தினுடாக பெற்றுக்கொள்ளலாம்.
10. இந்தக் கொள்வனவு தொடர்பில் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,
கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபை,
இல. 117, சுபத்ராராம வீதி, கங்கொடவில,
நுகேகொட.**

2022-02-15.




# Switch off, Save Energy !

மின்சாரத்தை மீதப்படுத்துவதற்கான விசேட அநுபந்தம்



# மின்வெட்டை தவிர்ப்பது மக்களின் கைகளிலேயே தங்கியுள்ளது

நாட்டின் மின்சார விநியோகத்தில் எதிர்கொள்ளும் நெருக்கடியின் ஆழத்தை நாம் விளக்க வேண்டியதில்லை. காரணம் கடந்த தசாப்தத்தில் நாட்டில் ஏற்பட்டுள்ள மின் நெருக்கடியின் உச்சத்தை நாம் நெருங்கி வருகிறோம் என்பது இரகசியமல்ல. இந்த நெருக்கடியை சமாளிப்பதற்கான எதிர்கால தீர்மானங்கள் அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் நுகர்வோரின் சாத்தியமான நேர்மறையான பங்களிப்பு குறித்து விவாதிக்க மின்துறையின் ஒழுங்குருத்துனரான இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு (PUCSL) இன்று கலந்துரையாடுகிறது. இத்தகைய மின்சார நெருக்கடியிலிருந்து மக்களை விடுவிக்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க இங்கு கருத்துக்களை முன்வைக்கிறார்.

## தற்போதைய மின்சார நெருக்கடி நிலைமையை சமாளிக்க இலங்கையின் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு (PUCSL) ஏற்கனவே இடைக்கால மற்றும் நீண்ட கால மின்சார நெருக்கடியைச் சமாளிப்பதற்கான நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் இணைந்து செயல்பட்டு வருகிறது. எவ்வாறாயினும், குறுகிய காலத்தில் இந்த நெருக்கடியை சமாளிக்க அத்தியாவசியமான மின் சேமிப்பு அல்லது மின்சார பாதுகாப்பு உத்திகளில் இருந்து தேசிய கட்டத்தை காப்பாற்றுவதே இந்த நேரத்தில் முக்கிய கவனம் செலுத்துகிறது. வீட்டில் மின்விளக்கை அணைப்பது, மின்விளக்கின் எண்ணிக்கையைக் குறைப்பது போன்ற எளிய முறைகளால் இந்தப் பிரச்கைனையில் இருந்து விடுபட முடியுமா என்று பலரும் யோசித்து வருகின்றனர். எமது ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்டுள்ள மின் பாதுகாப்பு நடவடிக்கைகளை பின்பற்றினால் சுமார் 300 மெகா வாட்ஸ் மின்சாரத்தை சேமிக்க முடியும். தற்போது நிர்மாணிக்கப்பட்டு வரும் கெரவலப்பிட்டி இயற்கை எரிவாயு (LNG) ஆலையின் கொள்ளளவிற்கு நிகரான கொள்ளளவை இது கொண்டுள்ளது. இது தேசிய மின் திட்டத்தில் ஒரு பெரிய நிவாரணம் மற்றும் ஒரு பெரிய சேமிப்பாக கருத்தப்படுகிறது.

இதனடிப்படையில், இலங்கையின் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனைத்து மின்சார பாவனையாளர்களையும், பொதுமக்களையும் மின்சாரத்தைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஊக்குவிக்க நடவடிக்கை எடுத்தது. முக்கியமாக அரச நிறுவனங்கள், வர்த்தக சமூகம் மற்றும் நுகர்வோர் சமூகம் ஆகிய மூன்று தரப்பினரின் செயலூக்கப் பங்களிப்பை உறுதி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு (PUCSL) எடுத்துள்ளது.

## இலங்கையின் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, அரச நிறுவனங்கள், இந்தப் பணிக்கு எவ்வாறு பங்களித்துள்ளன?

நாட்டில் தினசரி மின்சார விநியோகத்தில் 2% தெரு விளக்குகளுக்கு செலவிடப்படுகிறது. எம்மால் முடிந்தால், சரியான முகாமைத்துவம் மற்றும் வீதிவிளக்குகளின் எல்லைகளுடன், உயர்திறனுடனான நிவாரணத்தைப் பெறலாம். எனவே, இலங்கையின் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நாட்டில் வீதி விளக்குகளை நிர்வகிப்பதில் ஈடுபட்டுள்ள அனைத்து நிர்வாக அமைப்புகளுக்கும் வழிகாட்டிகள் வெளியிட்டுள்ளன. அனைத்து நிர்வாக அமைப்புகளும் எங்களிடம் உடனடியாக பங்களிக்கும் என்று நம்புகிறோம்.

அதேபோன்று காற்று பதனாக்கியை (எயார் கண்டிஷன்) குறைந்தபட்ச வெப்பநிலையாக 26 பாகை

PUCSL

செல்சியஸ் வெப்பநிலையைப் பேணுமாறும் குளிரூட்டும் முறையை அதிகபட்ச செயல்திறனுடன் தினசரி பயன்படுத்துமாறும் இலங்கையின் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, அரச நிறுவனங்களுக்கு அறிவுறுத்தியுள்ளது. பகலில் முடிந்தவரை வெளிச்சத்தை நிர்வகிக்க முடிந்தவரை இயற்கையான சூரிய ஒளியைப் பயன்படுத்தவும்.

வர்த்தக சமூகம் இந்த பணியில் உடனடியாக பங்களிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் மற்றும் விரைவில் ஒரு வழிகாட்டியை வெளியிட எதிர்பார்க்கிறோம்.


இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க

> *"நாட்டில் தினசரி மின்சார விநியோகத்தில் 2% தெரு விளக்குகளுக்கு செலவிடப்படுகிறது. எம்மால் முடிந்தால், சரியான முகாமைத்துவம் மற்றும் வீதிவிளக்குகளின் எல்லைகளுடன், உயர்திறனுடனான நிவாரணத்தைப் பெறலாம். எனவே, இலங்கையின் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நாட்டில் வீதி விளக்குகளை நிர்வகிப்பதில் ஈடுபட்டுள்ள அனைத்து நிர்வாக அமைப்புகளுக்கும் வழிகாட்டிகள் வெளியிட்டுள்ளன. அனைத்து நிர்வாக அமைப்புகளும் எங்களிடம் உடனடியாக பங்களிக்கும் என்று நம்புகிறோம்."*



குறிப்பாக கடைகளில் உள்ள விளம்பர பலகைகள் மாலை 6.00 மணி முதல் இரவு 10 மணி வரை அணைக்கப்படும் என நம்புகிறோம்.

இவ்வாறான நிலையில் எமது மின்சார பாவனையாளர்களும் இச்செயற்பாட்டிற்கு ஆதரவளிக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளனர் மேலும் நுகர்வோர் செயலில் பங்களிப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். அதிகமான மின்சாரத் தேவை இருக்கும் மாலை 6.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை மின்சார அடுப்புகளைப் பயன்படுத்துதல், மின்சார கைரோஸ்கோப்களைப் பயன்படுத்துதல் மற்றும் குளிரூட்டிகளை இயக்குதல் போன்ற செயல்களைத் தவிர்க்கவும். உங்களுக்குத் தேவையில்லாத அனைத்து விளக்குகளையும் அணைக்கவும். இது போன்ற எளிய நடவடிக்கைகளால் தேசிய வழங்களுக்கு கிடைக்கும் நிவாரணம் அளப்பரியது. முடிந்தவரை உங்கள் வீட்டில் உள்ள ஒளிரும் பல்புகள், டியூப் லைட்கள் மற்றும் CFL மின்குமிழ்கள் மற்றும் டுநுனு மின்குமிழ்களை மாற்றுங்கள்

கையடக்கத் தொலைபேசியினை மின்னேற்றும் (சார்ஜ்) போதும் நீங்கள் அறியாத வகையில் மின்சாரம் வீண்விரயமடையக்கூடும். பல சந்தர்ப்பங்களில் நீங்கள் கையடக்க தொலைபேசியினை சார்ஜ் செய்யாத போது ஸ்விட்ச் ஓன் செய்யப்பட்டு கையடக்கத் தொலைபேசி சார்ஜரிலிருந்து அகற்றப்பட்டிருக்கும். அவ்வாறான போது கையடக்கத் தொலைபேசி சார்ஜரில் இணைக்கப்படாத சந்தர்ப்பங்களிலும் 0.2 அம்பியர் வரையிலான மின்சாரம் விரயமாகும். அவ்வாறாக நாளொன்றுக்கு 5 மில்லியன் கையடக்கத் தொலைபேசிகள் இணைக்கப்பட்டிருப்பின் சுமார் 1000 அம்பியர் மின்சாரம் எவ்வித உபயோகமும் இன்றி விரயமாகக்கூடும்.

எனவே அனைத்து சந்தர்ப்பங்களிலும் கையடக்கத் தொலைபேசியை சார்ஜ் செய்த பின்னர் சார்ஜர் பிளக்கின் ஸ்விட்ச்சினை அணைத்திடவும் (off) அல்லது சார்ஜர் பிளக்கினை மின் இணைப்பிலிருந்து அகற்றிவிடவும். அத்துடன் கூரையின் மேல் பொருத்தப்பட்டிருக்கும் சோலார் அமைப்புக்களை விரைவில் பிரதான அமைப்புடன் இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆணைக்குழு மின்சார சபைக்கு அறிவித்துள்ளது.






## மீண்டும் மின்வெட்டு அமுல்படுத்தப்படுமா?

மின் உற்பத்தி நிலையங்கள் தொடர்ந்து இயங்க தேவையான அளவு எரிபொருளைப் பெற்று இயங்கவும் மற்றும் மின் உற்பத்தி நிலையங்கள் செயலிழக்காமல் போகாது என்ற அனுமானங்களின் அடிப்படையில், எதிர்கால மின்சாரம் குறித்து முடிவுகள் எடுக்கப்படும். எதிர்காலத்தில் 200 மெகா வாட்களுக்கு மேல் மின் உற்பத்தியை அகற்றினால் மட்டுமே மின்வெட்டு அவசியம் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

அந்த மின் வெட்டு ஒரு நாளைக்கு அண்ணளவாக ஒரு மணிநேரம். அதாவது தேசிய கட்டமையாப்பில் 300 மெகாவாட்டாக இருக்கும்போது, மேலும் தினசரி மின்வெட்டு சுமார் ஒன்றரை மணி நேரம் தேவைப்படுமாயின் 400 மெகாவாட்டிற்கு மேல் தினமும் தேசிய கட்டமைப்பிலிருந்து அகற்றப்பட்டால், தினமும் சுமார் 2. அரை மணி நேரம் மின்வெட்டு அமுலில் இருக்க வேண்டும். எவ்வாறாயினும், இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இலங்கை மின்சார சபைக்கு வழங்கிய கட்டளைகளை கடுமையாக கடைப்பிடிப்பதன் மூலமும், கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமும் இவ்வாறான மின்வெட்டுகளை தடுக்க முடியும் என எதிர்ப்பார்க்கின்றது. 15 பெப்ரவரி 2022 அன்று இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு
PUCSL
உங்களுக்கு தடையில்லா மின்சாரத்தை பெறவேண்டுமாயின்
மீண்டும் அறிவிக்கும் வரை
கீழே கூறியுள்ளவற்றை பின்பற்றவும்
மின்சார பாவனையாளராகிய நீங்கள்
மின்னழுத்தி, மின்னடுப்பு, மின்சார ஹீட்டர்கள், சலவை இயந்திரம் மற்றும் காற்றுப்பதனாக்கி (எயர் கன்டிஷனர்) ஆகியவற்றை பயன்படுத்துவதை தவிர்க்கவும்
10
6
வர்த்தக நிலையங்கள் மற்றும் அரச அலுவலகங்கள்
அலுவலக நேரத்தின் பின்னர் அனைத்து மின் விளக்குகளையும் அணையுங்கள்.
அனைத்து சந்தர்ப்பங்களிலும் தேவையற்ற மின் விளக்குகளை அணைத்திடவும்.
மின் விளக்கு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனம்
80% மின் விளக்குகளை அணைக்கவும்
எல்லோரும் எந்நேரமும்
காற்றுப் பதனாக்கியின் (எயார் கண்டிஷனர்) வெப்பநிலையை 26 செல்சியஸில் பராமரிக்கவும். விளம்பரப் பலகைகள் மற்றும் பெயர்பலகைகள் ஒளிரவிடப்படுவதை தவிர்க்கவும். உங்களிடம் ஜெனரேட்டர் காணப்படுமாயின் அதனை பயன்படுத்தி மாத்திரம் காற்றுப் பதனாக்கியை (எயார் கண்டிஷனர்) செயற்படுத்தவும்.
2.30
4.30
மேற்குறிப்பிட்ட நடைமுறைகளை பின்பற்றுவதன் மூலம்
200 மெகாவொட் மின்சார திறன் நாளாந்தம் குறைக்கப்படுவதுடன்,
மின் தடைக்கான தேவையும் தவிர்க்கப்படும்.
இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு
6 வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம், இல: 28, செயின்ட் மைக்கேல்ஸ் வீதி, கொழும்பு 03
தொலைபேசி: 011 239 2607/8 தொலைநகல்: 011 239 2641
info@pucsl.gov.k
www.pucsl.gov.lk
facebook.com/pucsl




**இலங்கையில் தற்போது இடம்பெற்று வரும் மின்சார பிரச்சினை ஒவ்வொரு வீடுகளிலும் எதிரொலிக்க ஆரம்பித்திருக்கிறது. நாட்டில் நிலவும் டொலர் பிரச்சினை, அதனால் எரிபொருள் இறக்குமதியில் ஏற்பட்டிருக்கும் தட்டுப்பாடு, மழை இல்லாதது, அதனால் நீர்த் தேக்கங்களில் நீர் மட்டம் குறைந்திருப்பது என்று இந்தப் பிரச்சினைக்கு சங்கிலித் தொடராக பல காரணங்கள் கூறலாம்.**




இதனால் மின்சாரம் துண்டிப்பது பற்றி தினந்தோறும் செய்திகள் வெளியாகின்றன. என்றாலும் மின்சாரத்தை தொடர்ந்து வழங்குவதில் இலங்கை மின்சார சபை தொடர்ந்து முயன்று வருகிறது.

என்றாலும் காலநிலை மாற்றம், புவி வெப்பமாதல் பிரச்சினை காரணமாக தொடர்ந்தும் சம்பிரதாயமான படிம எரிபொருளில் தங்கி இருப்பதில் இருந்து விடுபட வேண்டிய நெருக்கடியும் ஏற்பட்டுள்ளது. புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலம் மின்சார உற்பத்தியை அதிகரிக்கும் முயற்சிகளையும் இலங்கை மின்சார சபை எடுத்து வருகிறது. நீர் மின் உற்பத்தி தவிர காற்றாலை மூலம் மின் உற்பத்தியை அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மன்னார் மற்றும் யாழ்ப்பாணத்தில் இதற்கான திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

இந்த சவால்களுக்கு மத்தியிலேயே தற்போதைய மின்சார தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

என்றாலும் மின்சார பிரச்சினை இன்று தோன்றியதல்ல. அது காலத்துக்குக் காலம் ஏற்படும் ஒன்றாக மாறிவிட்டது. நாட்டில் மழை பொழிவதில் தாமதம் ஏற்பட்டால் மின்சாரம் அட்டவணைப்படி துண்டிக்கப்படும் வரலாறும் இருந்தது.

உண்மையில் மின்சார பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஒன்று இல்லையா? சூரிய சக்தி, காற்று என்று பல ஆற்றல்களால் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும் என்ற நிலையில் அதற்கு இலங்கை மின்சார சபையின் முயற்சி என்ன? என்ற பல கேள்விகளுக்கு விடையாக இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளர் (ஆராய்ச்சி மற்றும் அபிவருத்தி) ரொனல்ட் கொமெஸ்டரின் நேர்காணல் அமைந்தது.

### தற்போது மின் விநியோகத்தில் பிரச்சினை ஒன்று உள்ளது அல்லவா?

தற்போது இலங்கையில் மின்சார கட்டமைப்பில் இரண்டு பிரச்சினைகள் இருக்கின்றன. ஒன்று மெகாவாட்களில் உள்ள பிரச்சினை. மற்றது மெகாவாட் மணித்தியாலங்களில் உள்ள பிரச்சினை. அதனை மேலும் தெளிவுபடுத்துவதென்றால் மின் சக்தியில் பிரச்சினை மற்றும் ஆற்றலில் பிரச்சினை என்று கூறலாம். இரவில் மின்சாரத்தை முறையாக கொடுப்பதற்கு முடியாமல் போயிருப்பது மெகாவாட்களின் சிக்கலாகும். நீர்த் தேக்கங்களில் நீர் மட்டம் குறைந்திருப்பது, எரிபொருள் போதுமான அளவுக்கு கிடைக்கவில்லை என்பது ஆற்றல் குறைவது பற்றிய பிரச்சினையாகும். இந்த இரண்டு பிரச்சினைகளும் இந்தத் தருணத்தில் இருக்கின்றன.

தற்போது மின்சார தேவையை பூர்த்தி செய்யும் அளவுக்கு திறன் எமது கட்டமைப்பில் உள்ளது. அவ்வாறே தொடர்ச்சியாக செயற்படும் திறன் தான் குறைவாக உள்ளது.

### இதற்கு காரணம் என்ன?

2021 ஆம் ஆண்டில் நல்ல மழை வீழ்ச்சி இருந்தது. அதனால் நீர்த் தேக்கங்கள் நிரம்பி இருந்தன. அதேபோன்று நிலக்கரி, டீசல் பிரச்சினை ஒன்று இருக்கவில்லை. கொவிட் பொருந்தொற்று காரணமாக மின்சார தேவையும் அதிகரிக்கவில்லை. 2021 ஆம் ஆண்டு நவம்பர் ஆரம்பம் தொடக்கம் மழை நின்றது. மழை வீழ்ச்சி இல்லாத காலத்தில் அனல் மின் நிலையங்களினால் மின்சார தேவையை பூர்த்தி செய்வதையே நாம் பொதுவாக மேற்கொள்கிறோம். தற்போதையே நிலையில் அனல் மின் நிலையங்களுக்கு எரிபொருள் கிடைப்பதில் சிக்கல் ஒன்று உள்ளது. இந்தக் காலத்தில் நீர்த் தேக்கங்களில் நீர் கொள்ளளவு வேகமாக குறைந்து வருகின்றது. அதனால் மின்சாரத் தேவை அதிகமாக உள்ள இரவு நேரங்களில் மின்சாரத்தை முறையாக விநியோகிப்பதில் சிக்கல் எழுந்துள்ளது.

### எல்பீ எரிவாயு பிரச்சினையால் மக்கள் உணவு சமைப்பதற்கு எரிவாயுவுக்கு பதில் மின்சாரத்தை பயன்படுத்துவதும் இந்த மின்சார பிரச்சினைக்கு காரணம் இல்லையா?

சமைப்பதற்காகவும் மின்சாரத்தின் பயன்பாடு இடம்பெறுகிறது. அதுவும் மின்சார பயன்பாடு அதிகரிப்பதற்கு காரணமாகும். ஆனால் அது அதிக தேவையின் அதிகரிப்பு ஒன்றாக இல்லை.

### இந்த பிரச்சினைக்குரிய நிலையை தீர்ப்பதற்கு தீர்வுகள் எடுக்கப்பட்டிருக்கிறதா?

தற்போது முடியுமானவரை சிக்கனத்தோடு மின்சாரத்தை பயன்படுத்துவது தான் முக்கியமானதாகும். முடியுமானவரை மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துமாறு நாம் பொதுமக்களிடம் கேட்டுக்கொள்கிறோம்.

இங்கு கூறுவது மின்சாரத்தை குறைத்து பயன்படுத்த வேண்டும் என்ற அர்த்தத்தில் அல்ல. மின்சாரத்தை வீணாக்குவதை குறைத்துக்கொள்ளும்படியே கேட்கிறோம்.

அதேபோன்று தனியார் நிறுவனங்களில் மின்பிறப்பாக்கி இயந்திங்களினால் உற்பத்தியாகின்ற மின்சாரத்தை பயன்படுத்துவதையும் நாம் ஊக்குவித்து வருகிறோம்.

### மின்சார பிரச்சினை ஒன்று



**ரொனல்ட் கொமெஸ்டர்**
**பிரதிப் பொது முகாமையாளர்**
**(ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி)**
**இலங்கை மின்சார சபை**

### வருவது இது முதல் முறையல்ல. அவ்வப்போது வருகின்ற இந்தப் பிரச்சினைக்கு நீண்டகால தீர்வு ஒன்று இல்லையா?

மின்சாரத்தை பாதுகாப்பது இதன் ஒட்டுமொத்த செயற்பாடாகும். அது பகுதிக்கு அல்லது ஒரு காலத்திற்கு செய்ய முடியுமான ஒன்றல்ல. அதற்குக் காரணம் எம்மிடம் இருக்கும் மின்சக்தி கலப்பில் அனல் மின் நிலையங்களில் இருந்து வெளியாகும் கரியமில வாயு காரணமாக காற்று மாசடைவது அதிகரிப்பது போன்ற விளைவுகளுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படுகிறது. அதனால் முடியுமான வரை அனல் மின் நிலையங்களில் மின்சாரத்தை உற்பத்தி செய்வதை குறைக்கும் தேவை ஒன்று ஆண்டு முழுவதும் இருக்கிறது. அது அவசியமான ஒன்று.

மின்சார பிரச்சினையை தீர்ப்பதற்கு மிக ஆழமாக ஆய்வு செய்யப்பட்டு எதிர்வரும் 20 ஆண்டுகளுக்கு தயாரிக்கப்பட்ட மின் உற்பத்தித் திட்டம் உள்ளது. அதன்படி அது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்கப்படுகிறது. அதில் உள்ள பிரச்சினை என்னவென்றால் 2014 ஆம் ஆண்டு தொடக்கம் மின் உற்பத்தித் திட்டத்திற்கு இணைக்கப்பட்டிருந்த பிறப்பாக்கி இயந்திரம் எமது கட்டமைப்புக்குள் உள்ளடக்கப்படாததாகும். கூரை மேல் பொருத்தப்படும் சூரிய சக்தி பனல் போன்ற சிறிய மின் உற்பத்தி இயந்திரங்கள் தவிர பாரிய மின் உற்பத்தி இயந்திரங்கள் சேர்க்கப்படவில்லை. அதுவும் இந்த மின்சார பிரச்சினையை தீர்ப்பதற்கு முடியாமல் போவதற்கு காரணமாகும்.

### மின்சார பிரச்சினைக்கு காற்றாலைகள் போன்ற மாற்றுத் தீர்வுகள் பற்றி கேள்வி எழுந்துள்ளது அல்லவா?

அப்படி கூறப்படுகின்ற அனைத்து முறைகளும் மின் உற்பத்தி திட்டத்திற்குள் உள்ளடக்கப்பட்டிருக்கிறது. காற்று, சூரிய ஒளி, உயிர் வாயு, நிர் போன்ற அனைத்து ஆற்றல் உற்பத்திகளும் இதற்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவை எப்போதும் ஒட்டுமொத்த கட்டமைப்புக்கு கலப்பாகத் தான் செயற்படுகின்றன.

### புதிய மின் உற்பத்தி நிலையங்கள் கட்டமைப்புக்கு உள்ளடக்கப்பட்டுள்ளதா?

2014 ஆம் ஆண்டு நுரைச்சோலை நிலையம் பொருத்தப்பட்டதன் பின் மன்னாரில் 100 மெகாவாட் காற்றாலை நிலையம் ஒன்று பொருத்தப்பட்டது. அதன் பின் பாரிய மின் உற்பத்தி நிலையங்கள் எமது மின் கட்டமைப்புக்குள் இணையவில்லை.

### காற்றாலையை பிரதான மின் உற்பத்தி சக்தி மூலமாக பயன்படுத்த முடியாதா?

காற்றாலைகள் நிறுவப்பட்டபோதும் சில காலங்களில் அந்த இடங்களுக்கு காற்று கிடைப்பது இல்லாமல் போகிறது. அது சாதாரண ஒன்று. அது சரியாக இரவில் சூரிய ஒளி இல்லாமல் இருப்பது போன்ற ஒன்று. அதனால் தான் மின் உற்பத்தி கலப்பு ஒன்று தேவையாக உள்ளது. 100 மெகாவாட் காற்றாலையும் தற்போது 10 – 15 மெகாவாட் அளவு மிகக் குறைவான மின் சக்தியையே உற்பத்தி செய்கிறது.

**நேர்காணல் ரசிக்கா ஹேமமாலி**



ENERGY SAVING

# Switch off, Save Energy !

மின்சாரத்தை மீதப்படுத்துவதற்கான விசேட அநுபந்தம்

# சக்தியை சேமிப்பவர்கள் மதிப்புமிக்க பிரஜைகள்

தொடர்ச்சியாக மின்சாரத்தை பெறுவதில் பிரச்சினைக்கு முகம்கொடுக்கும்போது மாத்திரமே மக்கள் 'மின்சக்தி மற்றும் அதன் பாதுகாப்பு' பற்றி பேசுகிறார்கள். கடந்த பல தசாப்தங்களில் இலங்கையில் இவ்வாறான நிலைமை ஏற்படுவது அரிதான ஒன்றல்ல. இது கடந்த காலத்தில் இருந்து நாம் பாடம் கற்றுள்ளோமா மற்றும் அதனை தணிக்க நாம் போதுமான நடவடிக்கைகளை எடுத்துள்ளோமா என்று எம்மிடையே கேள்வியை எழுப்புகிறது. இவ்வாறான பிரச்சினைகளை தவிர்ப்பதற்கு நிலையான முன்னெச்சரிக்கை மற்றும் பொருத்தமான நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்கு பதிலாக உண்மையான சிக்கலை மறைக்க தற்காலிக தீர்வுகளை நாம் மேற்கொள்கிறோம். இலங்கையில் மின்சக்தி தேவைக்கு உள்நாட்டில் கிடைக்கப்பெறும் நீர் போன்ற வளங்கள் மற்றும் இறக்குமதி செய்யப்படும் எரிபொருளை பயன்படுத்துகிறோம். சுதந்திரத்திற்கு பின்னரான எமது பொருளாதாரம் வேகமாக வளர்ச்சி அடைந்த நிலையில், தேசத்தின் வளர்ச்சிக்கு சக்தி அளிக்கும் வகையில் நமது ஆற்றல் ஆதாரங்களை நாம் போதுமான அளவு பன்முகப்படுத்தியிருக்கிறோமா என்ற கேள்வி உள்ளது. இந்த முக்கியமான தேசிய அளவிலான பிரச்சினையில் போதிய அவதானம் செலுத்தப்படாத சூழலில், சுதந்திரத்தில் இருந்து பெரிதான வளர்ச்சி காணாத ஆற்றல் துறையையே அது எமக்குத் தந்துள்ளது. எமது ஆற்றல் துறையின் போக்கை நாம் பன்முகப்படுத்தாதபோதும் அதன் அளவை அதிகரித்துள்ளோம்.



அத்துல டி சில்வா, தலைவர் இலங்கை மின்சார கம்பனி

எரிபொருள் இறக்குமதியில் அதிகம் தங்கி இருப்பது, எமது காலனித்துவ மரபில் இருந்து நாம் பெற்றுக்கொண்டதாகும். இன்று அது எமது அந்நியச் செலாவணி இருப்பு தொடர்பான பிரச்சினையில் புதிய பரிமாணத்தை உருவாக்கியுள்ளது. ஆற்றல் பன்முகப்படுத்தலில் எமது தேர்வுகள் என்ன? நாட்டின் ஆற்றல் துறையின் இடைமாற்று திட்டம் என்ன? எமது பட்டியலில் சுதேசிய வளம் ஒன்றாக புதுப்பிக்கத்தக்கவை முதல் இடத்தில் உள்ளன. அதேநேரம் போக்குவரத்துத் துறையை மின்சாரமயமாக்கல், சமையலுக்காக பேண்தக உயிரியல் சக்தி மற்றும் போக்குவரத்து பயன்பாட்டின் தீவிரத்தை குறைப்பது போன்ற தேர்வுகள் இதனை முகாமைத்துவம் செய்வதற்கான மிக முக்கியமான மற்றும் செயல்திறன் மிக்கதான தேர்வுகளாக உள்ளன. எமது நாளாந்த வாழ்வில் நாம் பன்படுத்தும் ஒவ்வொரு துளி ஆற்றலும் எமது நாட்டின் அந்நியச் செலாவணியை இழக்கச் செய்வதோடு எமது குழந்தைகள் எம்மிடம் இருந்து பெறப்போகும் சுற்றுச்சூழலை அழிக்கும் என்பது ரகசியம் அல்ல. இந்தத் திர்க்கமான புள்ளியில் நமக்கான பணி ஒன்று உள்ளது. ஆற்றல் என்பது விநியோகத்தின் பிரச்சினை மாத்திரமல்ல. பயன்பாட்டில் உள்ள ஆற்றல் திறனும் இந்தக் கதையில் பிரதான தாக்கத்தை செலுத்துகிறது. சமூகத்தின் வளர்ந்துவரும் உயர் அடுக்கைச் சேர்ந்த பொறுப்புடைய மற்றும் உலகளாவிய பிரஜை என்ற வகையில் இந்த பூமியில் எமது இருப்பை நாம் பதிவு செய்வது அவசியமாகும். குடிமக்களானவர் தமது பிறக்காதவர்களுக்காக எதிர்காலத்தை பாதுகாக்கும் அதே நேரம் இந்த பூமியில் தமது வாழ்வை அனுபவித்து வாழ வேண்டும்.

சூழல் பாதுகாப்பு என்பது இலங்கைக்கு புதிதல்ல. பாரம்பரியமாக நாம் மீள்சுழற்சிப் பொருளாதாரம் ஒன்றை பெற்றிருப்பதோடு எமது வரலாறு நெடுகிலும் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் ஈடுபட்டிருக்கிறோம். ஏகாதிபத்தியம் எமது மீள்சுழற்சிப் பொருளாதாரத்தை எம்மிடம் இருந்து பறித்துக்கொண்டதோடு நுகர்வுவாதத்தால் பாதிக்கப்பட்ட நேரியல் பொருளாதாரத்திற்கு அடிமையாக்கிவிட்டது. எமது வாழ்வின் நவீனமயமாக்கல் என்ற போக்கினால், நமது பாரம்பரிய எளிய வாழ்க்கையின் நுகர்வு முறைகளை இழந்துவிட்டதோடு எமது கொள்வனவுத் திறனை இழந்து வருகிறோம். கடந்த பல தசாப்தங்களாக அரசாங்கங்கள் மின்சார விலைக்கு இலக்கற்ற மானியங்களை அதிகளவில் வழங்குவதன் மூலம் தவறான விலை சமிக்ஞையை கொடுத்துள்ளது. ஒரு பக்கம் மக்களின் வாங்கும் அளவு அதிகரித்திருப்பதோடு மறுபக்கம் மின்சாரத்திற்கு வழங்கும் மானியங்கள் இலக்கற்றதாகியுள்ளதால் அதிகமாகக் கிடைக்கும் சூழலில் பொதுமக்கள் அதிகமாக மின்சாரத்தை பயன்படுத்துவதற்கு தள்ளப்பட்டுள்ளனர். எமது ஆற்றலின் கணிசமான பகுதியை நாம் அதில் இருந்து போதுமான நன்மைகளைப் பெறாமல் பயன்படுத்துகிறோம். அதிக உற்பத்தி இன்றியே நாம் பயன்பாட்டை மேற்கொள்கிறோம். இதனாலேயே புரிதல் மற்றும் அறிவு ஊடாக ஆற்றல் பாதுகாப்பு பற்றி பேசவேண்டி உள்ளது. எமது ஆற்றல் பல்வகைமைத் திட்டத்தில் மிக முக்கிய அம்சங்களில் ஒன்றாக இந்த உரையாடல் மாறியுள்ளது. "ஆற்றல் பாதுகாப்பு" என்ற கருத்தாடல் பற்றி மக்கள் தவறான புரிதலை பெற்றுள்ளனர். மின்சாரச் சேமிப்பைப் பற்றி ஒருவர் கேள்விப்பட்ட உடனேயே, தங்கள் இன்பத்திற்காகவும், பயனுள்ள வாழ்க்கைக்காகவும் பயன்படுத்தும் மின்சாரப் பயன்பாட்டைக் குறைப்பதாகவே அவர்கள் நம்புகிறார்கள். மின்சார சேமிப்பு என்பது உங்களின் அவசியமான விளக்கை அணைப்பது அல்ல.

மின்சார சேமிப்பு என்பது உங்களது வாழ்வாதாரத்தை தியாகம் செய்யாது தேவையற்ற ஆற்றலின் அளவை குறைக்கும் நடவடிக்கையாகும். உதாரணமாக, தேவையற்ற விளக்கை அணைப்பது நல்ல மின்சார சேமிப்பு நடைமுறை மற்றும் பழக்கமாகும். தேவையில்லாதபோது வளிச்சீராக்கியை அணைப்பது சிறந்த ஒரு பழக்கமாகும். வளிச் சீராக்கியின் வெப்ப அமைப்பை இரண்டு பாகைகள் குறைப்பதன் மூலம் அதன் ஆற்றல் பயன்பாட்டை 20% சேமிக்க முடியும். இந்த நாட்டின் ஆறு மில்லியன் நுகர்வோரில் அறில் ஒருவர் இரவு நேரத்தில் மூன்று 10W விளக்குகளை அணைப்பதன் மூலம் 180ஆறு மின்சாரத்தை சேமிக்க முடியும். இதனால் மின்சார வெட்டு தொடர்பான முழு பிரச்சினையையும் தவிர்க்க முடியும. பி.ப. 6:30 மற்றும் பி.ப. 10:30 மணிக்குள் உச்ச நேரத்தில் உங்களது சலவை இயந்திரம் மற்றும் இஸ்திரியை பயன்படுத்துவதைத் தவிர்த்தால் தேசிய மின்சார வலையமைப்பின் சுமையை உங்களால் தவிர்க்க முடியும். இரவின் உச்ச நேரத்தில் நாட்டின் அதிக விலையுயர்ந்த மின்பிறப்பாக்கிகள் செயற்பட்டு அதிக விலையுயர்ந்த மின்சார யுனிட்களை தயாரிக்கின்றன.

குடிமக்கள் தமது பொறுப்பை செய்யாது தமது உரிமைகளை அனுபவிக்க முடியாது. ஆற்றல் இனியும் நுகர்வுப் பொருளோ அல்லது அரசு பொறுப்புக் கூறும் ஒன்றாகவோ இல்லை. ஆற்றல் பயன்பாடு எமது எதிர்கால சந்ததிக்காக நிர்வகிக்கும் விடயமாக மாறியுள்ளது. இன்று நாம் அதிக ஆற்றலை பயன்படுத்துவது, உமது குழந்தைகளுக்கு இந்த இடத்தை மேலும் வாழத் தகுதியற்றதாக மாற்றுவதாக இருக்கும்.

இந்த தேசிய மற்றும் பூகோள பிரச்சினையை கையாள்வதில், ஒருவருக்கு முக்கியமற்ற மற்றும் அற்பமான சில சாதாரண பழக்கங்களை நாம் பழக வேண்டி உள்ளது. ஒரு சமூகமாக, அவ்வாறான ஆற்றல் சார்பு பழக்கங்கள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

ஆற்றல் வளங்களை பயன்படுத்துவதில் பொறுப்புக்கூறல் மற்றும் எமது பொறுப்புப் பற்றி மீண்டும் சிந்திக்க வேண்டிய நேரமாக இது உள்ளது. கடந்த காலம் போலல்ல, சுற்றுச்சூழல் பாதுகாவலர் மற்றும் ஆற்றல் பாதுகாவலர் சமூகத்தில் மதிப்புமிக்க குடிமகனாக உலகின் வளர்ந்துவரும் உயர் அடுக்கைச் சேர்ந்தவராக உள்ளார். ஆற்றல் சேமிப்புப் பழக்கத்தை நம் உள்ளத்தில் வளர்த்து, சமுதாயம் முழுவதும் பரப்புவோம். நீங்கள் சமூகத்தில் மாத்திரமன்றி, பிறக்காத அடுத்த சந்ததிகளாலும் மதிக்கப்படுவீர்கள். நீங்கள் ஏற்கனவே ஒரு ஆற்றல் பாதுகாவலராக இருந்தால், எமது குழந்தைகள் மற்றும் பேரக் குழந்தைகள் இந்த நாட்டில் மற்றும் உலகில் மகிழ்ச்சியாகவும், அமைதியாக அரவணைத்தும், குதூகலித்தும் வளர்வதற்கு இந்த உலகைப் பாதுகாக்கும் உங்களது முயற்சி சிறிதாக இருந்தபோதும் மரியாதையை தெரிவித்துக்கொள்கிறோம்.

LECO


லெகோவின் அறிவித்தல்

எமது குறுஞ்செய்தி இலக்கம் 0714 643 643

நீங்கள் செய்ய வேண்டியது...

| | |
|---|---|
| சேவைக்காக பதிவு செய்தல் | Reg <இடைவெளி> <கணக்கு இலக்கம்> |
| தொலைபேசி இலக்கம் மாறும்போது | Chg <இடைவெளி> <கணக்கு இலக்கம்> |
| சேவையை ரத்துச் செய்வதற்கு | Ina <இடைவெளி> <கணக்கு இலக்கம்> |
| கணக்கு சுருக்கத்தை பெறுவதற்கு | Acb <இடைவெளி> <கணக்கு இலக்கம்> |
| முறைப்பாடுகளுக்கு | Cmp <இடைவெளி> <உங்களின் முறைப்பாடு> |
| வேறு கோரிக்கைகளுக்கு | Req <இடைவெளி> <உங்களது கோரிக்கை> |

அனைத்து தகவல்களையும் விரல் நுனியில் தரும் புதிய



MY LECO APP
இன்றே Download செய்யுங்கள்

Download on the App Store
GET IT ON Google Play

- மின்சாரம் தொடர்பான முறைப்பாடுகள்
- மின்சார தடங்கல் பற்றிய அறிவித்தல்கள்
- பல கட்டண சீட்டுகளின் விபரங்கள் ஒரே தடவையில்
- கட்டண விபரம்
- கட்டணம் செலுத்தியதன் விபரம்

மாதாந்த கட்டண சீட்டை எமது E-Bill சேவை ஊடாக உங்களின் E-Mail இற்கு பெற்றுக்கொள்ளுங்கள்




மேலதிக விபரங்களுக்கு எமது கிளை அலுவலகம் அல்லது நுகர்வோர் சேவை நிலையத்தை அழைக்கவும் அல்லது

1910

24 மணி நேரமும் செயற்படும் அழைப்புக்கான நிலையம்



LAKE HOUSE
Concept & Design by
Advertising Supplements Department
: 0112 429 339, 0777 270 076
Coordinated by M. I. Nizamdeen


இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி.ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 பெப்ரவரி மாதம் 18ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# மலைச்சாரல்





மாத்தளை வரலாற்று சிறப்பு மிக்க அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான வருடாந்த மாசி மக மகோற்சவ தேர் திருவிழா நேற்று நடைபெற்றது. நாட்டின் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு இம்முறை பலத்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது, இறுக்கமான சுகாதார விதிமுறைகளை பின்பற்றி மூன்று தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட அடியார்கள் மாத்திரமே ஆலயத்துக்குள் உள்வாங்கப்பட்டனர். இதன்போது ஆலயத்தின் நுழைவாயில் சோதனைச்சாவடி அமைக்கப்பட்டு பொலிசார் மற்றும் மாநகர சபை பிரதான வைத்திய அதிகாரி தலைமையில் பொதுச்சுகாதார அதிகாரிகளினால் அடியார்கள் பரிசோதிக்கப்பட்டனர். ஆலய பிரதம குருக்களால் பூஜைகள் நடத்தப்பட்டு சுவாமி உள்வீதி உலாவும் நடைபெற்றது. படங்கள்: மாத்தளை சுழற்சி, நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்கள்

## அதிபரை முழந்தாளிடச் செய்த சம்பவம் ஊவா மாகாண முதலமைச்சர் விடுதலை

**பதுளை தினகரன் விசேட நிருபர்**

பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலய அதிபரை முழந்தாளிடச் செய்ய வைத்தமை தொடர்பான வழக்கிலிருந்து முன்னாள் ஊவா மாகாண முதலமைச்சர் விடுதலை பெற்றுள்ளார்.

பதுளை மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் நீதிபதி சமிந்த கருணாதாச முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இவ்வழக்கில் போதிய சாட்சியங்கள் இன்மையினால், முன்னாள் ஊவா முதலமைச்சரும், தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான சாமர சம்பத்தசநாயக்க முற்று முழுதாக விடுதலை பெற்றுள்ளார்.

பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலய அதிபர் ஆர். பவானி, பதுளை பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து பதுளை மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் இது தொடர்பான வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இதனையடுத்து மஜிஸ்ரேட் நீதிபதி பதுளை இணக்கச்சபையில் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டிருந்தார். அந்த இணக்கச்சபையில் வித்தியாலய அதிபர் ஆர். பவானியும், முன்னாள் ஊவா மாகாண முதலமைச்சரும் சமாதான இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளனர். இதனையடுத்து இவ்வழக்கு இணக்கச்சபையில் நிறைவிற்கு கொண்டுவரப்பட்டது. அத்துடன் அதன் இறுதி அறிக்கையும், பதுளை மஜிஸ்ரேட் நீதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

இவ்வழக்கினை பரிசீலனை செய்து, முன்னாள் ஊவா முதலமைச்சரை முற்றுமுழுதுமாக விடுதலைசெய்யுமாறு தீர்ப்பு வழங்கினார்.

## தேர்தல்களுக்கு அஞ்சமாட்டோம் மக்கள் எப்பக்கமே உள்ளனர்

### அமைச்சர் ஜானக வக்கும்புர

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**



ஜனாதிபதி தேர்தலில் 69 இலட்சம் வாக்குகளைப் பெற்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அடுத்த ஜனாதிபதி தேர்தலில் 79 இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று வெற்றி பெறுவார் என ஏற்றுமதி அபிவிருத்தி அமைசசரும் இரத்தினபுரி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான ஜானக வக்கும் புர தெரிவித்தார்.

எம்பிலிபிட்டிய நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டுக்குச் சேவை செய்த நாம் தேர்தல்களுக்கு அஞ்சமாட்டோம். இனிவரும் தேர்தல்களில் மக்கள் எமக்கு அமோக வெற்றிகளைப் பெற்றுத்தருவர்கள்.

மக்கள் எம்பக்கம் உள்ளார்கள் என்பதைத் தேர்தல் முடிவுகள் காட்டும். அரசாங்கம் தற்காலிக பின்னடைவுகளை எதிர்கொள்வது சாதாரண விடயம். இவற்றைப் பெரிதுபடுத்தும் எதிர்க்கட்சிகளின் பொய்யான பிரசாரங்களுக்கு மக்கள் ஏமாற மாட்டார்கள். ஊழியர் சேமலாபநிதிய மேலதிக கட்டணத்தில் மாற்றங்கள் தேவையாயின் அதிலும் நெகிழ்வுளைச் செய்ய அரசாங்கம் காத்திருக்கின்றது.

பொருட்களின் விலைகளைக் குறைப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது எனவும் அவர் தெரிவித்தார்.



அமரர் சுந்தரம்பிள்ளை பாலசுப்பிரமணியத்தின் ஞாபகார்த்த நிகழ்வு நேற்று (16.02.2022) நடைபெற்றது. இதன்போது பதுளை சரஸ்வதி தேசிய கல்லூரி உப அதிபர் சின்னையா தேவேந்திரன், தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விமாணி கற்கைநெறியின் (பதுளை நிலையம்) இணைப்பாளர் எஸ்.ஜெயகாந்தன், ஆசிரியர் ஆர். புண்ணியராஜ் ஆகியோர் நினைவேந்தல் மலரினை சரஸ்வதி பாலசுப்பிரமணியத்திடம் கையளிப்பதை படத்தில் காணலாம். படம் லுணுகல நிருபர்

## புதிய நிர்வாகிகள் தெரிவு

ஹெம்மாதகம, தும்புளுவாவ முஸ்லிம் வாலிபர் சங்கம் (வை. எம். எம்.ஏ.) இன் புதிய அங்கத்தவர்கள் அண்மையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவராக எம். ஏ. எம். பைஸல், உபதலைவராக எம். எஸ். எம். நஸீர், போஷகர்கள்: எம். எஸ். எம். தாஸிம் மௌலவி, ஏ. டபிள்யூ. எம். அஸ்மி ஹாஜி, செயலாளராக எம். எஸ். எம். ஹாரிஜ் மௌலவி (கபூரி), பொருளாளர்கள்: எம். என். எம். நுஸ்கி, எம். எஸ். எம். பஹாத், எம். இஸட், எம். தஈம்.

உறுப்பினர்களாக எம். எப். எம். இஜாஸ், ஏ. எம். அதார் முஹம்மத், எம். டி. எம். பாரிஸ், எம்.டி. எம். இர்பான், எம். எச்எம். ஸிராஸ், எம்.எம். பதால் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.



மாத்தளை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தை கண்டுகளிக்க வருகை தந்த ஸ்பெயின் நாட்டு ரொடிகோவ் தம்பதியினர் ஆலயத்தின் அறநெறி பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை ஆலய தலைவர் சேதுராமன் சர்வானந்தாவிடம் கையளிப்பதை படத்தில் காணலாம். படம்: உக்குவளை விஷேட நிருபர்

## ஸ்ரீ பாத யாத்திரை சென்ற குழுவினர் மீது குளவித் தாக்குதல்

**அக்குறணை குறூப் நிருபர்**

கேகாலைப் பிரதேசத்திலிருந்து ஶ்ரீ பாத புனித யாத்திரை சென்ற குழு ஒன்றின் மீது கறுங்குளவி கொட்டியதில் 15 பேர் காயமடைந்துள்ளனர்.

குருவிட்ட வழியாகச் சென்ற சமயமே இவ்வாறு இவர்களை குளவி கொட்டியுள்ளது. குருவிட்ட மற்றும் கேகாலைப் பிரதேச வைத்தியசாலைகளில் இவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பொலிஸார் மற்றும் பொதுமக்களின் உதவியுடன் இவர்கள் உடன் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படடதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

## இறைச்சிக்காக கொண்டு செல்லப்பட்ட பசுமாடுகள் வறிய மக்களுக்கு வழங்கிவைப்பு



**தலவாக்கலை குறூப் நிருபர்**

இறைச்சிக்காக கொண்டு செல்லப்பட்ட பசுமாடுகள் வறிய மக்களுக்கு வழங்கப்பட்டன.

கடந்த வாரம் பூண்டுலோயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் சட்டவிரோதமாக அனுமதியின்றி இறைச்சிக்காக கொண்டு செல்லப்பட்ட 2 பசு மாடுகளை சுற்றிவளைத்து பூண்டுலோயா பொலிஸார் கைப்பற்றியிருந்தனர். அதனைத்தொடர்ந்து பூண்டுலோயா கால்நடை வைத்திய அதிகாரி சம்பத்துடன் கலந்துரையாடி நீதிமன்ற அனுமதியுடன் இப்பிரதேசத்தில் பண்ணை வளர்ப்பில் ஈடுபட்டு வந்த வறிய குடும்பங்களுக்கு அந்த பசுமாடுகள் வழங்கப்பட்டன.

பூண்டுலோயா பழைய தோட்ட மேற்பிரிவில் வாழ்வாதாரமின்றி கஷ்டப்படும் கார்த்திக், தெற்கு மடக்கும்புற தோட்டத்தில் வசிக்கும் தியாகராஜா ஆகிய இருவருக்கும் இப் பசுமாடுகள் கால்நடை வைத்திய அதிகாரி சம்பத்தினால் பெற்றுக் கொடுக்கப்பட்டன.கைப்பற்றப்பட்ட பசுமாடுகளில் ஒன்று 3 மாத கர்ப்பம் தரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஆலய உடைப்பு சம்பவம் சந்தேக நபர் கைது

**ஹற்றன் விசேட நிருபர்**

அக்கரபத்தனை மற்றும் டயகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலுள்ள மூன்று ஆலயங்கள் உடைக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டதை தொடர்ந்து

அப்பகுதியில் அமைதியற்ற சூழல் ஏற்பட்டது. சந்தேக நபர் மோனிங்டன் பிரதேசத்திலுள்ள வனப்பகுதியில் பதிந்திருந்த போது பொதுமக்கள் சுற்றிவளைத்து பிடித்து பொலிஸாருக்கு ஒப்படைத்துள்ளனர். இவரிடம் திருடப்பட்ட தங்கநகைகள், நகைஅடகு துண்டு பணம் அனைத்தையும் பொதுமக்கள் கைப்பற்றி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

அதனை தொடர்ந்து பொலிஸார் ஆரம்ப கட்ட விசாரணையின் பின்னர் நேற்று (17) திகதி நுவரெலியா நீதிமன்றில் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அக்கரபத்தனை மற்றும் டயகம பகுதியிலுள்ள இந்து ஆலயங்கள் நேற்றுமுன்தினம் உடைக்கப்பட்டு பொருட்கள் கொள்ளையிடப்பட்டன. பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டினையடுத்து நேற்று பகல் விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர். சந்தேக நபர் பொது மக்களால் மடக்கி பிடிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

அக்கரப்பத்தனை மற்றும் டயகம ஆகிய பொலிஸ் பிரிவுகளில் தொடர்ந்து இந்து ஆலயங்கள் உடைக்கப்பட்டு அங்கு உண்டியல் பணம் அம்மன் கழுத்தில் போடப்பட்டிருந்த ஆபரணங்கள் உள்ளிட்ட பொருட்கள் தொடர்ந்து களவாடப்பட்டு வந்தன.

நேற்று அதிகாலை கிளாஸ்கோ கீழ்ப்பிரிவு தோட்டத்திலுள்ள வல்லடியான் ஆலயத்தின் கதவு உடைக்கப்பட்டு ஆலயத்தில் இருந்த தங்க ஆபரணங்கள் உண்டியல் பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது. இதனால் தோட்டத்தில் பதற்றம் நிலை ஏற்பட்டது.

அத்தோடு கிளாஸ்கோ நெதஸ்டல் தோட்டத்திலுள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்திலும் கதவு உடைக்கப்பட்டு அங்கு இருந்த பணம் உண்டியல் களவாடப்பட்டது. அதுமட்டுமின்றி அம்மனின் கழுத்தில் இருந்த பொட்டு உள்ளிட்ட தங்க நகைகளும் கொள்ளையிடப்பட்டுள்ளன.

இதேவேளை டயகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மோனிங்டன் கீழ்ப்பிரிவு தோட்ட முத்துமாரியம்மன் ஆலயம் உடைக்கப்பட்டு அங்கிருந்த தங்க நகைகளும் களவாடிச் சென்றுள்ளனர். இதன் காரணமாக இப்பிரதேசத்தில் நேற்றைய தினம் பதற்ற நிலை காணப்பட்டது. அத்தோடு ஆலய நிர்வாக சபையினர் டயகம மற்றும் அக்கரப்பத்தனை ஆகிய பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்தனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை டயகம அக்கரப்பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## நியூஸிலாந்து–தென்னாபிரிக்கா முதலாவது டெஸ்ட்:

# 95 ஓட்டங்களுக்கு சுருண்டது தென்னாபிரிக்கா

நியூஸிலாந்து மற்றும் தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியின், முதல்நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்துள்ளது.

இதன்படி முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிவரும் நியூஸிலாந்து அணி, முதல்நாள் ஆட்டநேர முடிவில், 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 116 ஓட்டங்களை பெற்றுள்ளது.

ஆட்டநேர முடிவில், நெய்ல் வாக்னர் 2 ஓட்டங்களுடனும், ஹென்ரி நிக்கோல்ஸ் 37 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணியின் முதல் இன்னிங்ஸ் ஓட்டங்களுடன் ஒப்பீடுகையில், நியூஸிலாந்து அணி 21 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளது.

கிறிஸ்ட்சேர்ச் மைதானத்தில் நேற்று (வியாழக்கிழமை) ஆரம்பமான இப் போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூஸிலாந்து அணி முதலில் களத் தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா அணி, 95 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, சுபைர் ஹம்சா 25 ஓட்டங்களையும் வெர்ரின்னே 18 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.






நியூஸிலாந்துக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், மெட் ஹென்ரி 7 விக்கெட்டுகளையும் டிம் சவுத்தீ, கெய்ல் ஜேமிஸன், நெய்ல் வாக்னர் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

மெட் ஹென்றி நியூசிலாந்து பந்துவீச்சாளரின் கூட்டுமூன்றாவதுசிறந்த புள்ளிகளைப் பதிவுசெய்தார், அதே ஓவரில் 3 விக்கெட்டுகள் உட்பட 23 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளை வீழ்த்தி, நியூசிலாந்திற்கு எதிராக தென்னாபிரிக்காவை அவர்களின் குறைந்த ஸ்கோரையும் 23 டெஸ்ட்களில் மிகக் குறைந்த ஸ்கோரையும் வெளியேற்றினார். ஒரு சீமர் நட்பு கிறைஸ்ட்சர்ச் மேற்பரப்பில், ஹென்றி இயக்கம் மற்றும் பவுன்ஸைப் பயன்படுத்தி, தென்னாபிரிக்காவை கிட்டத்தட்ட 95 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்கச் செய்தார், 1932 க்குப் பிறகு அவர்களின் குறைந்த மொத்த துடுப்பாட்டம். அவ்வாறு செய்ததன் மூலம், ஹென்றி தென்னாபிரிக்காவிற்கு எதிராக சிறந்த பந்துவீச்சு புள்ளிவிவரங்களை பதிவு செய்தார். 1915 தொடக்க நாளில் நியூசிலாந்தின் ஆதிக்கத்தை அடிக்கோடிட்டுக் காட்ட வரலாற்றுத் தகவல்கள் போதுமானதாக இல்லாவிட்டால், அவர்களின் முதல் நான்கு வீரர்கள் 34 ஓவர்களுக்குள் பற்றாக்குறையைத் துடைத்து, ஆட்டத்தின் முடிவில் முன்னிலை பெற்றனர்.

இதனைத்தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்சை தொடங்கியுள்ள நியூஸிலாந்து அணி, நேற்றைய முதல்நாள் ஆட்டநேர முடி வில், 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 116 ஓட்டங்களை பெற்றுள்ளது.

இன்னமும் 7 விக்கெட்டுகள் வசமுள்ள நிலையில் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் நியூஸிலாந்தில் இன்று இடம்பெறும்.

## இலங்கை – இந்திய கிரிக்கெட் தொடர்

# போட்டி அட்டவணையில் மாற்றம்

இந்தியா – இலங்கை அணிகள் மோதும் 20க்கு20 மற்றும் டெஸ்ட் கிரிக்கெட் தொடர்களுக்கான புதிய அட்டவணையை பிசிசிஐ வெளியிட்டுள்ளது.

இந்திய அணி தற்போது மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான 20க்கு20 தொடரிலும், இலங்கை அணி அவுஸ்திரேலிய அணிக்கெதிரான 20க்கு20 தொடரிலும் பங்கேற்று விளையாடி வருகிறது.

இந்த தொடரை முடித்த பிறகு இலங்கை அணி இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளது. எதிர்வரும் பெப்ரவரி 25ஆம் திகதி முதல் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரும் அதனைத் தொடர்ந்து 3 20க்கு20 போட்டிகளில் விளையாடவிருந்தது.

முன்னதாக டெஸ்ட் போட்டிகள் நடைபெறும் என்று அட்டவணை வெளியிட்டாலும், இலங்கை கிரிக்கெட்டின் கோரிக்கையை ஏற்று முதலில் 20க்கு20 தொடர் நடைபெறும் வண்ணம் அட்டவணை தற்போது மாற்றப்பட்டுள்ளது.



ஏனெனில், இலங்கை அணி அவுஸ்திரேலிய சுற்றுப்பயணத்தை நிறைவுசெய்த பிறகு நேரடியாக இந்தியா சென்று 20க்கு20 போட்டிகளில் ஆடுவது பயோபபுள் சிக்கல்களை தவிர்க்க முடியும் என்பதனால் இவ்வாறு போட்டி அட்டவணை மாற்றப்பட்டுள்ளது.




இதன்படி, 3 போட்டிகள் கொண்ட 20க்கு20 தொடரானது எதிர்வரும் 24ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இதனைத் தொடர்ந்து, 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெறும்.

20க்கு20 போட்டிகளில் முதல் போட்டி லக்னோவிலும், அடுத்த 2 போட்டிகள் தரம்சாலாவிலும் நடைபெறும் என பிசிசிஐ தெரிவித்துள்ளது.

இதேபோன்று, முதல் டெஸ்ட் போட்டியானது, மொஹாலியில் எதிர்வரும் மார்ச் 4ஆம் திகதி முதல் 8ஆம் திகதி வரை நடைபெறும். 2ஆவது டெஸ்ட் போட்டி பெங்களூரில் மார்ச் 12ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரை நடைபெறும் என்றும் தெரிவித்து உள்ளது.

குறிப்பாக, பெங்களூரில் நடைபெறவுள்ள கடைசி டெஸ்ட் போட்டி பகலிரவு ஆட்டமாக நடைபெறும் என பிசிசிஐ தெரிவித்துள்ளது.

## இந்திய மொபைல் கேமிங் பூம்

# உள்நாட்டு டெவலப்பர்களுக்கு வெகுமதி அளிப்பு

டிரீம் ஸ்போர்ட்ஸ், மலிவான வயர்லெஸ் மற்றும் லாக்டவுன்கள் மூலம் விரிவாக்கம் மூலம் $840m திரட்டுகிறது. மும்பை ஸ்மார்ட்போன் கேம்களுக்கான இந்தியாவின் சமீபத்திய ஆர்வத்தின் மிகப் பெரிய பயனாளிகளில் ஒருவர், 1.4 பில்லியனைக் கொண்ட இந்த நாட்டில் மிகவும் பாரம்பரியமான ஆர்வத்தில் ஈடுபட்டுள்ளார் கிரிக்கெட். பீஜிங் ஒலிம்பிக்கில், காஷ்மீரி பனிச்சறுக்கு வீரர் ஒருவர் இந்தியாவின் கொடியை ஏந்திச் செல்வார்.



மும்பை ஆரிப் கான் மக்களை ஆச்சரியப்படுத்தப் பழகியவர்.

கடந்த ஆண்டு இத்தாலியில் நடந்த உலக ஆல்பைன் ஸ்கை சம்பியன்ஷிப்பில் மக்களின் முகங்களை அவர் நினைவு கூர்ந்தார். ராட்சத ஸ்லாலோம் பந்தய வீரர்கள் ஒருவர் பின் ஒருவராக, செங்குத்தான, பனி படர்ந்த சாய்வின் மீது வாயில்களுக்கு வெளியே வருவார்கள். அவர்கள் பெரும்பாலும் ஐரோப்பியர்களாக இருந்தனர், அவர்களின் சொந்த நாடுகளின் கொடிகள் அவர்களின் ஸ்பான்டெக்ஸ் ஸ்கை சூட்களில் தைக்கப்பட்டன. ஆஸ்திரியா, பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி பின்னர் கான் வந்தார். அவரது தோளில் பொறிக்கப்பட்ட அவரது நாட்டின் பெயர் இந்தியா. நீதிபதிகள் கூட ஆச்சரியப்பட்டார்கள் என்கிறார்.

'இது வேடிக்கையானது, ஏனென்றால் நான் நான்கு உலக சாம்பியன்ஷிப்களுக்குச் சென்றிருக்கிறேன், மேலும் ஒவ்வொரு முறையும் என்னிடம், 'இந்தியாவில் பனிச்சறுக்கு இருக்கிறதா?' என்று 31 வயதான கான் விளக்குகிறார். 'நண்பர்களே, நாங்கள் இமயமலையில் வாழ்கிறோம்! இது உலகின் மிக உயரமான மலைத்தொடர். நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்கள்?'

கான் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் பிளவுபட்ட இமயமலைப் பகுதியான காஷ்மீரின் இந்திய நிர்வாகப் பகுதியைச் சேர்ந்தவர். உலகின் மிக உயரமான ஸ்கை லிஃப்ட்களில் ஒன்றான இந்திய அரசாங்கத்தால் நடத்தப்படும் ஸ்கை ரிசார்ட்டான குல்மார்க்கில் அவர் நான்கு வயதில் பனிச்சறுக்கு விளையாட்டைக் கற்றுக்கொண்டார். அவரது தந்தை அங்கு பனிச்சறுக்கு கடை நடத்தி வருகிறார்.

# அவுஸ்திரேலியாவின் விக்டோரியாவில் 2026 பொது நலவாய விளையாட்டுகளை நடத்த பேச்சுவார்த்தை

2026 பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கான பிரத்யேக பேச்சுவார்த்தையில் இருப்பதாக அவுஸ்திரேலிய மாநிலமான விக்டோரியா புதன்கிழமை தெரிவித்தது.

மெல்போர்னின் தலைநகரான விக்டோரியா முழுவதும் பல விளையாட்டுப் போட்டிகளைப் பாதுகாக்கும் பட்சத்தில், நிகழ்ச்சிகளை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது என்று மாநில முதல்வர் டேனியல் ஆண்ட்ரூஸ் கூறினார்.

'விக்டோரியா அவுஸ்திரேலியாவின் விளையாட்டு மாநிலமாகும், மேலும் விருது வழங்கப்பட்டால், 2026 கொமன்வெல்த் விளையாட்டு போட்டியை வழங்குவதற்கான புதிய வழியை உலகிற்கு நிரூபிக்கும்'என்று ஆண்ட்ரூஸ் கூறினார்.

'எங்கள் பிராந்திய நகரங்களில் பெரும்பாலான நிகழ்வுகள் விக்டோரியாவின் சிறந்ததைக் காட்டவும், வேலைகளை உருவாக்கவும், நீண்ட காலத்திற்கு வழங்கக்கூடிய வீட்டுவசதி மற்றும் உட்கட்டமைப்புகளை உருவாக்கவும் நாங்கள் நம்புகிறோம்.'

விக்டோரியா கடைசியாக 2006 ஆம் ஆண்டு கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை நடத்தியது, அப்போது நிகழ்வுகள் மாநிலத் தலைநகர் மெல்போர்னை மையமாகக் கொண்டிருந்தன.

2026 இல் மீண்டும் போட்டியை நடத்துவதற்கான பிரத்யேக பேச்சுவார்த்தைகளுக்கான 'ஒப்பந்ததில் தலைவர்கள்' கையெழுத்திட்டுள்ளதாக மாநிலம் கூறியது.

கொமன்வெல்த் விளையாட்டு கூட்டமைப்பு மற்றும் கொ மன்வெல்த் விளையாட்டு அவுஸ்திரேலியாவுடன் ஒப்பந்தம் கையெழுத்தானது.

'விக்டோரியா உலகின் தலைசிறந்த விளையாட்டு மாநிலங்களில் ஒன்றாகும், மேலும்




இது உலகத்தரம் வாய்ந்த விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கான இடங்கள், உள்கட்டமைப்பு மற்றும் மக்களைக் கொண்டுள்ளது என்பதில் சந்தேகமில்லை' என்று கொமன்வெல்த் விளையாட்டு சம்மேளனத்தின் தலைவர் லூயிஸ் மார்ட்டின் கூறினார்.

அவுஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்தில் உள்ள கோல்ட் கோஸ்ட், 2018 ஆம் ஆண்டு 'நட்பு விளையாட்டுகளின்' கடைசி பதிப்பில் இருந்தது, கொமன்வெல்த் விளையாட்டுகள் என அழைக்கப்படும், அதன் 54 நாடுகளின் உறுப்பினர்களில் இருந்து 4,000 க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்களை ஈர்த்தது, அவர்கள் அனைவரும் பிரிட்டிஷ் பேரரசின் முன்னாள் பிரதேசங்கள்.

2022 கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் இங்கிலாந்தின் பர்மிங்காமில் ஜூலை 28 முதல் ஆகஸ்ட் 8 வரை நடைபெற உள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 பெப்ரவரி மாதம் 18ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – I

1 மணித்தியாலம்

**எல்லா வினாக்களுக்கும் 1 மணி நேரத்தினுள் விடை அளியுங்கள். இவ்வினாக்களுக்கான விடைகள் அடுத்த வாரம் புலமைக் கதிரில் வெளியிடப்படும்.**
**பகுதி – 2 மாதிரி வினாத்தாள் அடுத்த வாரம் உங்கள் கரங்களில்!**

1. கூற்றுக்குப் பொருத்தமான உரு எது?
   - உணவை இரை மீட்கும்
   - சாதுவானது
   - பால் தரும்


i.


ii.


iii.

2.



i. 7



ii. 8



iii. 9

3. 5000 *ml* என்பதனை லீற்றரில் எழுதினால்
   i. 50 *l* ii. 5 *l* iii. 500 *l*

4. நான்காயிரத்து முந்நூற்று பத்து என்பதை எண்ணில் எழுதினால்
   i. 4310 ii. 40310 iii. 43010

5. XI இந்த உரோமன் எண் குறிக்கும் இந்த அராபிய எண்
   i. 11 ii. 10 iii. 9

6. 
   நிழற்றப்பட்ட பகுதியை தசம எண்ணாக எழுதினால்
   i. 0.6 ii.0.8 iii. 0.4

7. 500g பருப்பின் விலை ரூ.75.00 எனில் 3kg பருப்பின் விலை யாது?
   i. ரூ. 300.00 ii. ரூ. 350.00 iii. ரூ.450.00

8. 31 நாட்களை கொண்டிராத மாதம் எது?
   i. மார்ச் ii. ஏப்ரல் iii. மே

9. 36 மாம்பழங்களை மூவரிடையே சமமாகப் பங்கிட்டால் ஒருவருக்குக் கிடைப்பது?
   i. 18 ii. 12 iii. 24

10. 5 *l* கொள்ளளவுடைய பிளாஸ்திக் கலமொன்றினுள் 3 *l* 500 *ml* பால் உள்ளது. அக்கலனை முழுமையாக நிரப்ப இன்னும் எவ்வளவு பால் ஊற்ற வேண்டும்?
    i. 1 *l* 500 *ml* ii. 15 *l* 00 *ml* iii. 1 *l* 50 *ml*

11. செங்கோணத்தை காட்டும் கடிகார முகமெது?


i.


ii.


iii.

12. ஒருவருக்கு 8 வாழைப்பழங்கள் வீதம் 5 பேருக்கு பகிர்ந்தளிக்க எத்தனை வாழைப்பழங்கள் தேவை?
    i. 30 ii. 40 iii. 50

13. ரூபாய் 100ல் உள்ள 5 ரூபாய்களின் எண்ணிக்கை யாது?
    i. 10 ii. 15 iii. 20

14. **6000 + 700 + 00 + 3** இவ்வெண் குறிப்பது
    i. ஆறாயிரத்து எழுநூற்று மூன்று
    ii. அறுநூற்று எழுபத்து மூன்று
    iii. ஆறாயிரத்து எழுபத்து மூன்று

15. 8 x 6 என்ற கணித செய்கைக்கு சமனானது
    i. 4 x 7 ii. 4 x 9 iii. 4 x 12

16. 6 சதுர வடிவான முகங்களைக் கொண்ட திண்ம உரு
    i. நான்முகி ii. சதுரமுகி iii. கனவுரு

17. உருவிலுள்ள சமபக்க முக்கோணியிலுள்ள சமச்சீர் அச்சுக்களின் எண்ணிக்கை
    i. 1
    ii. 2
    iii. 3



18. நான்கால் வகுக்கும் போது மீதியின்றி வகுபடும் எண்
    i. 88 ii. 78 iii. 130

19. கடிகாரமொன்றின் நிமிட முள்ளானது கடிகார முகத்தை ஒரு தடவை சுற்றி வருவதற்கு எடுக்கும் காலம்
    i. 30 நிமிடங்கள்
    ii. 1 மணித்தியாலம்
    iii. 60 செக்கன்கள்

20. ரூபாய் 350 ன் 3/7 பங்கு எவ்வளவு?
    i. ரூ. 250.00 ii. ரூ. 200.00 iii. ரூ.150.00

21. 6 பேனாக்களின் விலை ரூ. 72.00 எனில் 2 பேனாக்களின் விலை என்ன?
    i. ரூ. 24.00 ii. ரூ. 36.00 iii. ரூ. 40.00

22. இரண்டு மின்கம்பங்களுக்கிடையே 2 கொடிகள் வீதம் தொங்கவிடப்பட்டன. அது போல் 8 மின்கம்பங்களுக்கு இடையே எத்தனை கொடிகள் தொங்க விடப்படும்?
    i. 12 ii. 14 iii. 16

23. 5 ஞாயிற்றுக்கிழமைகள் உள்ள ஓர் ஏப்ரல் மாதத்தில் அந்த ஞாயிற்றுக்கிழமைகளின் திகதிகளில் மொத்த எண்ணிக்கையாக இருக்கக் கூடிய உயர்ந்தபட்ச பெறுமானம்
    i. 75 ii. 78 iii. 80

24. **'முயன்றால் வெற்றி பெறலாம்'** என்ற கூற்று
    i. எப்போதும் உண்மை
    ii. பெரும்பாலும் உண்மை
    iii. ஒருபோதும் உண்மையாகாது

25. ஒரு கயிற்றினை இரு சம பகுதிகளாக வெட்டி அதன் ஒரு பகுதி மறுபடியும் 4 சமதுண்டுகளாக வெட்டி ஒரு துண்டின் நீளமானது 1m எனின் தொடக்கத்தில் இருந்த கற்றின் நீளம்
    i. 8m ii. 5 m iii. 4 m

26. ஞாயிறு, செவ்வாய், வியாழன், சனி அடுத்து வரவேண்டிய தினம்
    i. திங்கள் ii. செவ்வாய் iii. புதன்

27. ரூபாய் 245 – DBM
    ரூபாய் 130 – CLN எனில்
    ரூபாய் 435
    i. BCM ii. BLM iii. MCL

28. கமலன் காலை 7 மணிக்கு பாடசாலைக்கு புறப்பட்டு 7.25க்கு பாடசாலையை அடைந்தான். அவன் பயணத்திற்கு செலவழித்த கால அளவு எவ்வளவு?
    i. 25 நிமிடங்கள் ii. 20 நிமிடங்கள் iii. 15 நிமிடங்கள்

29. நிமலிடம் ரூ. 100, ரூ. 50, ரூ. 20 காசுத் தாள்கள் மாத்திரம் உள்ளன. அவற்றின் மொத்த தொகை ரூ. 250 எனில் அவனிடமிுள்ள 20 ரூபாய் தாள்களின் மொத்த எண்ணிக்கை யாது?
    i. 2 ii. 3 iii. 5

30. ஒரு ஒற்றை எண்ணையும் ஒரு இரட்டை எண்ணையும் கூட்டும் போது பெறப்படுவது
    i. இரட்டை எண் ii. ஒற்றை எண் iii. கூறமுடியாது

31. ரூபாய் 25.00 மதிப்புள்ள 6 பென்சில்கள் வாங்கும் பணத்திற்கு ரூபாய் 75.00 மதிப்புள்ள எத்தனை புத்தகங்கள் வாங்க முடியும்
    i. 2 ii. 3 iii. 4

(18ஆம் பக்கம் பார்க்க)



# புலமைக் கதிர்

## தரம்-5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

(17 ஆம் பக்கத் தொடர்)

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – I

32. **22 : 30** இந்த நேரத்தை சாதாரண நேரமாக எழுதினால்
i. பி.ப. 10.30 ii. மு.ப. 10.30 iii. பி.ப. 12.30

33. ஒரு கூடையில் 27 மாம்பழங்களை வைக்கலாம். அதுபோல 135 மாம்பழங்களை வைக்க எத்தனை கூடைகள் வேண்டும்?
i. 3 ii. 4 iii. 5

34. ஒரு தேக்கரண்டி கொள்ளும் திரவத்தின் கொள்ளளவு யாது?
i. 2 ml ii. 5 ml iii. 10 ml

35. 
இங்குள்ள சிறிய சதுரமொன்றின் ஒரு பக்க நீளம் 1 cm எனில் இந்த சதுரத்தின் சுற்றளவு யாது?
i. 6 cm
ii. 9 cm
iii. 12 cm

36. 

இந்தக் கூட்டிலுள்ள எண்கள் அனைத்தையும் கொண்டு ஆக்கக்கூடிய மிகச் சிறிய எண்
i. 1239
ii. 1329
iii. 1293

37. ரவி எனது அண்ணா, குமார் எனது தம்பி எனவே நான் அவர்களின்
i. அண்ணன் ii. தம்பி iii. சகோதரன்

38. **3 x 6 + 7 – 5 = ?**
i. 15 ii. 20 iii. 25

39. ஒரு பேருந்தில் ஐவர் ஏற மூவர் இறங்கினர். ஏற்கனவே அப்பேருந்தில் 43 பேர் இருந்தனர் எனில் இப்போது இருப்பவர்களின் எண்ணிக்கை யாது?
i. 45 ii. 47 iii. 48

40. ஒரு கடிகாரம் 10 நிமிடங்கள் தாமதமாக ஓடியது. காலை 7 மணி 20 நிமிடமாகும் போது அக்கடிகார முகம் காட்டும் நேரம் என்ன?
i. 7 மணி
ii. 7 மணி 10 நிமிடங்கள்
iii. 7 மணி 30 நிமிடங்கள்

## வினாத்தாள் ii இற்கான விடைகள் (11.02.2022)

1. 1 (மங்கையர்), 2(மாணிக்க கங்கை), 3(வாருங்க), 4 (சிங்கார),
5 (பூட்டுங்கடி), 6 (மூங்கிலிலையிலே, 7(பச்சை), 8(முத்தாளம்மனுக்கு),
9. (கிராமியப் பாடல்), 10.(வளைந்து)
2. (அ) 1(கறி), 2(விழா), 3(மணம்), (ஆ) 1(அநாதை),
2 (அகராதி), 3(வெள்ளிவிழா)
3. 1 (எனக்கு பாண் விருப்பம்), 2(நான் குளிக்கின்றேன்),
4. 1 (come here)
5. 1 (kite), 2(nest)
6. (பொத),
7. (வகுப்பு)
8. (கதிரவன், நூல், தரணி),
9. 1 (இரவும்), 2(அறம்), 3(அகம்/ மனம்),
10.(3), 11.(2), 12.(1), 13.(1), 14.(2), 15.(2), 16.(1), 17.(3),
18.(3), 19.(2), 20.(3), 21.(2), 22.(2), 23.(3), 24.(2),
25.(3), 26.(1), 27.(2), 28.(3), 29.(3), 30.(2), 31.(3),
32.(2), 33.(3), 34.(1), 35.(1), 36.(3),
37.(3), 38.(3), 39.(2), 40.(9100),
41.(26098, 26100), 42. 1(742),
2(247), 43.(நானு+று), 44.(v,7,ix,ii),
45.(ரூ. 98), 46.(12), 47.(35),
48.(8166), 49.(125ml), 50.(15(cm), 51.(155Km),
52. 1(சதுரமுகி), 2(12), 53.1(4), 2(29),
54.(பரக்குதம்மா), 55.(கர்ணன்),
56.(சுப்ரமணிய பாரதியார்), 57.(பூவாக),
58.(நின்றது), 59.(அழகானவை),
60.(பொருத்தமான வாக்கியங்கள்)

## மரபுத் தொடர்கள் - விளக்கங்கள்

| | | |
|---|---|---|
| ★ அள்ளிக் குவித்தல் | - | நிறையச் சம்பாதித்தல் |
| ★ அறைகூவுதல் | - | போருக்கு அழைத்தல் |
| ★அரை மனிதன் | - | மதிப்பில்லாதவன் |
| ★அண்டப்புழுகன் | - | பொய்காரன் |
| ★அலைக்கழித்தல் | - | அலட்சியம் செய்தல் |
| ★ அறுதியிடுதல் | - | முடிவுகட்டுதல் |
| ★ அரைப்படிப்பு | - | நிரம்பாத கல்வி |
| ★அடியொற்றுதல் | - | பின்பற்றுதல் |
| ★அள்ளியிறைத்தல் | - | அளவுக்கு மேல் செலவு செய்தல் |
| ★அடுக்கு பண்ணுதல் | - | ஆயத்தம் செய்தல் |
| ★அடியிடுதல் | - | தொடங்குதல் |
| ★அடிபிழைத்தல் | - | நெறி தவறி நடத்தல் |
| ★அரக்கப் பறக்க | - | விரைவாக |
| ★ அவசரக்குடுக்கை | - | பதற்றக்காரன் |
| ★அகலக் கண் வைத்தல் | - | அளவு கடந்து போதல் |
| ★அழுங்குப்பிடி | - | விடாப்பிடி |
| ★அறுதியிடல் | - | முடிவு கட்டுதல் |
| ★ அமளி செய்தல் | - | குழப்பம் செய்தல் |
| ★அடி பணிதல் | - | கீழ்ப்பணிதல் |

# பாரிசவாதம் ஏற்பட்டதும் நான்கரை மணி நேரத்தினுள் உரிய வைத்தியசாலைக்கு விரைந்து செல்ல வேண்டும்!

**பாரிசவாதம் இரத்தக் குழாயில் ஏற்படும் அடைப்பினாலேயே ஏற்படுகிறது. இந்த அடைப்பு நிகழ்வதற்கு முக்கிய மூன்று காரணிகளை சொல்லலாம். அதாவது குருதிக்குழாய்களில் ஏற்படும் நோய் நிலைமைகளும், குருதியில் காணப்படுகின்ற அதன் அதிகரித்த உறையும் தன்மையும், இதயத்தில் இரத்த உறைவு ஏற்பட்டு சிறு குருதிக் கட்டிகள் மூளையின் குருதிக் குழாய்களை அடைப்பதனாலுமே அடைப்பு ஏற்படுகின்றது. இவ்வாறு கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் பொதுவைத்திய நிபுணர் பிரியங்கா கலைவேந்தன் தினகரனுக்கு அளித்த நேர்காணலில் தெரிவித்தார்.**

**கேள்வி: உண்மையிலேயே பாரிசவாதத்தின் போது என்ன நடக்கிறது?**

**பதில்:** பக்கவாதத்தின் போது (stroke) மூளையின் தொழிற்பாட்டிற்குத் தேவையான இரத்த விநியோகம் துண்டிக்கப்படுகிறது. மூளை இயங்குவதற்கு தேவையான ஓட்சிசன் மற்றும் போசணை பதார்த்தங்கள் தடைப்படுவதனால் மூளையின் கலங்கள் அதன் செயற்பாட்டை இழக்கின்றன. இந்த நிலையையே பாரிசவாதம் என்கிறோம். இரத்த ஓட்டமானது இரு வகைகளில் தடைப்படலாம். அதாவது குருதிக்குழாய்களில் ஏற்படும் அடைப்புகளினாலும் (ischemic stroke), குருதிக்குழாய்களில் உண்டாகும் இரத்த கசிவினாலும் (haemorrhagic stroke) பாரிசவாதம் ஏற்படுகிறது. பெரும்பாலும் 87 வீத பாரிசவாத நிலமைகள் இக்காரணத்திலேயே ஏற்படுகின்றன.

## புகைபிடிப்பதை நிறுத்துவதன் மூலம் பாரிசவாதம் ஏற்படும் அபாயத்தைக் குறைக்கலாம்

**கேள்வி: பாரிசவாதம் ஏற்படாமல் தவிர்த்துக் கொள்ள எவ்வாறான வாழ்கைமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும்?**

**பதில்:** ஆரோக்கியமான உணவுகளை உட்கொள்வது, தொடர்ந்து உடற்பயிற்சி செய்வது, உயரத்துக்கேற்ற ஆரோக்கிய உடல் நிறையை பேணுதல், உளவள ஆரோக்கியத்தை பேணுதல், புகைபிடித்தல் மற்றும் அதிக மது அருந்துவதைத் தவிர்ப்பது போன்ற அடிப்படையான விடயங்களை பின்பற்றுவதே பாரிசவாதத்தை தடுப்பதற்கான சிறந்த வழிகளாகும். ஆரோக்கியமற்ற உணவுகள் இரத்த அழுத்தம் மற்றும் கொலஸ்ட் ரோல் அளவை அதிகரிக்க வழி வகுப்பதனால், பாரிசவாதம் ஏ ற்படும் வாய்ப்புகள் அதிகரிக்கலாம். பழங்கள், காய்கறிகள், தானியங்கள் அடங்கலாக குறைந்த கொழுப்பு, அதிக நார்ச்சத்துள்ள உணவுகள் பொதுவாக பரிந்துரைக்கப்படுகின்றன. வழக்கமான உடற்பயிற்சியுடன் ஆரோக்கிய உணவை இணைப்பதே ஆரோக்கியமான எடையை பராமரிக்க சிறந்த வழியாகும். சீரான உடற்பயிற்சி கொழுப்பைக் குறைக்கவும் இரத்த அழுத்தத்தை ஆரோக்கியமாக வைத்திருக்கவும் உதவும்.



பெரும்பாலானவர்களுக்கு ஒவ்வொரு வாரமும் குறைந்தபட்சம் 150 நிமிடங்கள் அதாவது குறைந்தது ஒரு நாளைக்கு 30 நிமிடங்களுக்கான உடற்பயிற்சி, அதாவது சைக்கிள் ஓட்டுதல் அல்லது வேகமாக நடப்பது போன்ற செயற்பாடுகள் பரிந்துரைக்கப்படுகின்றன. புகைபிடித்தல் என்பது பாரிசவாதம் ஏற்படும் அபாயத்தை கணிசமாக அதிகரிக்கிறது. இது நமது இரத்தக் குழாய்களை சுருக்கி, இரத்தத்தை உறைய வைக்கிறது. புகைபிடிப்பதை நிறுத்துவதன் மூலம் பாரிசவாதம் ஏற்படும் அபாயத்தைக் குறைக்கலாம். புகைபிடிக்காமல் தவிர்த்தால், அது நமது பொது ஆரோக்கியத்தை மேம்படுத்துவதோடு நுரையீரல் புற்றுநோய் மற்றும் இதய நோய் போன்ற தீவிர நோய்கள் உருவாகும் அபாயத்தையும் குறைக்கும்.

அதிகப்படியான மதுப்பாவனை உயர் இரத்த அழுத்தத்திற்கு வழிவகுக்கும் மற்றும் ஒழுங்கற்ற இதயத் துடிப்பை ஏற்படுத்தலாம். இவை இரண்டும் பாரிசவாதம் ஏற்படும் அபாயத்தை அதிகரிக்கும். அதிக குடிப்பழக்கம் பாரிசவாதம் ஏற்படும் அபாயத்தை மூன்று மடங்குக்கு மேல் அதிகரிக்கிறது.

**கேள்வி: பாரிசவாதம் ஏற்பட்டவுடன் சில மணி வேளைகளுக்குள் பாரிசவாதம் ஏற்பட்டவரை முந்திய நிலைக்கு கொண்டு வர முடியுமா?**

**பதில்:** ஆம். பிரதானமாக இரு வகையான சிகிச்சை முறைகளுள்ளன. முதலாவது த்ரோம்போலிசிஸ் (Thrombolysis) என்று அழைக்கப்படும் முறையில் பாரிசவாதம் ஏற்பட்டு நான்கரை மணித்தியாலங்களுக்குள் Alteplase எனும் மருந்தை செலுத்துவதன் மூலம் ஏற்பட்டுள்ள இரத்த உறைவை கரைத்து பழைய நிலைக்கு கொண்டுவர வாய்ப்புள்ளது. இரண்டாவது முறையானது மெக்கானிக்கல் த்ரோம்பெக்டோமி (mechanical thrombectomy) எனப்படும் நேரடியாக இரத்த உறைவை வெளியேற்றும் சிகிச்சையாகும். இதனை பக்கவாதம் ஏற்பட்டு 24 மணித்தியாலங்களுக்குள் செய்ய முடியும்.

## கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் பொதுவைத்திய நிபுணர் பிரியங்கா கலைவேந்தன் அளிக்கும் மருத்துவ விளக்கம்

**கேள்வி: பாரிசவாதம் பெரும்பாலும் எவ் வயதிலுள்ளவர்களுக்கு அதிகம் ஏற்படுகிறது ?**

**பதில்:** தரவுகளின்படி சராசரியாக 44 வயதை நெருங்கும் ஒருவருக்கு பக்கவாதம் ஏற்படுவதற்கான ஆபத்து நிலைமை காணப்படுகிறது. வயது அதிகரிக்கும் போது இந்நிலைமை மேலும் அதிகரிக்கும். உதாரணமாக ஒருவர் 65 வயதிற்கு மேற்படும் போது மேற்கூறிய ஆபத்து நிலைமை ஆறு மடங்காக அதிகரிக்கும்.

**கேள்வி: வளர்ந்த நாடுகளில் மேற்கொள்ளப்படும் பாரிசவாத சிகிச்சைகளுடன் ஒப்பிடும் போது இலங்கையின் சிகிச்சை முறைகளை எவ்வாறு பார்க்கின்றீர்கள் ?**

**பதில் :** த்ரோம்போலிசிஸ் என்று அழைக்கப்படும் சிகிச்சை முறை இலங்கையில் சில அரச வைத்தியசாலைகளில் மாத்திரமே பிரயோகிக்கப்படுகிறது.மேலும் நானறிந்த வரையில் மெக்கானிக்கல் த்ரோம்பெக்டோமி எனப்படும் சிகிச்சையே சில தனியார் வைத்தியசாலைகளில் காணப்படுகிறது.

கேள்வி: பாரிசவாதத்தினால் மரணத்தை தழுவுபவர்களின் வீதம் இலங்கையில் எவ்வாறுள்ளது?

பதில்: உலகளாவிய ரீதியில் பக்கவாத நிலைமையானது வலது குறைவு மற்றும் இறப்பு ஏற்படுவதற்கான பிரதான காரணங்களுள் ஒன்றாகக் காணப்படுகிறது. உலக சுகாதார ஸ்தாபனத்தின் 2018 ஆம் ஆண்டின் தரவுகளின் அடிப்படையில், இலங்கையில் மொத்த இறப்பு வீதத்தில் பக்கவாத இறப்பு சுமார் 10 வீதமாக காணப்படுகிறது.



**கேள்வி: பாரிசவாதம் ஏற்பட்டவர்களுக்கு இதர சிகிச்சைகளும் தேவைப்படுமா?**

**பதில்:** ஆம், நான் ஏற்கனவே கூறிய அனைத்து சிகிச்சைகளும் நோயாளியின் நிலைமைக்கேற்ப தேவைப்படலாம். அத்தோடு மீண்டும் பக்கவாத நிலைமை ஏற்படாமல் தடுப்பதற்கான சிகிச்சைகளும் தேவைப்படலாம்.

**கேள்வி: மூளையில் குருதி உறைகின்ற பாரிசவாத நோயாளர்களுக்கு, குருதியை உடனடியாக கரைக்கக் கூடிய சிகிச்சை கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையிலுள்ளதனால் வேறு வைத்தியசாலைகளின் நோயாளர்கள் சிகிச்சை பெற கல்முனையை நாட முடியுமா ?**

**பதில்:** ஆம். பக்கவாதம் ஏற்பட்டு நான்கரை மணித்தியாலங்களுக்குள் கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையை அடைய முடியுமாயின் எந்த வைத்தியசாலை நோயாளர்களும் சிகிச்சைகளை பெற முடியும்.

**கேள்வி: பாரிசவாதமும் பாதுகாப்பும் தொடர்பாக பொதுமக்களுக்கு நீங்கள் கூற விழைவது என்ன?**

**பதில்:** எளிமையாகச் சொன்னால், குணப்படுத்துவதை விட நோய்த் தடுப்பு சிறந்தது. ஒரு நோய் ஏற்பட்ட பின்னர் அதற்கு சிகிச்சையளிப்பதை விட அதனை முன்கூட்டியே தடுப்பதே சிறந்தது ஆகும்.

## 'நோய் வந்த பின்னர் சிகிச்சை செய்வதை விட, வருமுன் காப்பதே சிறந்தது'

பாக்கியராஜா மோகனதாஸ் ...✍
(மண்டூர் குறூப் நிருபர்)

# கிழக்கின் குரல்



## மட்டு.மாவட்டத்தில் கசிப்பு உற்பத்தி நிலையங்கள் பெருமளவு முற்றுகை

### மட்டக்களப்பு மாவட்ட மதுவரித் திணைக்களம்

**வெல்லாவெளி தினகரன் நிருபர்**



மட்டக்களப்பு மாவட்டத்தில் மதுவரித் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படும் விசேட நடவடிக்கைகளில் பெருமளவான கசிப்பு உற்பத்தி நிலையங்கள் முற்றுகையிடப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட மதுவரித் திணைக்களம் தெரிவித்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் இந்த முற்றுகை முன்னெடுக்கப்பட்டு வந்ததாகவும் கடந்த ஒரு மாதகாலமாக முன்னெடுக்கப்பட்ட இந்த முற்றுகையில் 16 கசிப்பு உற்பத்தி நிலையங்கள் முற்றுகையிடப்பட்டதாகவும் மதுவரித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட மதுவரித்திணைக்கள அத்தியட்சகர் எஸ்.ரஞ்சன் ஆலோசனைக்கு அமைவாக மட்டக்களப்பு மதுவரித்திணைக்கள பொறுப்பதிகாரி நியூட்டன் அவுட்ஸ்கோன் தலைமையில் இந்த முற்றுகை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வாழைச்சேனை,வாகரை,செங்கலடி,கிரான் ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் இந்த முற்றுகை முன்னெடுக்கப்பட்டதாகவும் இதன்போது போதைப்பொருள் விற்பனை மற்றும் உற்பத்தி ஆகியவை தொடர்பில் 94 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக எஸ்.ரஞ்சன் தெரிவித்தார்.

கடந்த ஒரு மாதத்தின் போது 16 கசிப்பு உற்பத்தி நிலையங்கள் முற்றுகையிடப்பட்டதுடன் அங்கிருந்த பொருட்களும் பெருமளவான கசிப்பும் மீட்கப்பட்டதாகவும் கசிப்பு விற்பனை செய்த 47 பேருக்கும், சட்ட விரோத மதுபான உற்பத்தியில் ஈடுபட்ட 12 பேருக்கும் சட்ட விரோத பியர் விற்பனை செய்த 11 பேருக்கும் சட்ட விரோத கள்ளு விற்பனை செய்த 04 பேருமாக எல்லாம் 94 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

## திருமலை சேருநுவரவில் காட்டு யானைகளால் வாழ்வாதார பயிர்கள் நாசம்

**ரொட்டவெவ குறூப் நிருபர்**



திருகோணமலை சேருநுவர பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஆதியம்மன் கேணி கிராமத்திற்குள் புதன்கிழமை (16) அதிகாலை உட்புகுந்த காட்டு யானைகள் வீடொன்றை பகுதியளவில் தாக்கி வீட்டிலிருந்த பொருட்களை சேதப்படுத்திச் சென்றுள்ளது. அத்தோடு கிராமத்திற்குள் உட்புகுந்த காட்டு யானைகள் 30க்கும் மேற்பட்ட தென்னை மரங்கள், 100க்கும் மேற்பட்ட வாழை மரங்களையும் சேதப்படுத்திச் சென்றுள்ளதாக பிரதேச மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.



கூலித்தொழில் செய்து ஜீவனோபாயத்தை கொண்டு நடாத்தும் நாம் காட்டு யானைகளால் பாதிக்கப்பட்டு வருவதால் இதற்குரிய நஷ்ட ஈட்டினையும், யானைப் பாதுகாப்பு வேலியையும் பெற்றுத்தர வேண்டுமென கோரிக்கை விடுக்கின்றனர்.

யானைகளுக்கு ஏதாவது நடந்தால் ஓடோடி வரும் அதிகாரிகள், யானைகள் மனிதர்களையோ அவர்களது உடமைகளுக்கோ சேதப்படுத்தினால் அதனை கண்டு கொள்வதில்லையென இவர்கள் விசனம் தெரிவிப்பதோடு இதுவரை தமது கிராமத்தில் 10 க்கும் மேற்பட்டோர் காட்டு யானைகள் தாக்கி உயிரிழந்துள்ளதாகவும் ஆதியம்மன்கேணி கிராம மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.



பாலமுனை பிரதான வீதியை குறுக்கறுத்துச் செல்லும் வெள்ளையர் வீதி நீண்ட காலமாக குண்டும் குழியுமாக காணப்படுவதனால் பாதசாரிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். மழை காலங்களில் நீர் வடிந்தோடாமல் தேங்கி நிற்பதனால் மாணவர்களும்,வயோதிபர்களும் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.

(படம்: பாலமுனை தினகரன் நிருபர்)

## அபாயம் இன்னும் நீங்கவில்லை மக்கள் அவதானமாக செயற்படவும்

### எதிர்க்கட்சித் தலைவர் காரைதீவில் வேண்டுகோள்

**(காரைதீவு குறூப் நிருபர்)**





டெல்டா எனும் கொடிய வைரஸ் தொற்றினால் நான் பாதிக்கப்பட்டு குணமடைந்தது நீங்கள் அறிவீர்கள். இப்போது நாடு மீண்டும் வழமைக்குத்திரும்பி விட்டதாக எண்ணிக் கொண்டே அரசாங்கம் செயல்படுகின்றது. ஆனால் அபாயம் இன்னும் நீங்கவில்லை என்பதை நாம் மறந்து விடக்கூடாது என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு நேற்றுமுன்தினம் புதன்கிழமை எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவினால் 30 இலட்சம் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு இடம் பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்முனை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி டாக்டர் இரா . முரளீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கல்முனைத் தொகுதி மக்கள் எனக்கு 83 வீதம் வாக்குகளை வழங்கினீர்கள். அதற்கு நான் இப்போது நன்றி கூறுகின்றேன். நீங்கள் அடுத்த தேர்தலில் ஜனாதிபதியாக என்னைத் தெரிவு செய்தால் கல்முனைக்கு வந்து உங்களது தேவைளைப் பூர்த்தி செய்து தருவேன்.

சுமார் 213 வருடங்கள் மிகவும் பழமை வாய்ந்த இவ்வைத்தியசாலை சுமார் 5 இலட்சம் பொது மக்களுக்கான சேவையை மேற்கொண்டு வருகின்றது. எனவே இங்குள்ள தேவைகளை முடியுமான வரை பெற்றுத்தர முயற்சி எடுக்கப்படும்.

சம்பிரதாய எதிர்க்கட்சிகள் போன்றல்லாது ஒரு திட்டமிட்ட அடிப்படையில் பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக நாம் செயற்பட்டு மக்களின் சுகாதாரத்திற்கும் அவர்களின் உயிர்களைப் பாதுகாக்கவும் நாம் முன்னின்று உழைத்து வருகின்றோம். இதையும் அரசியல் காழ்ப்புணர்ச்சி கொண்ட சிலர் வேறு மன நிலை கொண்டே பார்க்கின்றனர்.

உலகிலேயே ஒரு எதிர்க்கட்சி மக்களின் நலனுக்காக அரசு போன்று பெரும் தொகைப்பணத்தை செலவு செய்கிறோம் என்றால் அது நாம்தான்.

## பாண்டிருப்பு கடற்கரைப் பகுதியில் புதிய துப்பாக்கி ரவைகள் மீட்பு

**பெரியநீலாவணை விசேட நிருபர்**



கடற்கரை பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் புதிய பல்வேறு வகையான துப்பாக்கி ரவைகளை கடற்படையினர் மீட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாண்டிருப்பு கடற்கரைப் பகுதியில் நேற்று (17) முற்பகல் புலனாய்வு தகவல் ஒன்றிற்கமைய பிளாஸ்டிக் வடிவம் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கரையொதுங்கிய இந்த துப்பாக்கி ரவைகள் கைப்பற்றப்பட்டுள்ளது. இத்தேடுதல் நடவடிக்கையை கல்முனை கடற்படையினர் மேற்கொண்டதுடன் துப்பாக்கி ரவைகள் புதிதாக காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும் கைப்பற்றப்பட்ட ரவைகளை கல்முனை பொலிசாரிடம் ஒப்படைப்பதற்கான பணியினை கடற்படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

## உதவிப் பிரதேச செயலாளராக அய்மா நிஃமத்துல்லா நியமனம்

**மருதமுனை தினகரன் நிருபர்**

ஒரு வருட காலத்திற்கு மாதாந்த வாடகை அடிப்படையில் பிரேமகீர்த்தி டி அல்விஸ் மாவத்தையின் நடைபாதைக்கு முகப்பாக கொழும்பு-07, டொரிங்டன் சதுக்கம், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன இடப்பரப்பில் 120 சதுர அடியுள்ள பால் உற்பத்திகள் விற்பனைக் கூடமொன்றை (கபே) வாடகைக்கு வழங்குவதற்காக முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. மின்சாரம் மற்றும் நீர் ஆகியன கூட்டுத்தாபனத்தினால் இலவசமாக வழங்கப்படும். பால் உற்பத்திகள் விற்பனைக் கூடத்தை (கபே) பரீட்சித்த பின்னரே உங்கள் முன்வைப்பானது சமர்ப்பிக்கப்படல் வேண்டும். தெரிவு செய்யப்பட்ட நபரானவர் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துடன் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடப்படல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பிரதான கணக்காளரிடம் 2,000 ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், கொழும்பு-07, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன பெறுகைக்கான உதவி பணிப்பாளரிடமிருந்து கேள்விப் படிவங்களை பெற்றுக் கொள்ளலாம்.

2022.03.16 ஆம் திகதியன்று பி.ப. 3 மணி வரையும் கேள்விப் படிவங்கள் வழங்கப்படும். கேள்விகள் பதிவுத் தபாலில் தலைவர், பெறுகைக்குழு, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், சுதந்திர சதுக்கம், கொழும்பு-7 என்ற முகவரிக்கு 2022.03.17 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரடியாக சேர்க்கப்படல் வேண்டும். கேள்விகள் 2022.03.17 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்குப் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்.**

## பெறுகை அறிவித்தல்

### வைத்தியசாலை உணவகத்தை நடத்திச் செல்லல் 2022/ 2023

**போதனா வைத்தியசாலை - குருநாகல்**

1. குருநாகல் போதனா வைத்தியசாலையின் உணவகத்தை 2022/ 2023 வருடங்களுக்கு நடத்திச் செல்வதற்கு வழங்குநர் ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்கு அதற்காக தகைமையுள்ள வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. இதுபற்றி ஆர்வம் காட்டுகின்ற சேவை வழங்குநர்களிடமிருந்து 2022.03.02 மு.ப. 10.00 வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கேள்வி திறத்தல் அன்றைய தினம் அந்த நேரத்தில் பணிப்பாளர் பணிமனையில் இடம்பெறுவதுடன், அவ்வேளையில் உங்களுக்கு அல்லது உங்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதி நிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
3. கேள்வி ஆவணங்களை 2022.02.28 பி.ப. 3.00 வரை ரூ. 2500.00 தொகையை வைத்தியசாலையின் காசாளரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்த பின்னர் தலைமையகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
4. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் இரு பிரதிகளுடன் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு பொறியிட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் ‘வைத்தியசாலை உணவகத்தை நடத்திச் செல்வதற்கான விலைமனுக்கள் - 2022/2023’ என்று குறிப்பிட்டு ‘தலைவர், பெறுகைக் குழு, போதனா வைத்தியசாலை, குருநாகல்’ முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது பிரதம கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கொண்டு வந்து உள்ளிடலாம்.
5. அரச ஒப்பந்த நிபந்தனைகளை மீறி அபகீர்த்தியானோர் பட்டியல் படுத்தப்பட்டுள்ள நபர்கள் மற்றும் அரச நலன்புரி உணவகத்தை நடத்திச் செல்லும் போது அரசிற்கு அறவிடவேண்டிய கொடுப்பனவுகளை மீறியுள்ள மற்றும் ஒப்பந்தங்களை மீறியுள்ளவர்களுக்கு அல்லது அவர்களது பிரதிநிதிகளுக்கு கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.
6. குறித்த கேள்வியை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளல் அல்லது பூர்த்தியற்ற முறையில் சமர்ப்பித்துள்ள விலைமனுக்களுடன் கேள்வி ஆவணங்களைப் பூர்த்தி செய்யும் உரிமை குருநாகல் போதனா வைத்தியசாலையின் பெறுகைக் குழு தலைவருக்கு உரியது.
7. கிடைக்கப் பெறும் விலைமனுக்கள் மதிப்பீட்டுக் குழு ஒன்றினால் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர் தேர்ந்தெடுக்கப்படும் சேவை வழங்குநர்கள் வைத்தியசாலையுடன் பராமரிப்புச் சேவை ஒப்பந்தத்திற்கு உட்படுதல் வேண்டும்.
8. இது பற்றிய மேலதிக விபரங்கள் தேவையெனில் தொலைபேசி இல. 037-2233906ஐ அழைத்து நீடிப்பு இல. 2800 இல் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை,**
**குருநாகல்.**

## அபெக்ஷா வைத்தியசாலை – மஹரகம

### விலைமனுக்களுக்கான அழைப்பு

**ரசாவி கட்டிடத்தில் 2022/2023 ஆண்டுகளுக்காக குழாய் மருத்துவ வாயு முறைமையில் இயந்திராதிகள் மற்றும் ஆக்கக்கூறுகளின் தடைநீக்கல் மற்றும் சரியான பராமரிப்பு மற்றும் சேவைகளை வழங்கல்**

01. கீழே விபரிக்கப்பட்டவாறு 2022/23 ஆம் ஆண்டுகளுக்காக ரசாவி கட்டிடத்தில் குழாய் மருத்துவ வாயு முறைமையில் இயந்திராதிகள் மற்றும் ஆக்கக்கூறுகளின் தடைநீக்கல் மற்றும் சரியான பராமரிப்பு மற்றும் சேவைகளை வழங்குவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து மஹரகம, அபெக்ஷா வைத்தியசாலையின் சார்பாக பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
02. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் விலைமனுதாரர் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டவராகவுமிருத்தல் வேண்டும்.
03. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை அபெக்ஷா வைத்தியசாலையின் பணிப்பாளரிடமிருந்து வேலை நாட்களில் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 2.30 மணிக்குமிடையில் பெற்றுக் கொள்ளலாம்.
04. 2022.03.03 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக 3000.00 ரூபாவைச் செலுத்திய பின்னர், கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
05. விலைமனுக்கள் 49 நாட்கள் காலப்பகுதிக்கு செல்லுபடியாகும் தன்மையில் இருத்தல் வேண்டுமென்பதுடன் ஆரம்பமாகும் உண்மையான திகதியிலிருந்து ஒப்பந்தக் காலமானது ஒரு வருடமாகும்.
06. 2022.03.04 ஆம் திகதியன்று மு.ப. 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டுமென்பதுடன் 77 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டுமென்பதுடன் 10,000.00 ரூபாவிற்கானதும் இலங்கையிலுள்ள புகழ் வாய்ந்த வங்கியிலிருந்து அல்லது அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதி கம்பனியிடமிருந்து பெறப்பட்ட விலைமனுப்பிணையொன்றுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். மேலே குறிப்பிட்டுள்ள நேரத்தின் பின்னர் உடனடியாகவே கீழேயுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
07. பெறுகை குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.
08. மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரி பின்வருமாறு:

**பணிப்பாளர்,**
**அபெக்ஷா வைத்தியசாலை,**
**மஹரகம.**
**தொலைபேசி/தொலைநகல்: 0112 840233**




## உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு

### மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்கான பெறுகை அறிவித்தல்

01. கீழ்க்காணும் மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்கான பொறியிடப்பட்ட விலைமனுக்களை, கீழே குறிப்பிடப்படும் மூடப்படும் நாள் மு.ப.10.00 மணிவரை, சுகாதார அமைச்சு, பெறுகைக் குழுத் தலைவர் பெற்றுக்கொள்வார்.

| | உருப்படி | விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளக் கூடிய காலம் | | மூடப்படும் திகதி | BES அலுவலகத்திற்கு செலுத்த வேண்டிய மீளளிக்கப்படாத கட்டணம் | மதிப்பிடப்பட்ட செலவு (ரூபா) மில்லியனில் |
|---|---|---|---|---|---|---|
| | | முதல் | வரை | | | |
| 1 | 03 Nos. Echocardiography Machines | 18.02.2022 | 10.03.2022 | 11.03.2022 | 12500.00 | 45 |

02. இலங்கை சந்தைக்கு மருத்துவ உபகரணங்களை வழங்கும் உற்பத்தியாளர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் / மொத்த பெயர் குறிப்பிடும் பிரதிநிதிகள் மாத்திரம் இப்பெறுகையில் கலந்துகொள்ளத் தகைமை பெறுவர்.
03. எந்த ஆர்வமுள்ள தகைமையான விலைமனுதாரர்களாலும் கொள்வனவு செய்யப்படும் நகல்களுடனான ஓர் முழுமையான தொகுதி விலைமனு ஆவணங்களில் பொறியிடப்பட்ட விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
04. மேலே குறிப்பிடப்படும் கால எல்லையில் மு.ப.09.00 முதல் பி.ப.3.00 இற்கு இடையில் கொழும்பு -10, டி சேரம் பிளேஸ், 27, உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு, பணிப்பாளர் (நிதி) இடமிருந்து விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும்.
(தொ.பே - 011-2691916, 2694479 - பெக்ஸ் இல -011-2698317)
05. கொழும்பு -10, டி சேரம் பிளேஸ், 27, உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு, பணிப்பாளர் (நிதி) அலுவலகத்தில் விலைமனுக்கள் மூடப்பட்ட பின்பு உடனடியாக திறக்கப்படும்.
06. கொழும்பு -10, டி சேரம் பிளேஸ், 27, உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு, பணிப்பாளர் (நிதி) இன் அலுவலகத்தில் இலவசமாக விலைமனு ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
07. விலை ஆவணங்களுடன் கம்பனி பதிவாளரால் வழங்கப்படும் ஒப்பந்த பதிவு சான்றிதழை தயவுசெய்து சமர்ப்பிக்கவும்.
08. மேலதிக தகவல்களை உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு, பணிப்பாளர் (நிதி) இடமிருந்து தொ. பே இல : 2684732 மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்/ பெறுகைக்குழு,**
**உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு,**
**27, டி சேரம் பிளேஸ்,**
**கொழும்பு - 10.**

## உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு

### மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்கான பெறுகை அறிவித்தல்

01. கீழ்க்காணும் மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்கான பொறியிடப்பட்ட விலைமனுக்களை, கீழே குறிப்பிடப்படும் மூடப்படும் நாள் மு.ப.10.00 மணிவரை, சுகாதார அமைச்சு, பெறுகைக் குழுத் தலைவர் பெற்றுக்கொள்வார்.

| | உருப்படி | விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளக் கூடிய காலம் | | மூடப்படும் திகதி | BES அலுவலகத்திற்கு செலுத்த வேண்டிய மீளளிக்கப்படாத கட்டணம் | மதிப்பிடப்பட்ட செலவு (ரூபா) மில்லியனில் |
|---|---|---|---|---|---|---|
| | | முதல் | வரை | | | |
| 1 | 02 Nos. Pressure Swing Adsorption Oxygen Generation Plant | 18.02.2022 | 08.03.2022 | 09.03.2022 | 20,000.00 | 119 |
| 2 | 660 Nos. Pulse Oximeters | 18.02.2022 | 08.03.2022 | 09.03.2022 | 3,500.00 | 27 |
| 3 | 1995 Nos. Thermometer - Non Contact | 18.02.2022 | 08.03.2022 | 09.03.2022 | 3,500.00 | 10 |
| 4 | 03 Nos. Incinerators | 18.02.2022 | 08.03.2022 | 09.03.2022 | 12,500.00 | 62.5 |

02. இலங்கை சந்தைக்கு மருத்துவ உபகரணங்களை வழங்கும் உற்பத்தியாளர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் / மொத்த பெயர் குறிப்பிடும் பிரதிநிதிகள் மாத்திரம் இப்பெறுகையில் கலந்துகொள்ளத் தகைமை பெறுவர்
03. எந்த ஆர்வமுள்ள தகைமையான விலைமனுதாரர்களாலும் கொள்வனவு செய்யப்படும் நகல்களுடனான ஓர் முழுமையான தொகுதி விலைமனு ஆவணங்களில் பொறியிடப்பட்ட விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
04. மேலே குறிப்பிடப்படும் கால எல்லையில் மு.ப.09.00 முதல் பி.ப.3.00 இற்கு இடையில் கொழும்பு -10, டி சேரம் பிளேஸ், 27, உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு, பணிப்பாளர் (நிதி) இடமிருந்து விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும்.
(தொ.பே - 011-2691916, 2694479 - பெக்ஸ் இல -011-2698317)
05. கொழும்பு -10, டி சேரம் பிளேஸ், 27, உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு, பணிப்பாளர் (நிதி) அலுவலகத்தில் விலைமனுக்கள் மூடப்பட்ட பின்பு உடனடியாக திறக்கப்படும்.
06. கொழும்பு -10, டி சேரம் பிளேஸ், 27, உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு, பணிப்பாளர் (நிதி) இன் அலுவலகத்தில் இலவசமாக விலைமனு ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
07. விலை ஆவணங்களுடன் கம்பனி பதிவாளரால் வழங்கப்படும் ஒப்பந்த பதிவு சான்றிதழை தயவுசெய்து சமர்ப்பிக்கவும்.
08. மேலதிக தகவல்களை உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு, பணிப்பாளர் (நிதி) இடமிருந்து தொ.பே இல : 2684732 மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்/ பெறுகைக்குழு,**
**உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு,**
**27, டி சேரம் பிளேஸ்,**
**கொழும்பு - 10.**



**காலி கோட்டையில் அமைந்துள்ள டிரைடன் யுத்த மாடத்தில் அமைந்துள்ள 04 யுத்த அறைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான விலைமனுகோரல்**

**தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு**

# காலி மரபுரிமைகள் மன்றம்

**கேள்வி இலக்கம்: GHF/2022/PR/01**

01. தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் கீழ் உள்ள காலி மரபுரிமைகள் மன்றத்தினால் காலி கோட்டை, ரம்பாட் வீதியில் அமைந்துள்ள டிரைடன் யுத்த மாடத்தில் அமைந்துள்ள 04 யுத்த அறைகளை தகைமை வாய்ந்த மற்றும் தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து மாதாந்த குத்தகை அடிப்படையில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு அழைப்பு விடுக்கப்படுகின்றது.
02. வெற்றிகரமான விலைமனுதாரரினால் மேற்படி இடப்பரப்பில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் கைப்பணிப் பொருட்கள், முகமூடிகள், தங்க ஆபரணங்கள், சரிகை பட்டிகள் (Lace Ware), பித்தளைப் பொருட்கள், ஞாபகச் சின்னங்கள், துணிவகைகள் மற்றும் ஏனைய பரிசுப் பொருட்கள் போன்றவற்றை விற்பனை செய்யும் விற்பனை நிலையமாக நடாத்திச் செல்லல் வேண்டும்.
03 ஒப்பந்தக் காலம் மூன்று (03) வருடங்களாகும்.
04. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் பிரகாரம் விலைகள் கோரப்படும்.
05. சகல விலைமனுக்களும் 2022-07-06ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
06. இது தொடர்பான மேலதிக விபரங்களை காலி மரபுரிமைகள் மன்றத்தின் கணக்கிடல் பிரிவிலிருந்து (தொலைபேசி இல. 091-2246784) வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.
06. இது தொடர்பில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள், சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்ட முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றை மீளளிக்கப்படாத ஐந்நூறு ரூபா (500.00 ரூபா) கட்டணத்தைச் செலுத்தி காலி மரபுரிமைகள் மன்றத்தின் கணக்கிடல் பிரிவிலிருந்து 2022-03-09ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரைக்கிடையில் வேண்டுகோள் ஒன்றைச் செய்து பெற்றுக்கொள்ளலாம்.
08. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2022-03-08ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு இல. 12, ரம்பட் வீதி, கோட்டை, காலி எனும் முகவரியில் அமைந்துள்ள காலி மரபுரிமைகள் மன்றத்தின் தலைமை அலுவலகத்தில் இடம்பெறும்.
09. காலி, மரபுரிமைகள் மன்றத்தின் தலைவரின் பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட தொண்ணூறாயிரம் (90,000.00 ரூபா) பெறுமதியான நிபந்தனையற்ற விலைக்கோரல் பிணை முறியொன்றைச் (பிணை முறியை ரொக்கப் பணமாகவும் செலுத்தலாம்) சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அது 2022-07-06ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். (அதாவது விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் முதல் 119 நாட்கள் வரையில்)
10. சகல விலைமனுக்களையும் மேற்குறிப்பிடப்பட்ட வகையில் விலைக்கோரல் பிணைமுறி மற்றும் காலி மரபுரிமைகள் மன்றத்தின் கணக்கிடல் பிரிவிற்கு மீளளிக்கப்படாத விலைமனுக் கட்டணத்தை செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
11. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் மற்றும் நேரம் 2022-03-10ஆம் திகதி மு.ப. 10.00 மணியாகும்.
12. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென வெவ்வேறான உறைகளில் இட்டு முத்திரைக்குறி பொறித்தல் வேண்டும். பின் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக்குறி பொறித்து விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் மற்றும் நேரத்திற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் தலைவர், காலி மரபுரிமைகள் மன்றம், இல. 12, ரம்பட் வீதி, கோட்டை, காலி எனும் முகவரிக்கு அனுப்பலாம் அல்லது காலி மரபுரிமைகள் மன்றத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரில் கொண்டுவந்து உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் மற்றும் முழுமையற்ற விலைமனுக்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''டிரைடன் யுத்த மாடத்தின் 04 யுத்த அறைகளைக் குத்தகைக்கு வழங்குதல்'' எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.
13. சகல விலைமனுக்களும், விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து மேற்படி முகவரியில் திறக்கப்படும். இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
14. இந்த குத்தகை வழங்குதல் தொடர்பில் காலி மரபுரிமைகள் மன்றத்தின் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**பராக்கிரம தஹநாயக்க,**
**தலைவர்,**
**காலி மரபுரிமைகள் மன்றம்,**
**இல. 21, ரம்பட் வீதி,**
**கோட்டை, காலி.**
**2022-02-18**

**தொலைபேசி மற்றும் தொலைநகல்: 0912246784**
**மின்னஞ்சல் - herifo@sltnet.lk**
**இணையதளம் - www.galleheritage.gov.lk**

## பெறுகை அறிவித்தல்

**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை**

# கோழி இறைச்சி மற்றும் கோழி இறைச்சி ட்ரம்ஸ்டிக் வழங்கல்

**Q 113/22**

- உள்ளக நோயாளர்களினதும் மற்றும் வைத்தியசாலையின் ஊழியர்களினதும் நுகர்வுக்காக 2022/ 2023 ஆண்டில், நுகேகொடை, தளபத்பிட்டியவிலுள்ள ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைக்கு தொடர்ச்சியாக கோழி இறைச்சி மற்றும் கோழி இறைச்சி ட்ரம்ஸ்டிக் வழங்கலை உறுதிப்படுத்தக்கூடிய மற்றும் அரச வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுக்கு கோழி இறைச்சி மற்றும் கோழி இறைச்சி ட்ரம்ஸ்டிக் வழங்கல் தொடர்பாக குறைந்தபட்சம் மூன்றாண்டுக்கான திருப்திகரமான அனுபவத்தைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகள், வியாபார நிறுவனங்கள், உற்பத்தியாளர்களிடமிருந்து (வழங்குநர்களிடமிருந்து) பெறுகைக் குழுத் தலைவரினால், 2022.03.10 அன்று மு.ப. 10.00 வரை முத்திரையிடப்பட்ட விலைமனு கோரப்படுகின்றன. அதன் பிரகாரம், குறித்த வழங்குநர்களிற்கு மேற்படி உருப்படிகளை தினசரி ஓராண்டு காலத்திற்குத் தொடர்ச்சியாக வழங்கும் இயலுமை இருத்தல் வேண்டும்.
- இவ்விலைமனுக் கோரலானது, தேசிய போட்டி ரீதியிலுள்ள விலைமனுக்கோரும் முறைமையின் (NCB) பிரகாரம் நடாத்தப்படும். இதற்காக ஆர்வமுள்ள வழங்குநர்கள், பொது வைத்தியசாலையின் கணக்காளருக்கு மீளளிக்கப்படாத ரூபா 3,500.00 இற்கான தொகையை படிவக் கட்டணமாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை வழங்கல் பிரிவில் சமர்ப்பித்து, 2022.02.19 முதல் 2022.03.10 வரை, வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலப்பிரிவில் விலைமனுப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
- 2022/ 2023 ஆண்டிற்கான கோழி இறைச்சி மற்றும் கோழி இறைச்சி ட்ரம்ஸ்டிக்களின் கிட்டிய தேவைப்பாடு எண்ணிக்கை மற்றும் தகவல்கள், விண்ணப்பப்படிவங்களுடன் வழங்கப்படும்.
- தகைமைகளைப் பூரணப்படுத்தும் விண்ணப்பதாரர்கள் மாத்திரம் இதற்காக கவனத்திற் கொள்ளப்படும் என்பதுடன் வியாபாரப் பதிவுச் சான்றிதழுடன், பணிப்பாளருக்கு எழுத்துருவ விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிக்கும், விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்படும்.
- சமர்ப்பிக்கப்படும் கேள்வியின் வருடாந்தப் பெறுமானம் 05 மில்லியன் ரூபா அல்லது 05 இற்கு மேற்படுமாயின், பொது ஒப்பந்தங்கள் சட்டம் 08ஆம் பிரிவின் பிரகாரம், கம்பனிகள் பதிவாளரினால் வழங்கப்படும் பொது ஒப்பந்தங்கள் சான்றிதழ் (PCA 03 Form) குறித்த விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
- உரியவாறு கையொப்பமிட்டு, உத்தியோக இறப்பர் முத்திரையிட்டு விலைமனுக்கள் தபாலுறையொன்றில் சேர்த்து, அதன் இடது பக்க மேல் மூலையில், 2022/ 2023 ஆண்டில் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைக்கு கோழி இறைச்சி மற்றும் கோழி இறைச்சி ட்ரம்ஸ்டிக் வழங்கல், ஒப்பந்தம், எனக்குறிப்பிட்டு, 2022.03.10 அன்று மு.ப. 10.00 இற்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு கீழே காணப்படும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புவதற்கு அல்லது அதே முகவரியிலுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்ப்பதற்கு முடியும். விலைமனுக்கள் மூடப்பட்டதும் உடனடியாக அவை திறக்கப்படும். அவ்வேளையில், விண்ணப்பதாரர் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன், திறக்கப்படாமலேயே அவை திருப்பி அனுப்பப்படும்.
- ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள், விலைமனு படிவங்களை இலவசமாக வழங்கல் பிரிவில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
- மேலதிக விபரங்களை, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வழங்கல் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

**தொலைபேசி இலக்கம் : 011-2778610**
**நீடிப்பு 3142 அல்லது 011-2778624**

**தலைவர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தளபத்பிட்டிய, நுகேகொடை.**



**அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்**

அக்கொன, அங்கொட, இல. 2/482 இல் தற்போது வசிக்கும், கங்கானிகே மஹிந்த பெரேரா (இலங்கை தே.அ.அ. இலக்கம் 521633492V) ஆகிய நான், மாவில்மட, அளுத்கன்தொட்ட, வீதி, இல. 19/4ஐச் சேர்ந்த சிரங்க ஆரச்சிலாகே நலிந்த குமார மாகெஹெல்வல (தே.அ.அ.இல 773211833V) என்பவரை எனது அட்டோர்ணிதாரராக பெயர் குறிப்பிட்டு நியமனம் செய்த, கண்டி பகிரங்க நொத்தாரிசு A.W.M.R.D. ரத்வத்தவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2021.07.18ம் திகதியிடப்பட்ட அட்டோர்ணி தத்துவ இல. 3274ஐ இரத்துச் செய்து இல்லாதொழிப்பதாக இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கும் பொதுமக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கிறேன். அத்துடன் இதன் பிறகு சொல்லப்பட்ட அட்டோர்ணி தத்துவம் வெற்றும் வெறிதாக்கப்படுவதுடன் எந்த விளைவுகளும் மற்றும்/ அல்லது சட்டரீதியான தாக்கமும் இல்லை.

**கங்கானிகே மஹிந்த பெரேரா**
**2022 பெப்ரவரி 18ம் திகதி**

**கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணம் மற்றும் கட்டிட பொருட்கள் கைத்தொழில்கள் ஊக்குவித்தல் இராஜாங்க அமைச்சு**

## கட்டிடங்கள் திணைக்களம்

**விலைமனுக்களுக்கான அழைப்பு**

**மாத்தறை தொழில் அலுவலகத்திற்கான புனர்நிர்மாண வேலைகள் (II ஆம் கட்டம்)**
**[Contract No.: RPC/Zone6/02-C/2022]**

1. 2.2 மில்லியன் ரூபா ஆகுசெலவில் மதிப்பீடு செய்யப்பட்டதும் கீழே விபரிக்கப்பட்டதுமான 'மாத்தறை தொழில் அலுவலகத்திற்கான புனர்நிர்மாண வேலைகள் (II)' ஆம் கட்டத்திற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கட்டிடங்கள் திணைக்களத்தின் சார்பாக 6 ஆம் வலய பிராந்திய பெறுகை குழுவின் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.
   ஒப்பந்தக் காலமானது 63 நாட்களாகும்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும். இந்த பெறுகையின் கீழ் நிறைவேற்றப்படவுள்ள வேலையின் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பெறுமதியானது 50 மில். ரூபாவிற்கு குறைவாகவிருப்பதனால், பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமையானது 04/2016(iii) என்ற இலக்கத்தையும் 03/2020 என்ற திகதியையும் கொண்ட அரச நிதி சுற்றறிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு பிரயோகப்படுத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறும் தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் கட்டிட நிர்மாண துறையில் சி-8, சி-7, சி-6 அல்லது சி-5 ஆகிய தரங்களில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவு செய்யப்பட்டு இந்தப் பதிவானது விலைமனுக்களை மூடும் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். மேலும், பதிவானது ஒப்பந்தத்தை வழங்கும் திகதியன்றும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை காலி, மேல் டிக்சன் வீதி, 10 ஆம் இலக்கத்திலுள்ள கட்டிடங்கள் திணைக்கள 6 ஆம் வலய பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாமென்பதுடன் அதே முகவரியில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 4.00 மணி வரையும் விலைமனுக்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
   தொடர்பு இலக்கங்கள் பின்வருமாறு: தொலைபேசி: 091-2222583. தொலைநகல்: 091-2234838
5. 2022.02.18 ஆம் திகதியிலிருந்து 2022.03.04 ஆம் திகதி வரையும் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமொன்றாக ஆயிரத்து ஐநூறு ரூபாவை (1500 ரூபா) செலுத்திய பின்னர், காலி, மேல் டிக்சன் வீதி, 10 ஆம் இலக்கத்திலுள்ள கட்டிடங்கள் திணைக்கள 6 ஆம் வலயத்திற்கான பிரதான பொறியியலாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
6. 2022.03.07 ஆம் திகதியன்று மு.ப. 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு (வலயம் 6), பிரதான பொறியியலாளரின் அலுவலகம் (வலயம் 6), கட்டிடங்கள் திணைக்களம், இல. 10, மேல் டிக்சன் வீதி, காலி என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது அதே முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் காலி, மேல் டிக்சன் வீதி, 10 ஆம் இலக்கத்திலுள்ள கட்டிடங்கள் திணைக்கள 6 ஆம் வலயத்திற்கான பிரதான பொறியியலாளரின் அலுவலகத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
7. விலைமனுக்கள் அவைகளை பெற்றுக் கொள்ளும் திகதியிலிருந்து 63 நாட்கள் காலப்பகுதிக்கு அல்லது எந்தவொரு நீடிக்கப்பட்ட காலத்திற்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் பின்வருமாறு அமைந்துள்ள விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
   - விலைமனுக்கோரல் ஆவணத்தின் 09 ஆம் பிரிவில் அடக்கப்பட்டுள்ள படிவத்தில்.
   - கட்டிடங்களின் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் வழங்கப்பட்டிருத்தல்.
   - 30,000 ரூபா தொகைக்கானதாகவிருத்தல்.
   - 2022 ஜூன் 5 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல்.
   - அட்டவணையின் 16.0 ஆம் உபவாசகத்தில் சுட்டிக்காட்டியவாறு
   - முகவராண்மையொன்றினால் வழங்கப்பட்டிருத்தல்.

**பொறியியலாளர் திருமதி கே. லியனகே,**
**பணிப்பாளர் - நிர்மாணம் (3 ஆம் பிராந்தியம்).**
**கட்டிடங்கள் திணைக்களம்,**
**2 ஆம் மாடி, ''செத்சிரிபாய'', பத்தரமுல்ல.**
**www.buildings.gov.lk**

# கேள்வி அறிவித்தல்

## பெந்தோட்ட பிரதேச சபை

# கடை அறைகளை குத்தகைக்கு விடல்

2022 ஏப்ரல் 01 முதல் 2025 டிசம்பர் 31 வரையான காலத்திற்கு பெந்தோட்ட பிரதேச சபைக்கு சொந்தமான பெந்தோட்ட பொது சந்தைக் கட்டிடத்தில் கீழ்க்காணும் கடை அறைகளை குத்தகைக்கு விடுவதற்காக பொறியிடப்பட்ட விலைமனுக்களுடன் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**கேள்விப் படிவங்கள் விநியோகித்தல்** :- 2022.02.18 முதல் 2022.03.03 பி.ப. 3.00 வரை
**கேள்விகள் ஏற்றுக்கொள்ளல்** :- 2022.03.04 மு.ப. 10.00 வரை
**கேள்விகள் திறத்தல்** :- 2022.03.04 மு.ப. 10.30

| தொடர் இலக்கம் | கடை அறை விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப் படும் பிணை வைப்பு | குறைந்த பட்ச கேள்வி (மாதாந்தம்) |
|---|---|---|---|---|
| 01 | தரை மாடி கடை அறைகள் 01 | ரூ. 500.00 | ரூ. 2,500.00 | ரூ. 15,000/- |
| 02 | தரை மாடி கடை அறைகள் 02 | ரூ. 500.00 | ரூ. 2,500.00 | ரூ. 15,000/- |
| 03 | தரை மாடி கடை அறைகள் 03 | ரூ. 500.00 | ரூ. 2,500.00 | ரூ. 15,000/- |
| 04 | தரை மாடி கடை அறைகள் 04 | ரூ. 500.00 | ரூ. 2,500.00 | ரூ. 15,000/- |
| 05 | தரை மாடி கடை அறைகள் 05 | ரூ. 500.00 | ரூ. 2,500.00 | ரூ. 15,000/- |

01. மேற்படி அட்டவணையின் பிரகாரம் மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் மற்றும் மீளளிக்கப்படும் பிணை வைப்புத் தொகையை பெந்தோட்ட பிரதேச சபையின் வருமானப் பிரிவிற்கு செலுத்தி விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளலாம்.
02. கேள்வி விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளும் போது, விண்ணப்பதாரிகளால் தமது தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்து தமது ஆளடையாளத்தை உறுதி செய்தல் வேண்டும்.
03. பூர்த்தி செய்து பொறியிடப்பட்ட விண்ணப்பங்கள் இரு பிரதிகளுடன் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியை வேறுவேறு உறைகளில் நகல் பிரதியில் “நகல் பிரதி” எனக் குறிப்பிட்டு, இரு உறைகளையும் ஒரு உறையில் இட்டு பொறியிட்டு 2022.03.04 மு.ப. 10.00 இற்கு முன் கிடைக்குமாறு” தலைவர், பெந்தோட்ட பிரதேச சபை, பெந்தோட்ட“ என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது பெந்தோட்ட பிரதேச சபை ஹபுடுகல உப அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “பெந்தோட்ட பிரதேச சபைக்குச் சொந்தமான பொதுச்சந்தைக் கட்டிடத் தொகுதியில் கடை அறை இல. குத்தகைக்கு விடல் - 2022ம் ஆண்டு” என குறிப்பிடுதல் வேண்டும்.
04. சபைக்குச் சொந்தமான பொதுச்சந்தை கடை அறைகளில் இறைச்சி/ மீன் அல்லது தேநீர் கடை, மதுபானக் கடைகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட மாட்டாது.
05. கேள்வி விண்ணப்பங்களை கவனத்தில் கொள்ளும் போது பெந்தோட்ட பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் நிரந்தரமாக வசிக்கும் கேள்விதாரர்களுக்கு மட்டும் வழங்கப்படுவதுடன், அதனை உறுதி செய்வதற்காக கிராம அதிகாரி மூலம் வதிவை உறுதி செய்து அதன் சான்றிதழையும் கேள்வி விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
06. இங்கு குறிப்பிடப்படும் நிபந்தனைகளை மாற்றம் செய்தல் அல்லது இரத்துச் செய்தல், ஏதேனும் கேள்விகளை, ஏதேனும் பிரிவை அல்லது சகலதையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பெந்தோட்ட பிரதேச சபையின் கேள்விச் சபைக்கு உரியது.

*மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.*

**தொலைபேசி இல : 034-2275419, 034-3029530/ 034-3029535**
**பெந்தோட்ட பிரதேச சபை ஹபுடுகல உப அலுவலகத்தில்**
**2022.02.15**

**பி.டி. சரத் ஆனந்த**
**தலைவர்**
**பெந்தோட்ட, பிரதேச சபை**

# பெறுகை அறிவித்தல்

## முன்மொழிவுக்கான வேண்டுகோள் (RFP)

## விவசாய அமைச்சு

**(சேதனப் பசளை உற்பத்தி மேம்பாடு மற்றும் வழங்கல் ஒழுங்குபடுத்தல் மற்றும் நெல் மற்றும் தானியம், இயற்கை உணவு, மரக்கறி, பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கை மேம்பாடு, விதை உற்பத்தி மற்றும் உயர் தொழில் நுட்ப விவசாய இராஜாங்க அமைச்சு)**

# பெறுகை நிறுவனத்தின் பெயர்: வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி

**ஒப்பந்தத்தின் தலைப்பு மற்றும் ஒப்பந்த இல.**
**உரத்தை செறிவூட்டுவதற்கும் பொஸ்பேற் உரத்தைக் கரைப்பதற்கும் ஆர்வம் காட்டும் நிறுவனங்கள் அல்லது தனிநபர்கள் / பங்குதாரர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு முன்மொழிவு வேண்டுகோள்**

**விலைக்கோரல் இல. 2022/CFC/Maha/Eco/01**

விவசாய இராஜாங்க அமைச்சின் கீழ் செயற்படும் வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனியினால் தகைமை வாய்ந்த நிறுவனங்கள் / தனிநபர்கள் / பங்குதாரர்களிடமிருந்து தற்போது உள்ள மற்றும் நிறுவனத்தினால் கொள்வனவு செய்யப்படும் உரங்களின் செறிவை இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அலகு வரை (SLSI Standards) மேம்படுத்துதல் மற்றும் பொஸ்பேற் உரத்தைக் கரைப்பதன் மூலம் உயர்ந்த செறிவு தன்மை சகிதமான உரத்தை உற்பத்தி செய்வதற்காக 2022 மார்ச் மாதம் 10ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை நிதி மற்றும் தொழில்நுட்ப முன்மொழிவுகளுக்கான வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது.

02. வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனியினால் எதிர்பார்க்கப்படும் சேவையானது தற்போதுள்ள மற்றும் நிறுவனத்தின் தேவையின் பிரகாரம் கொள்வனவு செய்யப்படும் திண்ம / திரவ உரங்களின் செறிவை இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அலகு வரை (SLSI Standards) அல்லது அதற்கு அதிகமாக மேம்படுத்துதலாகும்.
03. இதில் ஆர்வம் காட்டும் விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகவல்களை வழங்குதல் வேண்டும்.
    I. தொழில்சார் சுயவிபரம் (Professional Profile)
    II. நிறுவனத்தின் சுயவிபரம் (Company Profile)
    III. உற்பத்தியின் சுயவிபரம் (Product Profile)
    IV. தேசிய உரச் செயலகத்தின் அனுமதிப்பத்திரம் (NFS)
    V. தேசிய உரச் செயலகத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட ஆய்வுகூட அறிக்கை
    VI. அதிகாரம் வாய்ந்த சர்வதேச ஆய்வுகூடங்களிலிருந்து பெற்றுக்கொண்ட அறிக்கை
    VII. பேடன்ட் அனுமதிப்பத்திரம்
    VIII. விலைக் கட்டமைப்பு (Price Structure)
    IX. உரங்களின் செறிவை மேம்படுத்துவதற்கு முன்மொழியப்படும் முறைகள்

    மேற்குறிபிடப்பட்ட தகவல்கள் சகிதம் தேவையானால் ஆவணங்களையும் வழங்குதல் வேண்டும்.
04. மேலதிக தகவல்களை பின்வரும் அதிகாரியுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

    **ஆர்.ஏ.பி. பெரேரா,**
    **பதில் பொது முகாமையாளர்,**
    **வ/ப இலங்கை உரக் கம்பனி,**
    **லக்பொஹொர ஸ்வர்ண ஜயந்தி மாவத்தை,**
    **ஹுணுப்பிட்டிய,**
    **வத்தளை.**

    **தொலைபேசி: 011 2930381/ கைப்பேசி: 077-3435408**
    **தொலைநகல்: 011-2930463**
    **மின்னஞ்சல்:** actgpm@lakpohora.lk
    **இணையதளம்:** www.lakpohora.lk

    **திருமதி சுரங்கனி போதிபால,**
    **முகாமையாளர் (சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனைகள்),**
    **தொலைபேசி: 011-2947762/ கைப்பேசி: 077-2069979**
    **தொலைநகல்: 011-2947760**
    **மின்னஞ்சல்:** mm@lakpohora.lk
    **இணையதளம்:** www.lakpohora.lk
05. மேற்குறிப்பிடப்பட்ட தகவல்களை உள்ளடக்கிய முன்மொழிவுகளை முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கடித உறையை உள்ளடக்கி அதன் இடதுபக்க மேல் மூலையில் ''நிறுவனங்கள் / தனிநபர்கள் / பங்குதாரர்களிடமிருந்தான முன்மொழிவுகளுக்கான வேண்டுகோள்'' எனக் குறிப்பிட்டு தலைவர், வ/ப இலங்கை உரக் கம்பனி, லக்பொஹொர ஸ்வர்ண ஜயந்தி மாவத்தை, ஹுணுப்பிட்டிய, வத்தளை எனும் முகவரிக்கு 2022 மார்ச் 10ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன் அனுப்புதல் வேண்டும்.
06. மூலப்பிரமாணங்களில் காட்டப்பட்டுள்ள தரம் மற்றும் செலவு அடிப்படை முறையின் (Quality and Cost Based (QCBS) method) பிரகாரம் ஆலோசனையாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**வ/ப இலங்கை உரக் கம்பனி,**
**பெறுகைப் பிரிவு,**
**லக்பொஹொர சுவர்ண ஜயந்தி மாவத்தை,**
**ஹுணுப்பிட்டிய, வத்தளை.**
**2022 பெப்ரவரி மாதம் 18ஆம் திகதி.**

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு

நீர்ப்பாசன அமைச்சு

# கேள்வி அறிவித்தல்

## (தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்)

## மொறகஹாகந்த களுகங்க அபிவிருத்தி செயற்றிட்டம்

பின்வரும் வேலைகளுக்காக 2022.03.07 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணி வரையும் கூன்கஹாவெல, மொறகஹாகந்த களுகங்க அபிவிருத்தி செயற்றிட்ட, செயற்றிட்ட பணிப்பாளரினால் நீர்ப்பாசன அமைச்சு, மொறகஹாகந்த - களுகங்க அபிவிருத்தி செயற்றிட்ட, செயற்றிட்ட பெறுகைக் குழுவின் சார்பாக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

| அம்ச இல. | விளக்கம் | ஒப்பந்த இலக்கம் | விலைமனுக்கோரல் ஆவணத்தின் ஒவ்வொரு தொகுதிக்குமான மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் |
|---|---|---|---|
| 01. | ரணமரே கிராமத்தை (ஹன்வெல்ல) (4.0 கி.மீ. நீளம்) பாதுகாப்பதற்காக யானைகளுக்கான மின்சார வேலியின் நிர்மாணம் (பெசேவ நீங்கலாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பெறுமதியானது 9.12 மில்லியன் என்பதுடன் ஒப்பந்தக் காலமானது 90.0 நாட்களாகும்) | MKDP/PD/CON/ NCB/2022/860 | 3,500 ரூபா |
| 02. | குருவெல கிராமத்தை (4.5 கி.மீ. நீளம்) பாதுகாப்பதற்காக யானைகளுக்கான மின்சார வேலியின் நிர்மாணம் (பெசேவ நீங்கலாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பெறுமதியானது 10.68 மில்லியன் என்பதுடன் ஒப்பந்தக் காலமானது 90.0 நாட்களாகும்) | MKDP/PD/CON/ NCB/2022/861 | 3,500 ரூபா |

உரித்தான துறையில் அனுபவத்துடன் வியாபார பதிவு பெற்ற விலைமனுதாரர்கள் விலைமனுக்கோரலுக்கான தகுதியை பெற்றுக் கொள்வர்.

2022.02.21 ஆம் திகதியிலிருந்து 2022.03.04 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் ஒவ்வொரு விலைமனுவிற்கும் ஒவ்வொரு தொகுதி விலைமனுக்கோரல் ஆவணத்திற்கும் மேலே வழங்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை செலுத்திய பின்னர், வேலை நாட்களில் செயற்றிட்ட பணிப்பாளர், மொறகஹாகந்த- களுகங்க அபிவிருத்தி செயற்றிட்டம், நீர்ப்பாசன அமைச்சு, கூன்கஹாவெல என்ற முகவரிக்கு கம்பனி/நிறுவன தலைப்புக் கடிதத்தில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றின் மூலம் வளமுள்ள விலைமனுதாரர்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தை பெற்றுக் கொள்ளலாம்.

2022.02.21 ஆம் திகதியிலிருந்து 2022.03.04 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் கூன்கஹாவெல, நீர்ப்பாசன அமைச்சு, மொறகஹகந்த-களுகங்க அபிவிருத்தி செயற்றிட்ட, செயற்றிட்ட பணிப்பாளரின் அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.

தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்த பெயர் மற்றும் இலக்கம் ஆகியவற்றை தெளிவாக குறிப்பிட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ள மூடும் நேரத்திற்கு முன்னராக கிடைக்கும் வகையில் செயற்றிட்ட பணிப்பாளர், மொறகஹாகந்த- களுகங்க அபிவிருத்தி செயற்றிட்டம், நீர்ப்பாசன அமைச்சு, கூன்கஹாவெல என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாகவே ஒப்படைக்கப்படல் வேண்டும். அதன் பின்னர் உடனடியாகவே விலைமனுக்கள் திறக்கப்படும். இரண்டிற்கு (2) மேற்படாத விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் கேள்விகளை திறக்கும் வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

மேலதிக விபரங்கட்கு, 066-2053612 அல்லது 066-2053607 ஆகிய தொலைபேசி இலக்கங்களூடாக கூன்கஹாவெல, நீர்ப்பாசன அமைச்சு, மொறகஹாகந்த-களுகங்க அபிவிருத்தி செயற்றிட்ட, செயற்றிட்ட பணிப்பாளருடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**மொறகஹாகந்த-களுகங்க அபிவிருத்தி செயற்றிட்டம்,**
**நீர்ப்பாசன அமைச்சு,**
**கூன்கஹாவெல.**
**(தொலைபேசி: 066-2053612)**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சு

## உள்ளூர் அபிவிருத்தி ஆதரவு செயற்றிட்டம் - செயற்றிட்டம் ID: P 163305

### கிழக்கு மாகாணம், திருகோணமலை

1. இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது உலக வங்கியிடமிருந்து உள்ளூர் அபிவிருத்தி ஆதரவு செயற்றிட்ட ஆகுசெலவிற்காக கடனொன்றைப் பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை கீழேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள பண்டங்களின் வழங்கல் பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசித்துள்ளது.
2. கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு பண்டங்களுக்கான வழங்கலுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து குச்சவெலி பிரதேச சபையின் சார்பாக உள்ளூர் அதிகாரசபை பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.
3. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
4. தகைமைத் தேவைப்படுத்தல்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தின் III ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்கள் விலைமனுக்கோரல் தரவுத் தாளில் வழங்கப்பட்டுள்ளன.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை உள்ளூர் அதிகாரசபையின் தலைவர்/செயலாளரிடமிருந்து பெற்று அதே இடத்தில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
6. 2022.02.18 ஆம் திகதியிலிருந்து 2022.03.10 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் உள்ளூர் அதிகாரசபைக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
7. 2022.03.11 ஆம் திகதியன்று பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள அட்டவணையில் காட்டியவாறு தம்பலகாமம் பிரதேச சபை, உள்ளூர் அதிகாரசபை பெறுகைக் குழுத் தலைவரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
8. விலைகளின் தயாரித்தல் அல்லது ஒப்படைத்தல் ஆகியவற்றில் விலைமனுதாரர்களுக்கேற்படும் எவ்வித ஆகுசெலவுகள் அல்லது செலவினங்களுக்கு பெறுகையாளர் பொறுப்பேற்க மாட்டார்.
9. கீழேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தகவலின் பிரகாரம் விலைமனுக்கள் விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| உள்ளூர் அதிகார சபையின் பெயர் | பண்டங்கள் மற்றும் வேலை இலக்கத்தின் விளக்கம் | பெறுகை அமைப்பின் பெயர் | விலைமனுக் கோரல் ஆவணத்தின் கொள்வனவு செய்யுமிடம் மற்றும் தொலைபேசி இல. | விலைமனு ஆவணத்தின் விலை (ரூபாவில்) | தேவைப்படும் விலைமனுப் பிணை | | விலைமனு செல்லுபடி யாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | விலைமனு உத்தர வாதம் (ரூபாவில்) | செல்லுபடி யாகும் காலப்பகுதி | |
| குச்சவெலி பிரதேச சபை | 100W LED வீதி விளக்குகளின் முழுத் தொகுதி மற்றும் சம்பந்தப்பட்ட பொருட்களை வழங்குதல் EP/TR/KUPS/LDSP/ PPTA-2/2022/G/01 | குச்சவெலி பிரதேச சபை | குச்சவெலி பிரதேச சபை 026-2252526 | 750.00 | 20,000.00 | 2022.05.26 வரை | 2022.04.28 வரை |
| குச்சவெலி பிரதேச சபை | திருகோணமலை குச்சவெலிக்கான கொம்போஸ்ட் தயாரிக்கும் இயந்திராதியை வழங்கி, நிறுவுதல் EP/TR/KUPS/LDSP/ PPTA-2/2022/G/05 | குச்சவெலி பிரதேச சபை | குச்சவெலி பிரதேச சபை 026-2252526 | 1,000.00 | 25,000.00 | 2022.05.26 வரை | 2022.04.28 வரை |

**தலைவர், உள்ளூர் அதிகாரசபை பெறுகைக் குழு,**
**குச்சவெலி பிரதேச சபை,**
**திருகோணமலை.**
**18.02.2022**

# அரசாங்க அறிவிப்பு

## 1999 ஆம் ஆண்டு 35 ஆம் இலக்க தாவர பாதுகாப்பு சட்டம்

## வெலிகம தென்னை இலைவாடல் நோய் ஒழிக்கப்பட்ட பகுதிகளை வெளியிடுதல்

1999 ஆம் ஆண்டு 35 ஆம் இலக்க தாவர பாதுகாப்பு சட்டத்தின் 12 ஆம் பிரிவினது 2 ஆம் உப பிரிவின் கீழ் 1623/11 இலக்கத்தை கொண்ட 2019.10.14 அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நோய்களைத் தடுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் ஒழித்தல் (தென்னை மற்றும் பனை இன தாவரங்கள்) ஆகிய ஒழுங்குமுறை விதி 11 இன் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட தகவலின் அடிப்படையில் வெலிகம தென்னை இலைவாடல் நோயானது மாத்தறை, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை நிர்வாக மாவட்டங்களிலுள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்படுகின்ற கிராம சேவையாளர் பிரிவுகளில் ஒழிக்கப்பட்டதாக நான் இதன் மூலம் பொதுமக்களுக்கு தெரிவிக்கின்றேன். மேற்கூறிய நோய் அந்த பகுதிகளில் இப்போது இல்லை.

**கலாநிதி எஸ். எச். எஸ். ஏ. டீ சில்வா**
**விவசாய பணிப்பாளர் நாயகம்**
**விவசாயத் திணைக்களம்**
**18 பெப்ரவாரி 2022**

### அட்டவணை

**காலி மாவட்டம்**

இமதூவ பிரதேச செயலகப் பிரிவு - பிட்டுவலஹெென, மாயாகடுவ

அக்மீமண பிரதேச செயலகப் பிரிவு - இஹலகொட கிழக்கு, இஹலகொட தெற்கு, பதுன்கொட, அம்பஹகவில, இஹலகொட குடியிருப்பு, அடம்பகஸ்முல்ல, பதுன்கொட குடியிருப்பு, அமல்கம, பின்னதூவ, அங்கொக்காவல, பின்னதூவ குடியிருப்பு, ஜம்புகெடிய, மானவில, கிரிந்தகொட, படதூவ, நியாகம, கனேகொட, அக்மீமண, கனேகொட மேற்கு, தல்கஸ்யாய, எத்திலிகொட வடக்கு, ஹாலிவெல, ஹினிதும் கொட, வெலிகெடிய, வலஹந்தூவ, அம்பலன்வத்த, கெரன்வில குடியிருப்பு, ஹியாரெ தெற்கு, ஹல்கஸ்முல்ல, கெடந்தொல, ஹியாரெ கிழக்கு, இஹல ஹியாரே, கதுருகஸ்ஹேன, வெலிஹேன, கந்தஹேன, ஹியாரெ வடக்கு, யக்கஹ

காலி கடவத்ஸதர பிரதேச செயலகப் பிரிவு - கும்பெல்வெல்ல வடக்கு, மஹமோதரை, கல்வடுகொட, களுவெல்லை, கோட்டை, ரிச்மன்ட் கந்த, கந்தெவத்த, சீனன் கொரடுவை, மினுவன்கொடை, படகம்வில, சங்கமித்தபுர, தலாபிட்டிய, பெட்டிகலவத்த, மகுளுவை, மாஇடிபே, தெத்துகொட தெற்கு, ஒஸனகொட, கும்பல்வெல வடக்கு, கொன்கஹ, வெலிவத்த, மடபாதல, பொகுணவத்த, தங்கெதர கிழக்கு, மடவலமுல்ல வடக்கு, தங்கெதர மேற்கு, உக்வத்த மேற்கு, போபே மேற்கு, போபே கிழக்கு, எத்திலிகொட தெற்கு, மஹஹபுகல, மிலிந்துவ, தெத்துகொட வடக்கு, வெலிபத, மாலிகஸ்பே, தடல்ல மேற்கு, தடல்ல கிழக்கு, வலவ்வத்த, சியம்பலாகஹகவத்த, கிங்தோட்ட மேற்கு, கிங்தோட்ட கிழக்கு, வெலிபிட்டிமோதர, குருந்து வத்த, பியதிகம, போபே வடக்கு, உக்வத்த கிழக்கு

**மாத்தறை மாவட்டம்**

கம்புறுபிட்டிய பிரதேச செயலக பிரிவு - பெரகம்முல்ல, ஈரியதொட

ஹக்மண பிரதேச செயலக பிரிவு - நறவெல்பிட்ட வடக்கு, நறவெல்பிட்ட தெற்கு, நறவெல்பிட்ட கிழக்கு, நறவெல்பிட்ட மேற்கு, எல்லெவெல கிழக்கு, எல்லெவெல மேற்கு

அதுரலிய பிரதேச செயலக பிரிவு - கொடபிட்டிய, ஹவுபே, வேனகம, தலஹகம கிழக்கு, தலஹகம மேற்கு, வெலிஹேன, தெமடபஸ்ஸ, திவிதுர, ஊறுமுத்த, ஊறுமுத்த தெற்கு, கெகெல்வல

அகுரெஸ்ஸ பிரதேச செயலக பிரிவு - கல்லல, இலுப்பெல்ல, போபிடிய, இரமுதுகொட, தியலபே, ஹிக்கொட, கெடம்வில, நாவல கொட, எல்லேவெல, கங்ஹெல, தெதியகல, திகனகேன, லேனம வடக்கு, ஹுலந்தாவ, அஸ்மகொட, பஹல மலிதூவ, இஹல மலிதூவ, கொகுகொட, எகலபே, விலகம, மாறம்ப தெற்கு, பேத்தபிடிய தெற்கு, மினிபோகொட, இதிகட்டுதெனிய, உதுபிட்டிய, மாரம்ப வடக்கு, லேனம தெற்கு, தொலமாவத

**ஹம்பாந்தோட்டை மாவட்டம்**

தங்காலை பிரதேச செயலகப் பிரிவு - குருபொகுண, ககதமோதர, நிதஹஸ்கம கிழக்கு, நிதஹஸ்கம மேற்கு, வெல்லோதய, ககந்தாவ, வாடிகல, வேகமுவ, கதிரகொட, அந்துபெலன, தாலுன்ன, வல்கேமெலிய, பாலதுடாவ, கட்டகடுவ வடக்கு, கட்டகடுவ தெற்கு, கோடய்பரகம, ரன்ன மேற்கு, ரன்ன கிழக்கு, ரெகவ கிழக்கு, ரெகவ மேற்கு, நெடொல்பிடிய தெற்கு, மெதகம, மாரகொல்லிய, மெதில்ல, பட்டியபொல கிழக்கு, பட்டியபொல தெற்கு, சியம்பலாகொட, வகேகொட, நலகம கிழக்கு, சுதர்சனகம, விதாரன்தெனிய வடக்கு, விதாரன்தெனிய தெற்கு,

ஓகேவெல பிரதேச செயலகப் பிரிவு - சுமிஹிரிகம, குருந்துவத்த, ராஜபுரகொட

வலஸ்முல்ல பிரதேச செயலகப் பிரிவு - உட ஜுலம்பிடிய, பல்லே ஜுலம்பிடிய, கல்வாடிய, ஜுலம்பிடிய, முருதவெல இகல, முருதவெல பகல, பகல ஓபட, கலஹிடிய வடக்கு, கலஹிடிய கிழக்கு, ஓமார மேற்கு, ஓமார கிழக்கு, கொஹொலான, எத்பிடிய, போவல வடக்கு, போவல மேற்கு, கோன்கரஹேன, வடக்கு ஹக்கிதகந்த, யகல்முல்ல, வெலதகொட, மாபிடகந்த, படகஸ்ஸ, பகலவத்த, எகொடபெத்த, கெரேதெனிய, அகலபட, வீதீ கந்த, நமனெலிய, உடகாகொட, கொரேவெல, மதுவகந்த, வத்தெஹேன்கொட, கலஹிடிய தெற்கு, போவல தெற்கு, சபுதந்திரிகந்த, தெஹிககேன, தலபத் கந்த, கந்துகல, விதாபொல, வராபிடிய, ரம்மல, ரதனிஆர, பாதேகம

BE BETTER INFORMED! News you can trust now free on your mobile phone.
Dinamina Daily News Thinakaran
Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
AVAILABLE AT
LAKE HOUSE



it's what you want
www.adz.lk
Hotline: 0112 429 369 | Email: adzsuo@gmail.com
PLACE YOUR AD ON ADZ MAGAZINE & GET FREE AD ON WEBSITE

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 பெப்ரவரி மாதம் 18ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.